T. 2033

T 2033

T. 2033

உ



# தேவி மான்மியம்

(மூலமும் உரையும்)

★

நூலாசிரியர்

**பொ. நல்லதம்பிப் பிள்ளை.**

★

உரையாசிரியர்

வித்துவான், **வே.ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர்**

பொருளுதவியாளர்

திரு. **நா. மகாலிங்கம்** அவர்கள் B.S.C., A.M.I.E., M.L.A,

சக்தி நிலையம் பொள்ளாச்சி.

ஜெய மாசி மகம்

உ

தேவி துணை

# தேவி மான்மியம்


பதிப்பாசிரியர்

வித்துவான்

**வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்**

**தலைமைத் தமிழாசிரியர்**

செங்குந்தர் உயர்நிலைப் பள்ளி, ஈரோடு.



பொள்ளாச்சி

A. B. T. Ltd., ஜெனரல் மானேஜராகிய

திருவாளர் **நா. மகாலிங்கம் B.S.C., A.M.I.E., M.L.A,**

அவர்கள் பொருளுதவி கொண்டு அச்சிடப் பெற்றது.

**1955]** **[விலை ரூ. 1—0—0**

# அட்டவணை

| | |
|---|---|
| சிறப்புரை | ii |
| முன்னுரை | v |
| கதைச் சுருக்கம் | xiii |
| பாயிரம் | 1 |
| மதுகைடவர்கள் வதை யுரைத்தது | 6 |
| மகிடாசுரன்சேனை வதை யுரைத்தது | 14 |
| மகிடாசுரன் வதை யுரைத்தது | 21 |
| தேவர்கள் தேவியைத் தோத்திரம் செய்தது | 25 |
| சும்பன் சுக்ரீவனைத் தூது விட்டதுரைத்தது | 30 |
| தூமிரக்கண்ணன் வதை யுரைத்தது | 37 |
| சண்டமுண்டர் வதை யுரைத்தது | 39 |
| இரத்த பீசன் வதை யுரைத்தது | 41 |
| நிசும்பன் வதை யுரைத்தது | 46 |
| சும்பன் வதை யுரைத்தது | 50 |
| தேவர்கள் நாராயணி தோத்திர முரைத்தது | 53 |
| தேவி தேவர்களுக்கு வரங்கொடுத்தது | 58 |
| தேவி சுரத வைசியர்களுக்கு வரங்கொடுத்தது | 62 |
| குறிப்புரை | 66 |

ஈரோடு நகரசபைத் தலைவரும், தமிழ் மண்டில அருள்நெறிக் கழகச் செயலாளரும், சென்னை ராஜ்ய ஆரம்பக் கல்விச் சீர்திருத்தக் குழுவின் அங்கத்தினரும், ஈரோடு கலைமகள் கல்வி நிலைய ஸ்தாபகரும், செங்குந்தர் உயர்நிலைப்பள்ளிப் புரவலருமான

## உயர்திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் B.A.L.T.

அவர்கள் வழங்கிய

# சிறப்புரை.

தேவி மான்மியத்தின் முதல் நூல் வடமொழியில் உள்ளது. தேவியை உபாசனை செய்பவர் அதனை விரும்பிப் படிப்பர். இதனைத் தென்மொழியிற் கவிதையுருவாக ஏட்டுச்சுவடியில் எழுதி வைத்தவர் பொ. நல்லதம்பிப்பிள்ளை அவர்கள். அவர் எழுதி வைத்திருந்த பழஞ்சுவடியைச் செப்பம் செய்து புதுக்கி உரைநடைச் சுருக்கமும் குறிப்புரையும் எழுதி வெளியிட்டவர் வித்துவான் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர். நூலாசிரியரும் பதிப்பாசிரியரும் செய்த முயற்சியின் பயனாகவே இந்நூல் இவ்வுருப் பெற்றது. கவிதையுருவில் தேவியின் வரலாறு கூறும் தமிழ் நூல் இதுவொன்றே. சக்தி தத்துவங்களை விவரித்துக்கூறும் 400 பாடல்கள் திருமந்திரம் நாலாந்திரத்தில் உள்ளன. ஆதிப்பரம்பொருளின் சக்தியே தேவி. உலகிற்கு ஆதாரமான சக்தியை வழிபடுவோர் நல்வாழ்வுறுவர். "ஆதாரம் சக்தியென்றே அருமறைகள் செப்பும்" "நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைத்தீர்ப்பு" என்பன பாரதியின் சித்தாந்தங்கள். உலகில் தீய சக்திகள் அதிகரித்துத் துன்பந்தரும் சமயத்தில் சித்சக்தி வெளிப்பட்டுத் துன்பம் துடைத்து இன்பம் நல்குவாள் என்பது இந்நாலினால் உணர்

ஒன்றுமில்லாதது ஆதலின் இச்சக்தியை முக்தியில் விருப்பமுடைய மேலான ஞானிகள் மாத்திரம் அறிந்து வழிபடுவர். இந்நிர்க்குணசக்தி மக்கள் உபாசனையில் வரும்பொழுது அவர்கள் அறிந்து வழிபடுவதற்குரிய குணமும் உருவமும் நாமமுமாகியவைகளைப் பெறுகின்றது. ஆதலின் அதனைச் சகுண சக்தியென்பர். இச்சக்தியை போகத்தில் விருப்பமுடைய அனைவரும் உபாசிப்பர். நிர்க்குணையைச் சண்டியென்றும் சகுணையை மகாகாளி மகாலட்சுமி மகா சரஸ்வதி என்றும் கூறுவர். இம்மூன்று சக்திகளும் தேவியின் முக்குணத் திருமேனிகளாம். தேவிமான்மியம் இம்மூன்று சக்திகளையும் பற்றி விரிவாகக் கூறுகின்றது.

மதுகைடவர்களை நாசம் செய்து பிரமனைக் காப்பாற்றுவதற்குத் திருமாலின் யோக நித்திரையிலிருந்து வெளிப்பட்ட தாமச குணப்பிரதானமுடைய சக்தியே மகா காளியாம். இவளது மகிமை தேவிமான்மியத்தின் முதலத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளது. தேவர்களைத் துன்புறுத்திய மகிஷன் என்னும் அசுரனைச் சங்கரிப்பதன்பொருட்டு இராசத குணப்பிரதானமுடையவளாய்ச் சகலதேவ சக்திகளின் சொரூபமாய்த் தோன்றியவள் மகாலட்சுமியாம். இத்தேவியின் மகிமை 2, 3, 4 அத்தியாயங்களிற் கூறப்பட்டுள்ளது. சும்ப நிசும்பர்களை அழிப்பதன்பொருட்டுப் பரமசிவனுடைய இடது பாகத்திற்குரிய பார்வதி தேவியின் திருவுருவத்திலிருந்து தோன்றியவள் மகா சரசுவதியாம். இவளது மகிமை 5-முதல் 11-வரையிலுமுள்ள அத்தியாயங்களிற் காண்க. மகாகாளி கார்மேகம் போன்ற கருநிறத்திருமேனியையும் பத்துத் திருக்கரங்களையுமுடையவள். இவளை உபாசனை செய்பவர்கள் உலகங்கள் எல்லாவற்றையும் வசப்படுத்துவார்கள். இவளே கிரியா சக்தி. மகாலட்சுமி அழகிய ஒளி வடிவமும் பதினெட்டுத் திருக்கரங்களுமுடையவள். இவளை உபாசனை செய்பவர்கள் எல்லாவுலகங்களுக்கும் தலைவர்களாகின்றார்கள். இவளை வழிபடுவதனால் எல்லாத் தெய்வங்

களும் மகிழ்ச்சியை யடைகின்றன. இவளே இச்சா சக்தி. மகா சரசுவதி சரத்காலத்துப் பூரணச் சந்திரனைப் போன்ற அழகிய வெண்ணிறத் திருமேனியையும் எட்டுக்கரங்களையு முடையவள். இவளை உபாசனை செய்பவர்கள் எல்லாவிதமான அறிவினையும் பெறுவார்கள். இவளே ஞானசக்தி. தேவி மகாத்மிய ரகசியம் என்னும் நூலில் இத்தேவியர்களைப் பற்றிய செய்திகள் நன்றாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இம் முக்குண சக்திகளுக்கும ஆதாரம் சண்டிகை என்னும் மூல சக்தியே. சண்டிகைக்கு மற்றும்பல அவதாரங்கள் உண்டு என்று இந்நூலின் 11 ஆம் அத்தியாயம் கூறுகின்றது அவை நந்தாதேவி, இரக்த தந்திகை சதாட்சி, பீமதேவி, பிராமரி என்னும் அவதாரங்களாம். மற்றும் உலகிலுள்ள எல்லாவிதமான சக்திகளும் சண்டிகையென்னும் ஆதி சக்தியினுள் அடங்குவனவேயாம். உலகிற்கு ஆதாரமாயுள்ள பிரகிருதி என்னும் மாயையும் இந்த ஆதி சக்தியால் இயங்குவதாகலின் அன்னைத் தேவியென்று இந்நூல் கூறும்.

"இவ்வுலகிலுள்ள சர்வபூதங்களிடத்தும் சக்தியில்லையாயின் அவை துச்சமென்று நிந்திக்கப்படும். சக்தியுடைய பொருளே எல்லோராலும் புகழ்ந்து ஏற்றுக்கொள்ளப் படும். வெல்லுதல், நடத்தல், உண்ணல், ஓடுதல் ஆகிய எல்லாவற்றிற்கும் சக்தி வேண்டும். எல்லாவற்றிலும் நிறைந்த சக்தியே பரப்பிரமமென்று இந்திராதி தேவர்களால் உபாசனை செய்யப்படுகின்றது" என்பது தேவீ பாகவதம். இதனால் மனிதன் சக்தியுடையவனாயிருக்க வேண்டும் என்பதும சக்தியை வேண்டினவன் சக்தியை யுபாசனைசெய்ய வேண்டும் என்பதும் புலனாகின்றதல்லவா. உலகில் புரட்சிகரமான மாறுபட்ட இயக்கங்கள் பல எரிமலைகள்போல் மேலும்மேலும் கிளம்பிக்கொண்டேயிருக் கின்றன. அவற்றால் வரும் பயம் கவலை துன்பம் ஆதியவை களைத் தாங்கிக்கொள்வதற்கும், அவற்றை வென்று நன்மைகளையடைவதற்கும் மனிதன் சக்தியுடைவனாக ஆக

வேண்டுமல்லவா! இக்கலியோ கல்மஷம் நிறைந்தது. அதனைப் போக்குபவள் தேவியே. ஆதலினால் அவளுக்குக் “கலிகல்மஷநாசினி” என்னும் பெயர் உண்டாயிற்று. அவளுக்கு அவித்தை வித்யை என்னும் இரண்டு வடிவங்கள் இந்நூலில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவித்தை வடிவத்தால் பந்தங்களையும் துன்பங்களையும் கொடுக்கின்றாள். வித்தை வடிவத்தால் பந்தங்களினின்றும் துன்பங்களினின்றும் விடுபடச்செய்து முத்தியில் சேர்க்கின்றாள். ஆதலினால் நாம் எவற்றிற்கும் அவளைச் சரணமடைதல் வேண்டும். “எந்தக் குலத்துக்குத் தேவி குலதெய்வமல்லவோ அந்தக் குலத்தில் பிறக்கவேண்டாம்” “தேவி மகாத்மியத்தைப் படிக்கவேண்டும் ..........இதில் சந்தோஷிப்பது போல் தேவி வேறெதிலும் சந்தோஷிப்பதில்லை” என்னும் பாகவத வசனங்கள் கண்டு அறிதற்குரியனவாம். கன்னி முதல் இமயம் வரையிலுமுள்ள இந்துக்கள் யாவரும் பகவத் கீதையை யடுத்துப் பாராயண நூலாகக் கொண்டிருப்பது தேவி மான்மியமே. தேவி மான்மியம் சித்தியைத் தருவதில் சிந்தாமணி போன்றது. கருதியதைத் தருவதில் கற்பகம் போன்றது. ஆதலின் தேவியை வழிபடுவோர் யாவரும் நவராத்திரிக் காலங்களிலும் சங்கடங்கள் தீரவேண்டி மற்றெல்லாக் காலங்களிலும் இதனைப் பாராயணம் செய்வர். இந்நூலின் பாராயணப்பயன் முழுவதும் இந்நூலின் பனிரண்டாம் அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. தேவியின் வரலாறும் மந்திரமும் தோத்திரமுமாக வமைந்துள்ளது இந்நூல். இந்நூலின் முதலத்தியாயத்திற் கூறியுள்ள மகாகாளியின் துதிகளும் ஐந்தாவது அத்தியாயத்திற் கூறியுள்ள மகாமாயையின் துதிகளும், நான்காமத்தியாயத்தில் கூறியுள்ள மகாலட்சுமியின் துதிகளும், பதினொன்றாம் அத்தியாயத்திற் கூறியுள்ள மகா சரசுவதியின் துதிகளும் மிகவும் சிறந்தவைகளாம். மலை மண்டிலத்தார் இந்நூலைத் தங்கள் வேதமாகக் கருதிப் பாராயணம் செய்து பயன்பெற்று வருகின்றனர். இந்நூலொன்றையே துணை

யாகக்கொண்டு ஓலைக்குடை யேந்திக் குடும்பத்துடன் யாதோரச்சமுமின்றி மலைப் பிரதேசத்தில் நெடும் பயணம் செல்லும் மலையாளிகளை இன்றும் காணலாம். இந்நூல் இருக்கும் வீடுகளில் தீமைகள் அணுகா. நன்மைகள் பெருகும்.

உலகமும் உலகிலுள்ள பொருள்களும் சித்சடம் என்னும் இரண்டினுள் அடங்கும். உயிர்ப்பொருள்கள் அனைத்தும் சித்து. உயிர்களின் உடம்பும் மனமும் மற்றும் உலகிலுள்ள பருமையும் நுண்மையுமாகிய பொருள்களும் சடமாம். சித்துசடம் என்னும் இருவகைப் பொருள்களிலும் சக்தி பாய்ந்து நிற்கின்றது. ஆதலின் அப்பொருள்கள் தமக்குரிய செயல்களைப் புரியும் ஆற்றல் பெறுகின்றன. தேவி சித் சக்தியாகவும் சட சக்தியாகவும் விளங்குவதைத் தேவி மான்மியம் நமக்கு நன்கு அறிவிக்கின்றது. உலகில் செயல்புரியும் சக்தியை அப்பொருள்களின் மூலம் உணர்ந்து சக்தி தேவியை வழிபட்டு அவள் மூலமாக அவள் பிரிவின்றிச் சார்ந்து நிற்கும் பரம்பொருளை நாம் அடைந்துய்தல் வேண்டும். இதுவே சக்தி வழிபாட்டின் முக்கியமான இரகசியமாம்.

இதன் முதல் நூல் வடமொழியில் உள்ளது. இதனைத் தமிழ் மொழியில் கவிதைகளாகச் செய்தவர் மலை மண்டலத்தைச் சார்ந்து விளங்கும், தக்கைமங்கலம் என்னும் ஊரில் வாழ்ந்த பொ. நல்லதம்பிப்பிள்ளை என்பவர் ஆவர். அவரது குமாரர் என்னுடன் நெடுநாள் ஈரோட்டில் தமிழாசிரியராக விருந்து தமிழ்ப்பணி புரிந்த ந. சிவபாதஇருதயப்பிள்ளையவர்கள் ஆவார்கள். அவரது வீட்டிலிருந்து இந்நூல் முழுவதும் ஒருவாறு எழுதிவைக்கப்பட்டிருந்த ஏட்டுச்சுவடி ஒன்று எனக்குக் கிடைத்தது. அது தேவியைப்பற்றிய தமிழ் நூலாதலின் அந்நூலின் மூலத்தைச் செப்பம் செய்தும், புதுக்கியும் விரிவுரை எழுதியும், தருமபுர ஆதீனத்திலிருந்து மாதந்தோறும் வெளி

வரும் ஞானசம்பந்தத்தில் வெளியிட்டேன். அந்நூல் முழுவதும் இப்பொழுது கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகலின் அந்நூல் முழுவதும் இப்பொழுது யாவருக்கும் எளிதாய் கிடைக்கும்படி அந்நூலின் மூலமும், நூற்பொருளின் சுருக்கமும், கடின பதங்களுக்குக் குறிப்புரையும் எழுதிப் பதிப்பித்துள்ளேன். இந்நூல் அச்சிடுவதற்கு வேண்டும் பொருள் முழுவதையும் மனம் உவந்து அளித்தவர் பொள்ளாச்சி A. B. T. Ltd., கம்பெனியின் ஜெனரல் மானேஜராகிய திருவாளர் நா. மகாலிங்கம B. Sc., A. M. I. E., M. L. A. அவர்கள் ஆவார்கள்.

அவரது கற்பகம் போன்ற அருமைத் தந்தையாராகிய **திரு. நாச்சிமுத்துக் கவுண்டரவர்கள்** தேவியின் அருள் நெறியினின்று பெருமுயற்சி செய்து, பெரும்பொருள் திரட்டிய பெருமைக்கு உரியவர். அம்மனின் ஆலயத் திருப்பணி, நாட்பூசை விழா முதலியவற்றில் பெரும் பொருளைச் செலவு செய்த பெருந்தகையாளர். தன்னுடன் பலரையும் அம்மனுடைய திருப்பணித்தொண்டில் ஈடுபடச் செய்து அன்னையின் அருளுக்கு உரியவராக்கிய உத்தமர். நாட்டுமக்களின் நலங்கருதிச் செய்தக்க செய்து வாழ்வாங்கு வாழ்ந்த வண்மையின் மிக்கார். பின்பு அன்னையின் அடிக்கமலங்களைச் சிந்தித்து தமது சத்திவிலாச மாளிகையின் அருகிலுள்ள காளிகோவிலின் பக்கத்தில் சமாதி கொண்டு வானிலுறையும் தெய்வங்களின் திருக்குழாம் புகுந்து தேவியின் திருவருள் விலாசத்தில் திளைத்து சிவமாம் தன்மைப் பெருவாழ்வு எய்தி மகிழும் திருவருட் செல்வர்.

தேவியினிடத்தில் அவர் வைத்திருந்த பேரன்பின் நினைவுமலராக தேவியை உபாசனை செய்ய விரும்பும் அன்பர்கள் பலருக்கும் பயன்தரும் பொருட்டு இத்தெய்வத் தமிழ் நூல் என்னால் வெளியிடப்படுகின்றது. இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளிவருதற்கு உதவி புரிந்த

அவரது அருமைப் புதல்வராகிய திரு. கவுண்டரவர்களுக்கு அன்னையின் திருவருளாலும், பெரியோர்களின் ஆசியினாலும் நீண்ட வாழ்நாளும், நிலையான நன்மக்கட் பேறு முதலியனவும் மேன்மேலும் உண்டாகுமாறு வேண்டுகிறேன்.

இந்நூலுக்குச் சிறப்புரை வழங்கியவர்கள் இறைத் தொண்டில் இறவாப் புகழுடையாரும் — இருமொழிக் கொண்டலாய்த் தமிழுக்கும் அறிவுக்கும் தன்னேரில்லாப் பணிபல புரிபவருமான ஈரோடு நகரத் தந்தை உயர்திரு எஸ். மீனாட்சிசுந்தர முதலியார் B. A. L. T. அவர்களுக்கு எனது அன்பு கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சன்மார்க்க மாகச் சமைதரு மார்க்கமும்
துன்மார்க்க மானவை எல்லாந் துரந்திடும்
நன்மார்க்கத் தேவரும் நன்னெறி யாவதுஞ்
சன்மார்க்கத் தேவியுஞ் சத்தியென் பாளே.

இங்ஙனம்,

வித்துவான், வே. ரா. தெய்வசிகாமணி,
7—3—55 தலைமைத் தமிழாசிரியன்,
செங்குந்தர் உயர்நிலைப் பள்ளி, ஈரோடு.

# பாராயணம்.

தேவிமான்மியத்தைப் பாராயணம் செய்வதில் இரண்டு முறையுண்டு. ஒன்று நூல் முழுவதையும் பாராயணம் செய்தலும் மற்றொன்று நாளுட் குறித்த காலங்களில் அவ்வத்தோத்திரங்களில் ஒன்றைப் பாராயணம் செய்தலுமாம். நூல் முழுவதையும் பாராயணம் செய்பவர் ஞாயிற்றுக்கிழமையில் முதலத்தியாயமும், திங்கட்கிழமையில் 2–3 அத்தியாயங்களும், செவ்வாய்க்கிழமையில் 4வது அத்தியாயமும், புதன்கிழமையில் 5, 6, 7, 8 அத்தியாயங்களும், வியாழக்கிழமை 9–10 அத்தியாயங்களும், வெள்ளிக்கிழமை 11வது அத்தியாயமும், சனிக்கிழமை 12-13வது அத்தியாயங்களும் பாராயணம் செய்தல் வேண்டும். புத்தகத்தைச் செவ்வலரி மலர் முதலிய செந்நிறப் பூக்கள் அல்லது மல்லிகை முதலிய வாசனைப் பூக்கள் தூவி 'மாதாவே" என்று தொடங்கும் தேவிதியானச் செய்யுளைச் சொல்லிக்கொண்டு பின்பு பாராயணம் தொடங்குதல் வேண்டும். கோவில் வீடு முதலிய தூய்மையான இடங்களில் காலை அல்லது மாலை நேரங்களில் பாராயணம் செய்தல் மிகவும் நல்லது.

உ

தேவி துணை.

# தேவி மான்யம்

## கதைச் சுருக்கம்.

### முதலத்தியாயம்.

மார்க்கண்டேயர் தேவியின் அருளினால் சாவர்ணிக மனுவாகத் தோன்றும் சுரத மன்னனுடைய வரலாற்றைச் சைமினி என்னும் முனிவருக்குக் கூறுவாராயினர்.

முன்பு விளங்கிய சுவாரோசிஷன் என்னும் இரண்டாவது மனுவின் ஆட்சிக்காலத்தில் சைத்திரன் என்னும் பெயருடைய அரசனது மரபில் சுரதன் என்னும் பெயருடைய மன்னவன் பிறந்து பூமி முழுவதையும் தனதாக ஆட்சி புரிந்துகொண்டிருந்தான். பின்பு அவன் பகையரசர்களால் தோற்கடிக்கப்பட்டுக் காட்டையடைந்து அங்குள்ள சுமேதசர் என்னும் முனிவரால் உபசரிக்கப்பெற்று அவரது ஆசிரமத்தில் தங்கிக் காட்டில் அங்குமிங்குமாய்ச் சஞ்சரித்துக்கொண்டிருந்தான்.

ஒருநாள் அரசன் தன்னுடைய தேசம் குடிமக்கள் முதலியவர்களைப்பற்றிய சிந்தனையுடையவனாய்க் கவலையில் ஆழ்ந்திருந்தான் அப்பொழுது வணிகனொருவன் கவலையில் ஆழ்ந்தவனாய் அரசன் பக்கத்தில் வந்தான். வணிகனுடைய முகவாட்டத்தைக் கண்ட அரசன் நீ யார்? காட்டிற்கு வந்த காரணமென்ன? உண்மையைச் சொல் என்றான். வணிகன் அரசனை நோக்கி நான் சமாதி என்னும் பெயருடையவன் பொருளாசையுடைய எனது மனைவிமைந்தர்கள் என்னுடைய பொருளைக் கவரவேண்டுமென்னும் எண்ணத்தினால் என்னை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டார்கள். ஆதலினால் இக்காட்டிற்கு வந்தேன். இக்காட்டிற்கு வந்தும் என்னிடம் அன்பு சிறிதுமில்லாத மனைவிமைந்தர் முதலியவருடைய சுகதுக்கங்களைத் தெரியாமல் வருந்துகிறேன் என்றான்.

அரசன் மிகுந்த ஆச்சரியமடைந்தவனாய்த் தன்னுடன் வணிகனையும் அழைத்துக்கொண்டுபோய்ச் சுமேதச முனிவருடைய ஆச்சிரமத்தையடைந்தான். பின்பு இருவரும் சுமேதச முனிவரை வணங்கினர். முனிவர் அவர்களை உபசரித்து அமர வைத்தார்.

அரசன் முனிவரை வணங்கிநின்று, தவச் செல்வத்தையுடையவரே, எனக்குப் பகைவர்கள் கவர்ந்துகொண்ட பொருள் முதலியவற்றினிடத்தும், இவ்வணிகனுக்குத் தன்னைத் துரத்திவிட்ட மனைவிமைந்தரிடத்தும் அபிமானம் உண்டாகின்றது;

எங்களுக்கு அறிவு இருந்தும் அறியாமையுடையவர்கள்போல் நாங்கள் அபிமானத்தால் இங்ஙனம் வருந்துவதற்குக் காரணமென்ன? எங்கள் அறியாமை நீங்கும்படி விடை சொல்லியருள வேண்டும் என்று வேண்டினான். முனிவர் அவ்விருவரையும் பார்த்து, அறிவு என்பது, பறவை மிருகம் முதலிய எல்லா உயிர்களுக்குமுண்டு. அது அவ்வுயிர்களிடத்தில் வெவ்வேறு விதமாயிருக்கும். அவைகளுக்கும் அபிமானம் உண்டு. பறவைகள் குஞ்சுகள் பறக்கும்வரையிலும்தான் அவைகளிடம் அபிமானமுடையவைகளாயிருக்கின்றன.

மனிதர்களோ தம் பிள்ளைகளிடம் பொருள்முதலிய உதவிகளை விரும்பி எப்பொழுதும் அபிமானமுடையவர்களாயிருக்கின்றார்கள். இங்ஙனம் அபிமானத்தையுண்டாக்குவது மாயையின் செயல். அந்த மாயை மிகவும் வலிமையுடையவள். அவள் மேலான ஞானிகளுடைய மனதையும் மோகமடையும்படி செய்கிறாள். விஷ்ணு மாயையாகிய அந்தத் தேவி ஞானசொரூபிணியாயிருப்பவள், முத்தி கொடுப்பவள், முத்தொழில் செய்பவள், நித்தியமானவள், வரம் கொடுப்பவள், அருள்வடிவினள். அவள் பெருமை சொல்லுதற்கரியது என்றனர்.

அரசன் மேலும் முனிவரை நோக்கி, அந்த மாயை யாவள்? அவளுடைய தோற்றம் உருவம் குணம் தொழில் முதலியவைகள் யாவை? இவைகளை விளங்க எங்களுக்குச் சொல்லவேண்டுமென்று வேண்டினான். முனிவர் அரச வைசியர்களைப் பார்த்து, அவள் அழிவில்லாதவள், எங்கும் நிறைந்தவள். உலக முழுவதையும்

உடம்பாகக்கொண்டவள். தேவர்களுக்கு அருள் செய்யும் பொருட்டுப் பலவித உருவங்களையெடுத்துக் கொண்டு வெளிப்படு வாள், அப்பொழுது அவளை உலகினர் பிறந்தாள் என்று சொல் லுவார்கள்.

முன்புண்டாகிய பிரளயத்தில் உலக முழுவதும் கடல் மய மாயிருந்த பொழுது திருமால் ஆதிசேடன்மீது யோக நித்திரையை யடைந்தார். அவருடைய காதுக்குறும்பியிலிருந்து மதுகைடவர் கள் என்னும் பெயருடைய இரண்டு அசுரர்கள் தோன்றித் திரு மாலின் உந்திக்கமலத்திலிருக்கும் பிரமதேவனைக் கொல்லப் போனார்கள். அப்பொழுது பிரமதேவர் நடுக்க மடைந்து திரு மாலைத் துயிலெழுப்ப நினைந்து அவரைத் தன்வசமாக்கிக் கொண்டிருக்கும் யோக நித்திரையாகிய மகாமாயையைக் குறித்துத் தோத்திரம் செய்தார். (35 முதல் 44. செய்யுட்கள் தோத்திரம்) உடனே தாமச குணவடிவமுடைய யோக நித்திரையென்னும் தேவி யானவள் திருமாலின் உடம்பிலிருந்து வெளிக்கிளம்பிப் பிரம தேவருக்குப் பிரத்தியட்சமானாள். யோக நித்திரையிலிருந்து எழுந்த திருமால் அவ்வசுரர்களுடன் பல வருடங்கள் போர்புரிந் தும் அவர்களை வெல்லமுடியாதவராயினார். பின்பு திருமால் அம் மாயையின் மோகன சக்தியால் மோகிக்கப்பட்ட அவ்வசுரர்கள் வேண்டியவாறே வரம் தந்து உபாயத்தால் அவர்களை நீரில்லாத இடமாகிய தன் மடியின்மீது வைத்துக் கொன்றருளினார்.

## 2-வது அத்தியாயம்.

முன்பு நிகழ்ந்த தேவாசுரம் எனப் பெயர் பெற்ற பெரும் போரில் இந்திரன் தோல்வியடைந்தான். மகிஷாசுரன் என்னும் அசுரன் இந்திரனுடைய அரசாட்சியைக் கைப்பற்றிக் கொண்டு தானே இந்திரனாக விளங்கினான். தேவர்கள் பிரமதேவரைத் தம்முடன் அழைத்துக்கொண்டு சிவனும் மாலும் இருக்குமிடம் சென்று மகிஷாசுரன் செய்யும் கொடுமைகளைக்கூறி அவனைக்கொன்று தங்களைக் காப்பாற்றும்படி வேண்டினார்கள். இதனைக் கேட்ட சிவன் மால் பிரமன் ஆகிய திரிமூர்த்திகளுக்கும் மற்றுமுள்ள தேவர்களுக்கும் பெருங்கோபமுண்டாயிற்று. இங்ஙனம் அவர் களுக்குண்டாகிய முகத்திலுள்ள கோபத்தீயிலிருந்து ஒவ்வொரு ஒளி வெளிக்கிளம்பிற்று. முடிவில் இவ்வொளிக் கூட்டங்களெல்

லாம் ஒன்ருய்த் திரண்டு ஓர் உக்கிரமாகிய பெண்ணுருவத்தை யடைந்தது. சிவன் மால் முதலிய தேவர்கள் சூலம் சக்கரம் முதலிய ஆயுதங்களையும் ஆடைகளையும் அணிகலன்களையும் அத் தேவிக்குக் கொடுத்தார்கள். அவற்றைப் பெற்று மகிழ்ச்சி யடைந்த தேவியானவள் அட்டகாசமென்னும் பெருஞ்சிரிப்பினைப் பேரொலியுண்டாகுமாறு செய்தாள்.

அதனைக் கேட்ட மகிஷன் தன் சேனைகளுடன் போர் செய்வதற்குத் தேவியிருக்குமிடத்தை யடைந்தான். மகிஷனுடைய சேனைத்தலைவர்களாகிய சிக்குரன் சாமரன் உதக்கிரன் மகாவனு அசிலோமன் பாட்களன் பிடாலன் முதலியோர் சேனைகளுடன் தேவியை எதிர்த்துப் போரிட்டார்கள். தேவி, அவர்கள் எல்லோரையும் அவர்கள் சேனைகளுடனே விரைவில் அழியுமாறு கொன்று விட்டாள்.

## 3-வது அத்தியாயம்.

தன் சேனைகள் படைத்தலைவர்களுடன் அழிந்ததைக் கண்ட மகிஷன் மிகுந்த கோபத்தால் சிவந்த கண்களையுடையவனுய் தனக்குரிய (மகிடம்) எருமை வடிவத்துடன் போருக்கு வந்து தேவியின் கணங்களில் சிலரையழித்தான். தேவி மகிடனைப் பாசத்தாற் கட்டவும் அவன் சிங்கம் புருடன் யானை என்னும் இவ் வடிவங்களில் வந்து தேவியோடு கடுஞ்சமர் செய்தான். தேவி அவற்றையெல்லாம் அழிக்கவும் மகிடன் தனக்கியல்பாயுள்ள எருமையுருவத்தில் வந்து தன் வலிய கொம்புகளினுல் மலைகளை யெடுத்துத் தேவியின்மீது செலுத்திக் கருச்சித்து நின்ருன். தேவி மதுவைப்பானம் செய்து அவன் முதுகின்மேல் குதித்து நின்று கொண்டு அவனுக்கு வலியுண்டாகும்படி மிதித்துச் சூலத்தினுல் அவனது தலையில் அடிக்கவும் அவனது எருமை முகத்திலிருந்து அசுரவுருவம் பாதி போர் செய்தற்கு வெளிப்பட்டது. அங்ஙனம் வெளிப்படவும் தேவி அவன் தலையை வெட்டிப் பூமியில் தள்ளினுள். தேவரும் முனிவரும் மகிழ்ந்து தோத்திரம் செய்தனர்.

## 4-வது அத்தியாயம்.

தேவி மகிடனைக் கொன்றதை எண்ணி இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் தேவியை வணங்கிச் செய்த தோத்

திரங்களைக் கேட்ட தேவி மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். (2 முதல் 30 வரையிலுமுள்ள செய்யுட்கள்) இங்ஙனம் துதிக்கப்பட்ட தேவி தேவர்களிடம் கருணை கொண்டு உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுப்பேன், கேளுங்கள் என்றாள். தேவர்கள் நாங்கள் நினைக்கும்பொழுது வந்து எங்களுடைய ஆபத்துக்களைத் தீர்ப்பதுடன் நாங்கள் செய்த இந்தத் தோத்திரங்களை நம்பிக்கையுடன் படிப்பவர்களுடைய துன்பங்களைப் போக்கி அவர்களுக்கு வேண்டிய செல்வம் ஞானம் ஆகியவைகளைக் கொடுத்தருளவேண்டுமென்று வரம் வேண்டினார்கள். தேவி அங்ஙனமே வரமருளி வானத்தில் மறைந்தருளினாள்.

5-வது அத்தியாயம்.

முன்பு ஒரு காலத்தில் சும்பன் நிசும்பன் என்னும் பெயருடைய இரண்டு அசுரர்கள் தோன்றிப் புட்கரத்தீவில் பிரமதேவனைக் குறித்துப் பலவாண்டுகளாகத் தவம் செய்து சிறந்த வரங்களைப் பெற்றார்கள். அவர்கள் இந்திரன் சூரியன் சந்திரன் குபேரன் அக்கினி யமன் வருணன் ஆகியவர்களுடைய அரசாட்சிகளைத் தமக்குரியதாக ஆக்கிக்கொண்டதோடு முனிவர்கள் வேள்வித்தீயிற் கொடுக்கும் தேவதைகளின் உணவாகிய அவிர்ப்பாகங்களையும் தமக்குரியதாக ஆக்கிக்கொண்டார்கள். தாம் கவர்ந்த தேவர்களின் பட்டணங்களைத் தம்முடைய சேவகர்களுக்கு ஆட்சிபுரியுமாறு கொடுத்தார்கள். இந்திரன் தனது நகரத்தை யிழந்து இந்திராணியுடனும் தேவர்களுடனும் அவரது மனைவிமார்களுடனும் மனிதவுருவங்கொண்டு பூமியில் பிச்சை வாங்கிப் பிழைத்தான், தேவர்கள் உடல்மெலிந்து சோர்வுற்றார்கள். இவ்வாறு பல யுகங்கள் கழியவும் தேவர்கள் முன்பொரு நாள் தேவி, "தேவர்களே நீங்கள் துன்பமடைந்த காலத்தில் என்னை நினையுங்கள் உங்களுக்கு உதவி செய்து உங்களைக் காப்பாற்றுவேன்," என்று வரம் கொடுத்திருந்ததை எண்ணிப் பிரமா முதலிய தேவர்களுடன் இமயமலையின் கட்சென்று தேவியைத் தோத்திரம் செய்தார்கள். (5-வது அத்தியாயம் 4 முதல் 19 வரையிலுமுள்ள செய்யுட்கள் மாயாதேவியின் தோத்திரங்கள்) தேவி வெளிப்பட்டுத் தேவர்களை நோக்கி, தேவி உம்மிடம் கருணை செய்தாள். அவள் பார்வதியின், சரீர கோசத்திலிருந்து தோன்றுவாள். அவள் சிவசக்தியாம். அவள் அசுரர்களை வென்று உங்களுக்கு அருள்

புரிவாள். அவளுக்குக் கௌசிகி என்னும் பெயர் வழங்கும் அவளிடமிருந்து பார்வதி கிருட்டிணையாய் (கரியநிறமுடைய வளாய்) தோன்றுவாள். அவளுக்குக் காலிகை (காளி) என்னும் பெயர் உண்டாகும். இதனையறியுங்கள் என்று கூறிவிட்டுத் தேவி இமயமலையின் கண் ஊசலில் ஆடியும் இசைப்பாடல்களைப்பாடியும் பதினாறு வயது நிரம்பப் பெறாத பருவமுடையவளாய்ச் சஞ்சரித்துக்கொண்டிருந்தாள். ஒருநாள் அங்கு வந்த சும்ப நிசும்பர்களது வேலைக்காரர்களான சண்டனும் முண்டனுமாகிய கொடியவர்கள் தேவியைக்கண்டு ஆச்சரியமடைந்தவர்களாய்த் தம் அரசனாகிய சும்பனிடம் சென்று இமயமலையின் கண் அழகியொருத்தியைப் பார்த்து வந்தோம் அவள் உனது அழகிற்குத்தகுந்தவள் எனப் புகழ்தலும் சும்பன் காமபரவசனாய்த் தன் தீரம் கெட்டுத் தன் பக்கத்திலிருந்த சுக்ரீவன் என்பவனை நோக்கி நீ இவர்கள் கூறிய பெண்ணிருக்குமிடத்தை யடைந்து அவர்களுக்குப் பிரியமான வார்த்தைகளை கூறி என்பால் அழைத்து வருவாய், எனக் கட்டளையிட்டான். சுக்ரீவன் இமயமலையின் கண் தேவியிருக்குமிடம் சென்று நான் சும்பனுடைய தூதன். அவன் ஆணையைப் பிரமன் முதலியவர்களும் மறுத்துரையார். அவன் தன்னையேனும் தன் தம்பியையேனும் நீ அவனிருக்குமிடம் வந்து மணம் செய்து கொண்டு தனது பெருஞ்செல்வத்தை அனுபவிக்கும்படி உன்னிடம் கூறுமாறு தெரிவித்தான் என்றான். அவன் கூறியவற்றைக் கேட்ட தேவி, புன்னகை புரிந்து முன்பு என் புன்மதியாலே என்னைப் போரில் வென்று எனது கருவத்தையடக்கியவனையே மணம் செய்து கொள்வதாகச் சபதம் செய்துவிட்டேன். ஆதலால் அவ்வீரர்கள் என்னிடம் வந்து என்னைப் போரில் வென்று மணம் செய்து கொள்ளட்டும். இதனைச் சும்பனிடம் தெரிவிப்பாய் என்றனள்.

## 6-வது அத்தியாயம்.

சுக்ரீவன் விரைந்து சென்று சும்பனிருக்குமிடமடைந்து தேவி கூறிய வுரைகளைத் தெரிவிக்கவும் சும்பன் மிகுந்த கோபமடைந்தவனாய்த் தூமிரக்கண்ணன் என்பவனைப்பார்த்து நீபோய் இமயமலையையடைந்து அங்குள்ள அழகியின் கூந்தலைப்பற்றி இழுத்துக்கொணருவாய் எனலும் தூமிரக்கண்ணன் தன் சேனைகளோடு சென்று தேவியிருக்குமிடத்தை யடைந்து நீ எம்மரசனை மணஞ்செய்து கொள்ள என்பின் வரமாட்டாயானால் உன்

கூந்தலைப்பற்றி இழுத்துச்செல்வேன் என்று தேவியின் சமீபத்தில் செல்லவும் தேவியின் உம்காரசப்தத்தால் அசுரன் சாம்பலானான். மற்ற அசுரர்களைத் தேவியின் வாகனமாகிய சிங்கம் அழித்தது. இதைக் கேட்டுக் கோபமடைந்த சும்பன் சண்டமுண்டர்களை நோக்கித் தேவியைக் கொணருமாறு கூறினான்.

## 7-வது அத்தியாயம்.

சண்ட முண்டர்கள் சேனைகள் சூழ பொன்மயமான இமய மலையுச்சியை அடைந்தனர். அங்கு தேவி சிங்கத்தின் மீது மகிழ்ச்சியுடன் வீற்றிருப்பதைக்கண்டு, அவளைப்பிடிக்க தேவியின் எதிரில் சென்றார்கள். அப்போது கோபத்தால் கருநிறமடைந்த தேவியின் முகத்திலுள்ள வளைந்த புருவத்தையுடைய நெற்றியிலிருந்து கருத்தநிறத்தினையுடைய காளிதோன்றி வெளிப்பட்டு அசுர சேனைகளை வாரி வாரி வாயில் போட்டு விழுங்கினாள். பின்பு எதிர்த்த சண்டமுண்டர்களுடைய தலையோடுகூடினமுண்டத்தை வெட்டி, கையில் எடுத்துக்கொண்டு தேவியின் முன்பு சென்று, நீயே சும்ப நிசும்பர்களைக் கொல்லவேண்டும் என்றாள். தேவி காளியை நோக்கி நீ சண்ட முண்டர்களைக் கொன்றதால் சாமுண்டி என்னும் பெயர் பெறுவாய் என்றனள்.

## 8-வது அத்தியாயம்.

சண்ட முண்டர்கள் சேனைகளுடன் அழிந்ததைக் கேள்வியுற்ற சும்பனனவன், மிகவும் கோபங்கொண்டு உதாயுதர் முதலிய அசுர வீரர் கூட்டங்களை போர் செய்வதற்கு வருமாறு கட்டளையிட்டு, தானும் எண்ணில்லாத படைகள் சூழ தேவியுடன் போர் புரிய இமயமலைச்சாரலை அடைந்தான். அப்பொழுது பிரமாணி, மகேசுவரி, குமாரி, வைணவி, வராகி, நரசிங்கி, இந்திராணி என்னும் ஏழு சக்திமார்களும், தேவிக்குச் சகாயமாக இருந்து போர்புரிவதற்கு போர்க்களத்தை யடைந்தார்கள். அவர்களுடன் வந்த ஈசானரைப்பார்த்து, நீ சும்ப நிசும்பர்களிடம் சென்று பொன்னுலகை இந்திரனுக்குக் கொடுத்தும், அவிர்ப் பாகங்களை தேவர்களே உண்ணுமாறு செய்தும், நீங்கள் பாதாளத்தை அடையவும் வேண்டும் என்று சொல்லும்படி சிவனை தூதனுப்பியபடியால் தேவிக்கு சிவதூதி என்னும் பெயர் உண்டாயிற்று. ஈசானர்

சொல்லிய வார்த்தைகளைக்கேட்ட சும்ப நிசும்பர்கள் மிகுந்த கோபமடைந்தவர்களாய் தேவியிருக்குமிடம் வந்து தேவியுடன் கடுஞ் சமர் புரிந்தனர். சிவதூதியும், காளியும், ஏழு மாதர்களும், அசுர சேனைகளை அழித்தார்கள். அசுரசேனைகள் அழிந்ததைக் கண்ட இரத்தபீசன் என்பவன் மிகுந்த கோபத்துடன் போருக்கு வந்தான் (இரத்தபீசன் உற்பத்திக்குக் காரணமான இரத்தத்தையுடையவன்) இந்திராணியானவள் வச்சிராயுதத்தை அவன்மேல் வீசி அவனது தலையை அறும்படி செய்தாள். அவன் உடம்பிலிருந்து பெருகிய இரத்தத்திலிருந்து எண்ணில்லாத அசுரர்கள் உண்டானார்கள். அந்த அசுரர்களுடனே சப்த மாதர்களும், காளியும் போர் செய்தனர். அப்பொழுது போர் செய்த அசுரர்களுடைய உடம்பிலிருந்து ஒழுகிய இரத்தத்தில் கணக்கில்லாத இரத்தபீசர்கள் உண்டாகி மாதர்கள் எண்மரையும் தண்டாயுதத்தினால் அடித்தார்கள். அப்போது தேவியானவள் சூலத்தினால் இரத்தபீசர்களுடைய உடல்களைப் பிளக்கவும், அவற்றிலிருந்து ஒழுகிய இரத்தத்தையெல்லாம் காளி தன் வாயினை எல்லா இடங்களிலும் விரித்துக் குடித்தனள். பிளக்கப்பட்ட இரத்தபீசர்களது உடலிலுள்ள இரத்தமெல்லாம் வற்றியபிறகு அவர்கள் பூமியில் வீழ்ந்தார்கள். தேவி தன் படைக்கலங்களினால் அவர்களைக் கொன்றாள்.

## 9-வது அத்தியாயம்

சும்ப நிசும்பர்கள் இரத்தபீசன் இறந்ததைக் கேட்டு கடுங் கோபம் கொண்டு நால்வகைச் சேனைகளுடன் சென்று தேவியுடன் விற்போர் புரிந்தார்கள். தேவியின் பாணத்தால் நிசும்பன் மயக்கமடைந்து பூமியில் விழுந்தான். அதனைக்கண்ட சும்பன் தன்னுடைய எட்டுக்கைகளிலும் பல படைக்கலங்களையேந்திக் கொண்டு தேவியுடன் போர் செய்வதற்கு வந்தான். தேவி சூலத்தால் அடிக்கவும் சும்பன் மயக்கத்துடன் பூமியில் வீழ்ந்தான். சும்பன் வீழவும் நிசும்பன் மயக்கத்தினின்றும் நீங்கி, எழுந்து, திரிசூலம் என்னும் ஆயுதத்தை ஏந்திக்கொண்டு வந்து, தேவியுடன் போர் செய்தான். தேவி, அதே திரிசூலத்தால் அடித்து அவன் மார்பைப் பிளந்தாள். நிசும்பனுடைய இருதயத்திலிருந்து மிகவும் வலிமையுடைய அசுரன் ஒருவன் தோன்றி தேவி! ஓடாதே! நில்! என்று சொல்லிக்கொண்டு போர் செய்வதற்கு வந்தான். தேவி அவனுடைய தலையை வாளினால் வெட்டிக் கொன்றாள்.

## 10-வது அத்தியாயம்.

தம்பியாகிய நிசும்பன் இறக்கவே சும்பன் மிகவும் கோபமடைந்தவனாய், தேவி முன்வந்து, என்னுடன் போர் செய் என்று பாணம், வாள், கேடயம் முதலிய ஆயுதங்களைக் கையில் கொண்டு தேவியுடன் கடும்போர் புரிந்தான். தேவி அவைகளையெல்லாம் அழித்தாள். சும்பன் தன் விரல் முடக்கிய கைகளினால் தேவியின் மார்பில் குத்தினான். தேவியும் சும்பனுடைய மார்பை விரல் விரித்த கைகளினால் அழுத்தி பூமியில் பதியும்படி செய்தாள். அவன் எழுந்திருந்து தேவியைத் தூக்கிக்கொண்டு வானத்தை யடைந்தான். இருவரும் வானத்தில் நெடுநேரம் மற்போர் செய்தார்கள். பின்பு தேவி சும்பனைப்பிடித்து மேலே சுழற்றிப் பூமியை யடையும்படி விரைவாகப் பூமியை நோக்கி எறிந்தாள். சும்பன் மிகவும் கோபங்கொண்டு தன் கைமுஷ்டியால் போர் செய்ய வந்தான். தேவி தனது சூலத்தினால் அவனது மார்பைப்பிளந்து பூமியில் புதையும்படி செய்தாள். சும்பன் உயிர்துறக்கவே, தேவர்களும்,முனிவர்களும் மகிழ்ந்தனர். உலகில் நல்ல நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன.

## 11-வது அத்தியாயம்.

கொடியவனாகியசும் பன் தேவியால் கொல்லப்பட்டுப் பூமியில் வீழவும் அதனைக்கண்ட இந்திரன் அக்கினி முதலாகிய தேவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்து கூட்டமாகக்கூடி நின்று தேவியைத் தோத்திரம் செய்தார்கள். அந்த மகிமை பொருந்திய தோத்திரங்களில் சில சொல்லுவேன். (11-வது அத்தியாயம் 2 முதல் 23 வரையிலுமுள்ள செய்யுட்கள் மகாசரசுவதி என்னும் நாராயணியின் தோத்திரங்கள்) தேவர்கள் செய்த தோத்திரங்களைக் கேட்டு மகிழ்ந்த தேவி, தேவர்களே! உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்கள்,தருவேன் என்றனள். தேவர்கள், பகைவர்கள் எங்களை எதிர்த்துப் போர் செய்ய வருகின்ற காலத்தில் மனதிற் கருணை கொண்டு எங்களைக் காப்பாற்ற எண்ணுவாய் என்றனர். தேவி, தேவர்களே! அசுரர்கள் பூமியில் தோன்றி உங்களுக்குத் துன்பம் செய்ய வருவார்கள். அப்பொழுதெல்லாம் நான் நந்தா தேவி, ரத்ததந்திகை, சாகம்பரி, பீமதேவி. பிராமரி முதலிய அவதாரங்களைக்கொண்டு அவ்வசுரர்களைக் கொன்று உங்களையும் முனிவர்களையும் பாதுகாத்தருள்வேன் என்றனள்.

## 12-வது அத்தியாயம்.

தேவி தேவர்களை நோக்கிப் பின்னும் சொல்லுவாள் இந்தத் தோத்திரங்களைச் சொல்லி என்னைத் துதி செய்கிறவர்கள் நீங்குத வில்லாத சுகங்களை யடைவார்கள். நான் மதுகைடவர் மகிடாசுரன் சும்பநிசும்பர் ஆகிய துட்டர்களைக் கொன்ற இக்கதையை மாதந்தோறும் வருகின்ற அட்டமி நவமி சதுர்த்தசி என்னும் திதிகளில் படிப்பவர் கேட்பவர் யாவரும் பாவங்களையும் ஆபத்துக்களையும் அடையமாட்டார்கள். வறுமையையடையார். காயசித்தியையடைவர். சோரர்களாலும் அரசர்களாலும் எற்படும் பீடைகளும் அனல் நீர் ஆயுதம் முதலியவற்றால் ஏற்படும் ஆபத்துக்களும் உண்டாகாதபடி பாதுகாப்பேன். மகாமாரியினால் உண்டாகும் அம்மை முதலிய உபத்திரவங்களும் தெய்வம் உடம்பு விலங்கு முதலிய பிராணிகள் ஆகியவற்றைப் பற்றி வருகின்ற மூன்று விதமான தீங்குகளும் அணுகமாட்டா. எனது கோவிலில் படித்தால் செல்வமுண்டாகும். கெட்ட கனவுகள் நல்ல கனவாகும் வீட்டிற் படித்தால் அங்கு நான் நீங்காதிருப்பேன். அறிஞர்கள் வருடமொருமுறை வரும் நவராத்திரி பூசையில் படிப்பர். அவர்கள் பயத்தையடையமாட்டார்கள். அவர்கள் குலம் தழைக்கும் இதனைப் படிப்பதால் கிரகபீடை மகாமாரியின் உபத்திரவம் துஷ்டர்களுடைய வலிமை பேய் முதலியவைகளினால் ஏற்படும் துன்பம் ஆகியவைகள் பலங்குன்றி யழிந்துபோகும். பகைவர் பயமணுகாது. நல்ல புத்தியைக் கொடுக்கும். பாலர்களுடையும் சீற்றமிக்க பீடைகள் தீரும். நண்பர்களுக்குள் பகையேற்பட்டால் பகையைப் போக்கி சிநேகத்தையுண்டாக்கும். எனது தோத்திரங்களைப் படிப்பதால் எல்லாவிதமான துன்பங்களும் நீங்கும் என்று அருளிச் செய்து மறைந்தருளினாள். தேவர்கள் தேவருலகத்தையடைந்து அசுரபயமின்றித்தத்தம் அதிகாரங்களைப் புரிந்து அவிர்ப்பாகத்தையுண்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தவர்களாய்த் தேவி பாதங்களை யிரவும் பகலும் போற்றி வழிபட்டு வாழ்ந்தனர்.

தேவியை மலர் தூபம் சந்தன முதலிய வாசனைப் பொருள்களைக் கொண்டு பூசித்துப் பத்தியுடனே துதிப்பவர்களுக்குத் தேவி மகிழ்ந்து நல்ல புத்திரர்கள், நல்லபுத்தி, செல்வம், வித்தை, ஆயுள் முதலியவைகளைத் தந்தருள்வாள் என்று சுமேதச முனிவர் மேலும் சொல்வார்.

## 13-வது அத்தியாயம்.

அரசனே உனக்கும் வணிகனுக்கும் மற்றுமுள்ள விவேக முடைய எல்லோருக்கும் மோகத்தைக் கொடுப்பவளும் அதனைக் கெடுப்பவளும் விஷ்ணுமாயையாகிய அத்தேவியேயாவாள். அவளைச் சரணமடையுங்கள். அவள் தன்னை வழிபடுவோருக்குச் சுவர்க்க முத்திகளைத் தந்தருளுவாள் என்று சொல்லவும் அரசனும் வணிகனும் முனிவரை வணங்கிவிடை பெற்றுக்கொண்டு ஒரு ஆற்றின் மணல் மேட்டையடைந்து தேவியின் திருவுருவத்தை மண்ணினாற்செய்து மலர் விளக்கு தூபம் முதலியவைகளால் பூசித்து, தேவி சூக்தமென்னும் மந்திரம் செபித்து குறைந்த ஆகாரமுடையவர்களாய் தேவியைத் தியானித்து இரத்தத்தினால் பலி ஈந்து தேவியை வணங்கித் தோத்திரம் செய்தார்கள். இவ்வாறு மூன்றுவருட காலம் தவநிலையில் நின்று வழிபடவும் தேவி கருணை கூர்ந்து வெளிப்பட்டு அரசன் வேண்டியபடியே அவனுக்கு அவனுடைய இராச்சியம் இப்பிறவியிலும் மறுபிறவியிலும் கிடைக்குமாறு அருள் புரிந்தாள். தன்னை வணங்கி வரம் வேண்டியவை சியனைப்பார்த்து நீ விரும்பியபடியே சிவஞானத்தையும் என் சரணத்திற் பொருந்திய பத்தியையும் அழியாதிருக்கும்படி தந்தேன். முடிவில் முத்தியையும் தருவேன் என்றாள். மேலும் அரசனைப்பார்த்து அரசனே நீ இப்பொழுதே அரசர்களை வென்று எல்லா நிலங்களுக்கும் நீயொருவனே அரசனாக விளங்குவாய். பின்வரும் பிறப்பில் சூரியனுடைய மனைவியாகிய சாவர்ணை என்பவளின் வயிற்றில் சாவர்ணிகமனுவாய்ப் பிறந்து இந்தப் பூமியை யாள்வாய் என்று வரம் அருளி தேவி மறைந்தனள்.

இருவரும் தேவியைப் புகழ்ந்து தோத்திரம் செய்து மகிழ்ந்தார்கள். தேவியின் அருளால் சுரதமன்னன் பகைவர்களை வென்று தனது இராச்சியங்களைப் பெற்று ஆட்சிபுரிந்தான். வைசியன் ஒழிதலில்லாத சிவஞானத்தையடைந்தான். சுரத மன்னன் சாவர்ணி என்னும் பெயருடைய எட்டாவது மனுவாகி விளங்குவான் என்று மார்க்கண்டேய முனிவர் சைமினி முனிவருக்குரைத்தருளினார்.

முற்றும்.

தேவி துணை.

உ

தேவி துணை.

# தேவி மான்மியம்.

## பாயிரம்

## கடவுள் வாழ்த்து.

### காப்பு.

பூவி மான்மிய மும்புக ழுற்றிடு
நாவி மான்மிய முந்நணு மம்மையாந்
தேவி மான்மியஞ் செந்தமி ழாற்சொலச்
சேவி மான்மியத் தெய்வக்க ளிற்றையே 1

### சிவபெருமான்

பூமேவு சதுர்முகனும் பொறிமேவு திருவுரனும் பொலியுமஞ்சம்
மாமேவு பூதார வடிவுடைய ராயுத்த மாங்கள் காலுந்
தோமேவு முளத்தினராய்த் திருவிடீண் டொளிர்தூம
[கேது வெற்பாம்
தூமேவு திருவுருவச் சிவபெருமான் பொற்கமலத்
[துணைத்தாள் போற்றி 2

### உமாதேவியார்

திருவ ளித்திடும் பொழுதினிற் செழும்பவ ளத்தி
னுருவ மாகிமெய்க் கலையுத விடும்பொழு தொளிர்சுப்
பிரமெய் தாங்கியே பகைவரைப் பிளந்திடுஞ் செவ்வி
கருமை பெற்றவள் சரணமே சரணெனக் கண்டாம் 3

### விநாயகர் துதி

அத்தி மாமுகத் தவுணர்கோன் றனையட வதனத்
தத்தி தன்னையே யொசித்தடி யவர்க்கருள் புரிந்தும்
அத்தி செய்பவன் பொருளுமா யம்புயத் தவன்பா
லத்தி யான்றுதி கரியினை யன்பொடு பணிவாம் 4

## சுப்பிரமணியர் துதி

ஞானயோ கியருள நண்ணு மாப்பொருள்
தானவர் குலமறுக் தமரர் தம்பிணி
யூனம தாக்கியே யொளிருஞ் சத்திசேர்
மானவேண் மலரடி மனத்து ளுன்னுவாம் 5

## தட்சிணாமூர்த்தி

நீளுறு மாணிய நீந்து தற்கொணாக்
கோளுறும் பவக்கடல் குளிக்கு மாந்தர்கள்
வாளரா மானுமா ணவத்திண் வல்லிவிட்
டாளுற வருள்குரு வத்தற் போற்றுவாம் 6

## மகாவிஷ்ணு துதி

உலகெலாம் பூத்திடு முந்தி யானெழிற்
புலவர்கட் கமுதருள் புரிந்த புங்கவன்
வலகய வாறகருள் வரதன் மாப்பினை
தலைவன விருகழ ருழ்ந்து போற்றுவாம் 7

## இலக்குமி

துன்புறும் வறுமையர் தொலைவி லாவுளத்
தன்பொடு போற்றவன் னவர்க்கு நீங்கிடா
நன்பொருட் செல்வமீந் தருளு நாயகி
யென்பொருட் டிரங்குமா தாவை யேத்துவாம் 8

## சரஸ்வதியம்மை

பாலென வொளிர்படி வத்தள் பங்கயன்
ருனுவிற் றிகழனை யடியன் சாற்றுமிந்
நூலினுக் குரையொடு பொருளு நுண்ணிய
வேனுற வளித்திட விறைஞ்சி யேத்தினேன் 9

## திருநந்தி தேவர்

சீருறு சங்கர னருளிற் றீதிலா
வேருறு முருவுபெற் றெண்கொள் காப்பமை
நாருறு கணமுத னந்தி தேவனார்
வாருறு கழலடி மனத்து ளுன்னுவாம் 10

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

காழியிற் பிறந்தெழிற் கடத்தின் ஞானப்பா
லூழியின் முதல்வியா லுதவப் பெற்றிவண்
வாழுறு மாந்தர்க ளுய்ய வண்டமிழ்ப்
பாழிமா மறைபகர் பரனைப் போற்றுவாம் 11

## திருநாவுக்கரசு நாயனார்

வையமீச் சமயங்கண் முழுது மானதத்
தையற வுணர்ந்தபின் னந்தி வண்ணனார்
மெய்யுறு சைவமே மேன்மை யென்றருள்
செய்திடு மரசர்தாள் சென்னி சேர்த்துவாம் 12

## சுந்தரமூர்த்தி நாயனார்

கோவண வுடையராட் கொள்ள வுன்னியே
யாவணங் காட்டவன் னவரைப் பித்தநீ
போவென மொழிந்திடும் பொற்பு மேவிய
நாவல ரடியிணை நயந்து போற்றுவாம் 13

## மாணிக்கவாசக சுவாமிகள்

கூடலி னரிக்குழூக் குற்ற மற்றொளி
நாடன்மா வாயுற வழைத்து மண்ணுளோர்
ஆடிய திருவடி யடைய வாசகம்
பாடிய பிரானடி பணிந்து போற்றுவாம் 14

## சண்டேசர்மற்றை நாயன்மாரும்

ஒளிர்புளினத் தயிர்ப்பரம சிவக்குறியி னுருகிரத் தளம்
[பொருது
வெளிறறிவாற் றுதைபதத் துப்பரிசித் திடவெகுண்டு
[வெண்மை யாகி
மிளிருறுதண் ணத்தினாற் றுமித்தருளுநஞ் சண்டேசர்
[விரைத்தாள் போற்றிக்
குளிருளத்துச் சிவனடிசேர் திருத்தொண்டர் பதமிதயங்
[கொண்டு வாழ்வாம் 15

## மார்க்கண்டேயர் துதி

சம்புதன் றிருவடித் தாமரைத் துணை
யன்பொடு பூசைசெய் தந்த கன்றனை
வன்பினால் வென்றமார்க் கண்டன் மாக்கழ
னப்பிநெஞ் சேநினை நமனை வெல்லவே 16

## அவையடக்கம்

எத்தகைய கதையுரைப்ப மூங்கையரும் விரும்பினரே
[லெழிலார் வெண்மை
புத்தகமும் படிகமணி குண்டிகையுந் தரித்து வெள்ளைப்
[பூவின் மேய
வித்தகியை யொருகாற்றஞ் சித்தமிசை முன்னினர்வித்
[தாரஞ் சொல்வி
னுத்தமிதன் புகழ்தனையே யுரைப்பேற்கென்
[குறையுளதிவ் வுலகி னம்மா 17
தோமறுநற் கவிப்புகழை விரும்பியிவண் கூர்மையில்யான்
[றொடங்கும் வண்ணம்
ஊமையர்கண் மொழிந்திடவும் வாமனர்க ளத்தமதை
[யுயர்த்தித் தாரு
மீமிசைவாழ் பலம்பறிக்க விரும்பியுமே ளனமடையும்
[விதமே போலாம்
யாமனைதன் பெரும்புகழா தலினெனினை மெனவறிஞர்
[நயப்ப ரன்றே 18

குசைநுனி மதியர்பாற் கொளுங்க வித்திறம்
வசையுறு மஞ்ஞைபான் மருவத் தக்கதோ
விசையமார் பரிதிவெங் கரம்விளக்கமி
னிசியினி லுறுமென நிகழ்த்த லாவதோ 19

பாயிரம் முற்றிற்று

---

## தேவி தியானம்

மாதாவே யேற்குமது கைடவரை வீட்டினளே மகிடற்
[காய்ந்த
வேதாதி கலையதித வித்தகியே தூமிரக்கண் வீரன் சண்டன்
றீதாரு முண்டனிரத் தப்பீச னிசும்பசும்பர்ச் செகுத்த தேவி
கோதாரும் பவங்கணத்திற் குமைத்திடவே நின்பாதங்
[கும்பிட் டேனல் 1

## நூல் வரலாறு

ஒளிசேர் மதியங் கங்கைபுனைந் துமையோ டுறையு மான்பாத
மளியோ டுளத்தி னினைந்தமரு மருண்மார்க் கண்டே யன்கமலக்
குளிரங் கிரியைக் சைமினியாங் குலவு முனிவன் பணிந்தெழுந்து
மிளிருந் தேவி மான்மியமும் விமலச் சாவர் ணியின்பவமும் 2

என்றன் சித்தங் களிகூற விசைப்பா யெனலுங் கூற்றுதைத்த
குன்ற வில்லி சரணமுடன் குலவுந் தேவி பதமிதய
மொன்ற யோகத் திருந்தருளா லுயருந் தேவி மான்மியமும்
மன்ற வுலகிற் பொலிமனுவின் பவமு மார்க்கண்
டேயனுரைப்பான் 3

நூல் வரலாறு முற்றிற்று.

---

# நூல்.

## முதலாவது மது கைடவர்கள்வதையுரைத்த அத்தியாயம்

சாவர்ணி தரணிசூற வென்னுமெட் டாம னுத்தான்
றேவிதன் னனுபா வத்தாற் றிகழுமா பாக னாவான்
பாவமிலனையான் றோற்றம் விரிவுடன் பகரு மென்பா
லோவற வுணர்வா யென்ன வுவப்புட னுரைக்க லுற்றான் 1

திகழும் பூருவஞ் சுவாரோ சிடமெனு மந்தரத்தில்
இகழறுஞ் சைத்ரவம்ச மெழிலுறு மரசன் றோன்றிப்
புகழொடு நாமந்தா னுஞ் சுரதனாய்ப் புனைந்து பூவைத்
துகடவிர்த் தாண்டான் றந்தை யவுரச சுதரைப்போல 2

அவ்வேலைக் கோலா வித்து வம்சியா மரிக ளோடு
யிவ்வேந்தன் பொருது தோற்றா னிவன்வசுந் தரைகண் முற்றுந்
தெவ்வேந்தர் கொள்ளத் தானுந் தீனனாய்த் தனது தேசந்
தவ்வறு மகிப னானான் சாருவ பௌம னாவான் 3

வலியுடைக் கலர்களாகு மமைச்சர்கள் வலியி லாத
நலனுறு மரசன் பண்டா ரத்தொடு பலமு நச்சிப்
பலங்கொடு கவர்ந்தார் பூமி பாலனா மாசி ழந்தோன்
இலகுறும் புரத்திற் றானே யிடருழந் திருக்குஞ் செவ்வி 4

குரகத வெரிங்மேற் கொண்டு கோவொரு வன்றான் வேட்டை
வரையடை ககன மாட மதித்தனன் போன்று சென்றான்
ஒருபன சாலைச் சாந்த முற்றமா முனிவர் சீடர்
மருவுறுஞ் சுமேத சென்னும் மறையவர் வரியற் கண்டான் 5

அந்தண னங்கி ரிக்கண ன்பொடு வணங்கி நிற்பச்
சிந்தையி னுவந்து மன்னைச் சற்கார முனிவன் செய்யக்
கொந்தவிழ் முளரி யங்கு மிங்குமாய்க் குலவி யோடி
நந்தின சிலகா லம்பின் மமத்துவ மனத்தி னண்ண 6

வரம்பெறு மெனபு ரத்தின் முன்னமென் மரபி னோர்கள்
வரம்பறு தருமத் தோடு மகிழ்ந்தர சிருந்தார் யானும்
தரம்பிற ரின்றி யிவ்வா னியந்தனைப் புரந்தே னிக்காற்
கரம்பொரு கினைக ராமவ் வமைச்சர்கள் கவர்ந்தார் மாதோ 7

அன்னவர் குடிகண் மற்று மறத்தொடு மாள்கின் றாரோ
கின்னமே விளைக்கின் றாரோ கேடுறு தயைய ரானோர்
கொன்னுறு மிரண்டு பாந்தான் றரியலர் கொண்டா ரன்னம்
பன்னுறு குளகு மென்போ லாரதற் குதவும் பண்பர் 8

அயர்விலென் வழிந டக்கு மனகபைஞ் ஞீலொட் டார்பின்
றுயரொடு நடக்குஞ் செவ்வி தோற்றிய தந்தே வென்னும்
செயிர்று சாயை சூனு படியிலென் செய்வ ரென்னும்
குயினுறு மணிமாடங்க ளெவ்வண மிருக்குங் கொல்லோ 9

அரம்பையர்ச் சேத்து மாயோ ரவனுறை தன்மை யெற்றோ
உரம்பெறு மமைச்ச ரென்று முத்தம வியயஞ் செய்யார்
நிரம்பிய கோச மெல்லா நித்தமுங் குறையு மென்றே
அரந்தையுற் றரச னங்க ணமர்ந்திடு மமைய மன்னோ 10

## வேறு

எட்டியர் குலனுதி யெழில்கொள் சிந்தையன்
நட்டமன் னவனெதிர் நண்ண நோக்கிநீ
கட்டமிக் கானனங் கருகிக் கானனம்
பட்டதென் னெடும்பகர் சரத பாலனே 11

எனமகி பதியுரை யியம்பக் கேட்டவன்
வினதனுப் பிரணய விடைகொ டுக்குமாற்
புனிதனே சமாதியாம் பெயர்பொ ருந்தினேன்
றனிகர்தங் குலத்துதி தவறி லூருசன் 12

பொருணசைப் பொருளொடு முரிமைப் பொற்பினோர்
நிரசிக்க நிரசியாய் நின்க ணுற்றனன்
பார்பொரு மவர்சுக மசுகம் பற்றுளோர்
விரவுறு மின்பதுன் பறிவு மேவிலேன் 13

யானளித் திடுஞ்சுதர் சீலரோவன்றித்
தானவ சீலரோ வென்னுந் தன்மையும்
மாநிலத் துணர்ந்திலன் மன்ன வன்னதாற்
றீனனா யுற்றனன் சிறிய னென்றனன் 14

தூயனும் வைசியன் கீரைச் சோத்திர
மாயனா யுரைசெய்வா னத்த னுத்தராம்
சேயிலா ளிற்றனி சேர்ந்த நீயவர்
நேயமுற் றயர்ந்தமை நெடிய சித்திரம் 15

இவ்வுரை யரசர்கோ னியம்ப வைசியன்
அவ்விடை யியம்புவ னமல வென்னுள
முவ்வுவ மின்னினை வுளது சத்தியம்
எவ்வமுந் திடமின்மை யிரண்டுந் தோற்றுமால் 16

அளியறு மனைவியர் சுதர்கள்பா லன்பு
நளிர்கட லெனப்பொலி வெய்து நாயக
ஒளிர்குண மில்லுற வினரி லொண்ணயம்
விளைவது மறிகிலேன் வேந்த வென்றனன் 17

தலைவனுங் கொடையனுந் தம்மி னின்னணம்
பலபகர்ந் தச்சுமே தசுவெ னப்படும்
நலனுறு முனிபத மிறைஞ்சி நற்றுதி
குலவுறக் கூறியே கும்பிட் டாரரோ 18

அன்னவே லையின்முனி யகம கிழ்ச்சியா
யின்னலற் றிடவவ ணெய்தி னோர்தமை
நன்முறை சற்கரித் திருத்த நண்பினாற்
சொன்னயக் கதைபல சொற்று வைகினார் 19

அமையமங் கதுதனி லரசன் றூபதன்
கமையுறு நீரசக் கழல்வ ழுத்தியே
அமைவிலா வல்லகண் டங்க ளற்றிட
உமைபதி சேத்தவற் கோதன் மேயினான் 20

## வேறு

பகவ ஞகித் தவநிதியாம் பரமா மஞ்ச நின்னுடனே
யிகலி லின்ப மெய்திடயா னிசைக்கும் விண்ணப் பம்முளதாற்
புகர்சேர் கொடிய பிருத்தியர்கள், பொற்பண் டாரம் பத்தனமுந்
தகவே கைக்கொண் டென்னையுமே தள்ளி விட்டா ரப்பதகர் 21

ஈர மற்ற வகப்புரையோ ரிடஞ்சேர் பொருட்பாற் பினும்பாசம்
ஈரு மமதை யெற்குவளர்ந் திடுமோ லன்றி யிவன்ருனும்
சீரிற் சுதராற் றள்ளுற்றுஞ் சிநேக மவர்பா லெய்திடுமோ
னேரிற் கிருக முடலாதி தன்னின் மமதை நெஞ்சுடையான் 22

இன்ன வுகையி லிருவர்களு மின்னற் கடல்வாய் முழுகியளி
தன்னும் பார மடைவதற்குச் சோங்கு காண துழல்கின்றேம்
மன்மா பாத ஞானமுற்று மகத்தின் மூட மருவலெவன்
இன்ன விருத்தி யறியாமை கெடவே விடையீந்
தருண்முனியே 23

எனக்குப் பாலன் மொழிகேளா வெழிலார் கருணைமெய்ம்முனிவன்
றனக்குப் பால ரென நினைந்து தயையோ டவர்க்குச் சாற்றுவனல்
நினைக்கிற் சருவ பிராணிகட்கு முண்டு ஞான நிகழ்விடயத்
தினிக்கும் விடயந் தானுமிவண் வெவ்வே ருகி யிலங்கிடுமால் 24

சிலசந் துக்கள் பகலந்தஞ் சிலவே நிசியி லந்தமதாம்
சிலசந் துக்க ணிசிபகலுஞ் சேரு மந்தஞ் செறியுயிர்கள்
துலிய திருட்டி யுடையனவாந் துலங்கு மிவற்றுண் மானுடர்கள்
இலகும் பிரம ஞானமில ரிசைமோ கஞ்சேர் ஞானிகளே 25

ககங்கண் மாக்க ளாதிகட்குங் கழறப் படுமால் வீயண்டம்
உகந்த னிடையே யளித்துமிக வுதர வெரியாற் றளர்வெய்தி
யகந்தா னுறவே சதனத்தி லணைத்தே கருவை யுயிர்த்தவழி
யிகந்தே துண்டத் திரைகொணர்ந்தே யூட்டிப் போடித்
திடுநாளும் 26

பறவை பயிலு மளவுமவை பாலித் தன்பா யிவ்வுலகி
லுறவா யிருக்கு மானுடரோ வுரிய பொருளாற் பொருளாகி
செறியு முதவி மரித்தெனதாஞ் சுழிசேர் மோகக் குழிச்சேர்வர்
உறையுஞ் சமுசா ரத்திதிசெய் மாயை வலியா லெனவுணர்மின் 27

விபுதர்க் கிறையோ கத்தனந்தர் மேவு மாயா தேவியெனத்
தபுவிற் றீர்ந்தாண் மான்மியந்தான் சாற்றின் மிகவு மற்புதமாம்
வபுசிற் சிறந்த வுலகபதி மாயை மைந்தாற் சேதனரே
குபுத ராகி மோகமெனுங் குரைசேர் கடலின் மூழ்கினரால் 28

வித்தை வடிவா மவண் மாயை விளங்கும் பத்தி யுடையோர்க்கே
முத்தி யளிக்குந் திண்ணமதாய் மூன்று தொழிலு மியற்றிடுமால்
சுத்த சருவேச் சுவரேசு வரியே பரமை சொல்ல வித்தை
முத்தர் புகழ்நித் தியைவரதை கருணை யாமுன் மொழிமாயை 29

என்ன முனிவன் மொழிந்திடலு மிறைவன் பின்னு முறை செய்வான்
சொன்ன தாமோ தரன்மோகத் துயிலா மாயை தான்யாவள்
மன்னு பவமெங் ஙனமாமற் றெவணின் றுதித்தாண் மாரூபந்
துன்னு பிரபா வங்கன்மந் துகடீர் முனிவ வருளென்றூர் 30

பூபா லன்கீர் கடிந்தவன்கேட் டுவந்து பின்னும் புகன்றிடுவான்
கோபா லன்மா யாதேவி தோற்ற முருவங் குணமாதி
கோபா லநிற்கும் பின்னவற்குங் குறைவின் றூகக் கூறுவல்யான்
பூபா லாதி யிமையவரு மனையாள் பெருமை போதமுறூர் 31

அனையவ ளழிவி லாதா ளகிலமு நிறைந்தா ளண்டத்
தனுவுடை யம்மை தேவர் தங்களுக் கருள்வான் றேன்றில்
இனையதொல் லுலகு தோற்ற மியம்பிடு முன்ன மோர்கால்
வனமய மாயிற் றன்றே மண்ணொடு விண்ணு மெல்லாம் 32

அன்னவ சங்க மங்கண் டைந்தலோ ரதிபன் றானும்
பன்னக சயன னாகி யறிதுயிற் பண்ணுங் காலை
கன்னகட் டத்தி னின்றுங் கடோரவிக் கியாத னாகி
மன்னினன் மதுவி னோடு கைடவ னென்ப மாதோ 33

தானவ ரிதலை நீர சத்துறை விரிஞ்சன் றன்னை
யீனமார் கோளி ழைக்க வெய்தலு மிதய மொன்றாய்
வானவ சிரேட்டன் றானும் மாதவன் றுயிலை நோக்கி
ஞானமார் துதிமி குந்த நலன்பெறக் கிளத்த லுற்றான் 34

*யோகநித் திரையா நீயே யுலகருட் சத்தி யாகி
லோகபா லிப்பும் வீக்கு முடையளே போற்றி லோகந்
தேகத்திற் பரிப்பாய் போற்றி சாந்தியுஞ் சாவித் ரீயும்
மோகந்தீர் வேத மாதா வாகிய முதல்வி போற்றி 35

பந்தமுத் திகளு நல்கித் திரிகுணப் பகுதி யாகி
விந்தையீ சுவரி மேலாம் வித்தையு மானாய் போற்றி
சந்தமாச் சுருதி மேதை மிருதியாந் தாயே போற்றி
அந்தரி கடற்பி றந்தாள் புத்திநா னானாய் போற்றி 36

மாண்பக வதியே லோக வன்னையே யுவமை யில்லாய்
எண்சுவா கைப்பே ரோடு மெழிலுறு சுவதை யானாய்
காணகி லேச்சு ரீயே கருதுயி ரெழுத்துரூபி
சேணுறு சுதையி னோடு வடட்காரந் தேவி நீயே 37

அக்கரை யழிவி லாதா யருத்தமாத் திரையா மம்மே
சொக்குறு புலுதத் தோடு நெடில் குறிற் சொரூப முள்ளாய்
மிக்குறும் பரையே மேலாம் விழுப்பொருட் பரமை யானாய்
துக்கமின் மௌன ரூபி சொலும்பர மேச்சுரீயே 38

புவனையின் பீச மானாய் புவனத்தின் மயமு மானாய்
உவமையின் றோங்கு கின்ற மாமாயை யுருவ மானாய்
அவனியா தியவ ளித்து மழித்திடு முருவ மானாய்
நவமின்மா மோகந் தேவி யாசுரி நீயே நங்காய் 39

சத்துட னசத்தா மெல்லாப் பொருளுரு வலிசா ரம்மே
வித்தக வரனுமாலும் வேதனு மனந்தர் மேவ
உத்தமி செலுத்து கின்றா யோதுமெவ் வணுவு நின்னை
யித்தலை யொழித்துண் டோசொல் லெவர்நினைப் புகழ
வல்லார் 40

காளராத் திரியு மாராத் திரியுமோ கங்க லக்குங்
காளராத் திரியு மானாய் போற்றிகாத் திடுநற் சத்தி
யாளுறு புட்டி காந்தி யடைந்திடுந் துட்டி புத்தி
கோளில முத்தி யாகிக் குலவுறு மம்மை போற்றி 41

கட்கினி யானாய் போற்றி கருதுகூ லினியே போற்றி
தெட்டசக் கிரிணி கோரை சிறந்தசங் கினியே போற்றி
அட்டிடுங் கதினி போற்றி யழிவில்சா பினியே போற்றி
முட்டுறு முசுண்டி வாளி பரிகஞ்சேர் முதல்வி போற்றி 42

சவுமியை போற்றி கோர ரூபியே போற்றி சீர்சால்
உவமமில் காமி யாங்க வுத்தமி போற்றி விண்டு
கவனமால் விடையான் யானுன் காருணி யத்தாற் றோற்றும்
பவமுடை யேங்க ளன்றோ பராபரை நின்றாள் போற்றி 43

நின்றிரி நீரா தாரங் கொண்டிந்த நிலங்க ளாதி
தொன்றுதொட் டளித்த ளித்துத் தொலைப்பதும் யாங்க ளம்மே
வன்றிறல் படைத்த நின்றன் மான்மிய மேவர் கூற
நன்றிற லுடையர் லோக நாயகி போற்றி யென்றான் 44

இத்துதி நவின்ற பின்ன ரிறைவியை வணங்கிச் சொல்வான்
மத்தனா மதுவி னோடு கைடவன் மறங்கொ ணெஞ்சன்
குத்திர னென்னைக் கோறல் குறித்தனை கின்றான் மோக
மித்தலை யிவர்க்கு நல்கி யெழுப்புதி யிறையை யம்மே 45

பின்னரி தனக்கு மிந்தப் பேதையர் தமைவ தைக்க
முன்னநீ யருளுவாயா லெனவயன் மொழிந்து போற்ற
நன்னர்செய் தாம சீயு நயந்தருள் புரிந்து மாயன்
றன்னுகோ முகமே நாசி தோளித யம்மு ரத்தில் 46

விரைவினிற் றோன்றி வேறாய் மேவினள் பிரம னுந்தான்
கருணைவா ரிதியைக் கண்டு களித்தனன் கமலக் கண்ணன்
உரகமார் துயிலை யோவி யுணர்ந்தெழுந் தருளிக் கஞ்சன்
உருவுணக் கோப ராகி யுற்றதா னவரைக் கண்டான் 47

ஆகவம் வாகு தன்னாற் றொடங்கியை யாயி ரந்தான்
போகவே வற்ச ரங்கள் புகலுமம் மாயை தன்னான்
மோகரா யிருவர் தாமு முராரியை நோக்கி யெம்பா
னீகவர் வரத்தை யென்றார் நெடியனு மதற்கு நேர்ந்தான் 48

துட்டா நீவி ரென்ருற் ருலேவுறும் வாத்தை யிங்ங
னிட்டமா யளிப்பீ ரென்ன வியலும்வஞ் சிதரா மன்னேர்
கட்டமே நீங்க நெஞ்சிற் கைதவ முன்னி யோடைப்
பட்டபங் கயக்கண் ணனைப் பார்த்தவ ரியம்ப லுற்ருர் 49

மிடனுடை நின்னல் யாங்கண் முடிந்திடின் மேன்மை
யுற்ரேரும், படருமிந் நிலத்தி னீரம் பரந்துள திவண்டான்
கொல்லேல், சுடர்விடு திகிரி யாய்நீ யென்றலுஞ் சோதி
நேர்ந்து, நெடியதன் சகன மேலா வவர்சிர நிலேக்க
வைத்தான் 50

நடப்பரிப் பதங்கர் கோடி நண்ணினர்க் கடுத்த நேமிச்
சுடர்ப்படை யதனுற் றுண்டஞ் செய்தனன் சுபர்ணவாகன்
கடப்பருந் துன்ப நீங்கிக் கமலசம் பவனுமின்ப
மடக்கரி தாகித் தாசா ருகனடி வணங்கி நின்ருன் 51

அத்திதி மைந்தர் மேத மதுகொண் டேயவனி தன்னேச்
சித்தசன் சனகன் செய்யச் செய்யமே தினியென் ருேர்பேர்
இத்தரை மருவிற் றம்ம விவ்வணந் தேவி தோற்றம்
உத்தமி பிரபா வங்க ளுளவின்னு முரைப்பக் கேண்மின் 52

நிருபவை சியரே யென்ன நெடுமுனி நிகழ்த்தக் கேளா
வுருவமேற் புளக முற்ரு ரோடினுர் தேவி நாமம்
உருகன்பி னேடு சொல்லி யுற்றன ராதி சர்க்கம்
சுரர்மொழிப் படியே யானுந் தமிழினுற் ருெகுத்தேன்
மன்னே 53

முதலாவது அத்தியாயம் முற்றிற்று

* பாட்டு 35 முதல் 53 முடிய உள்ளவை நாடோறும் பாராயணஞ் செய்தற் குரியன

# இரண்டாவது
# மகிடாசுரன் சேனைவதையுரைத்த அத்தியாயம்

### வேறு

தேவா சுரமாம் பெருஞாட்புச் சென்ற போது தோன்றிய தாம், ஓவா துகளர் சதச்சமைதா னுடன்று பொருதே யிமையவருந், தேவா திபனுந் தோற்றிடவே சிறந்த மகிடன் சுரர்க்கெல்லாம், பூவார் தருநீ ழலிலுறையும் புருகூ தக்கோ வாகியுற்முன் 1

அன்ன வேலை யண்டர்குழா மயன்பாற் சென்று குறைகூறி, முன்னர் நடத்திப் பின்னடந்து முருகன் றனையீன் றருள் கருணை, யன்ன வத்தை யெனதுயிரின் றுணையை யமல சித்துருவைப், பன்ன கேசத் தளிமக்கண் படையான் றனையு மஞ்சலித்தார். 2

அனையோர் சைரி பத்து முகன் சேட்டை யனைத்து மறைகு வராற், புனைமா முடியிந் திரன்வன்னி பாசிபாசி பொரு மனிலன், றனையார் பரித்தே ரெல்லைமதி முதல்வா னவர்தம் புரங்தொழில்க, டனையு மடக்க வவர்நாகந் தன்னை விட்டுப் புவியடைந்தார். 3

மக்க ளென்ன வசலைதனின் மன்னு துன்ப மொடுங்கிரிவா ரிக்கின் னத்தைக் களைவதற்கோ ரிடமே யின்றி யெய்தின மாற், செக்கர் வானம் பூவைநிகர் தேவி ரவனைத் தொலைப்ப தற்குத், தக்க மதிசெய் தெமைப்புரக்கத் தாழ்க்க லீரென் றடிபணிந்தார். 4

தேவர் மொழிகேட் டெம்பெருமான் சிதன் றனைவன் பெருங்கோபம், மேவப் புகுடிக் குடிலமுக மிளிருங் கோரத் தேசசுறப், பூவுற் பவத்தோன் றண்டத்தும் போந்த மற்றைத் தேவர் கின்றும், ஆவிர்ப் பவித்த தேசுகளு மமைந்தொன் றாகக் கூடியவால் 5

ஒளியின் புஞ்சங் கலந்தொன்றா யுர்வி வேணி நிறைந்ததனால்
வெளிசே ரருணக் குறும்பொறைபோன் மிளிர்ந்து கடையங்
கியிற்கோரம், அளைஇ யகில கருபங்க ளான்று மங்கை
யுருநண்ணிக், களிதே வர்கட மிதய முறக் கண்மு னின்றாள்
கருணையொடும் 6

சங்க ரன்றன் பேரொளியாற் றயங்கு வதனம் பொலி
வெய்தப், பங்க யக்கண் ணரியொளியால் வாகு பங்க
யன்கரத்தாற், றுங்கப் பாத மசலையொளி சொல்லு நிதம்பஞ்
சௌரியத்தாற், பொங்கு குயங்கள் யாமியத்தாற் கேச
பாரம் பொருந்தினளால் 7

புருகூ தன்றன் பொற்கரத்தாற் பொலியு நசுப்பு
வாருணத்தா, லருளா ரூரு சங்கையுற வொளியி
னொளியாற் பதவிரல்க, ளருளா ரத்தாங் குலிகளெலாம்
வசுக்கள் கரத்தா லானுடைய, தெருளார் தோழன்
றேசொளியா னுசி தீயாற் றிரிநயனம் 8

பிரசா பதியின் பேரொளியாற் பிறங்கு தசனஞ் சந்திகடம்,
விரவு மொளியாற் பிருகுடிகள் விளங்கு வந்து கிரணத்தாற்,
சிரவ ணத்தின் பொலிவெய்த மற்றைத் தேவர் தேசுகளும்,
மருவி யொன்றாய்ச் சிலையாக வமரர் நோக்கி மகிழ்ந்
தனரால் 9

கால காலன் றனதுதிரி சூல நின்றுங் கற்பித்துச், சூல நல்க
வடசாயி தோமி நேமி தனினின்று, ஞால மிருணீக்
கும்பரிதி நன்கா யமைத்து நல்கிடவே, ஓலக் கடற்கோன்
கம்பருளச் சத்தி தகன னுதவினனால் 10

பவன நாதன் றவர்நிறைந்த பாண வாவ மிரண்டருளத்
தவன குலிச மிந்திரனுந் தண்டன் கால தண்டமணி
புவனந் துதிவெள் ளைக்களிற்றிற் புருகூ தன்றா னல்கிடவே
தவள மாலை கமண்டலமுஞ் சலசன் பாசம் வாரிபதி 11

சண்டன் கசகூ பங்களிடைக் கிரண நல்கத் கனிக்காலன்
றண்டம் புரிவா ரோற்பலகை நல்கத் தாத்த வாரிதியும்
அண்டர் புகழு மமலமுறு மார மசர விருமடியு, மண்ட
மகிழ்ச்சி யளிசூடா மணியி னேடு குண்டலமும் 12

கடகம் வெண்மை யுறுமருத்த மதிகே யூரங் கவினெங்கும்,
படர வொளிசெய் நூபுரமு மொப்பில் கண்டப் பணியோடு.
மடைய விரல்கட் கெழிலாரு மணிக ளளித்த ததிநிமலம்
உடைய பரசே வொடுகவசம் விசுவ கன்ம னுதவினனுல். 13

விசையார் தரங்க மிகமேவுஞ் சலதி வாட்ட மேவலுரு,
திசைகொள் கமலத் தொடைகுசும மீய விமவான் வாகன
மாம், வசையில் வயப்போத் தொடுவிமல மணிக ளளிப்ப
மத்திபமே, நசியாப் பாண்ட முடலீசன் மகிழ்வி னேடு
நல்கினனுல். 14

பன்ன கேச னின்மலமா மணிகள் பதித்த பணியாரம்,
நன்ன ருவந்து நல்கியபின் னேனை நாகர் பணிபடையா,
லுன்ன வரிய பெருங்கருணை யுருவா யெனது சித்தமிசை
மன்னி வாழும் பெருந்தேவி வனப்பு மேவி வயங்கி
னளால். 15

இன்ன வாறு மானிதையா யிருக்கு மிருக்கு மளப்பரிய,
வன்னை புரியட் டக்காசத் தண்டம் பிளப்ப வெழுகடலும்,
உன்ன தஞ்சேர் மகிதரமு மொப்பி லாத வசுந்தரையும்,
மன்ன நடுக்கந் தேவர்முனி வரரு மகிழ்ந்து துதித்தனரால்.

## வேறு

அட்ட காசத் தசலேகம் பித்தலுந்
திட்ட ராகுந் தைத்தியர் தோன்றலும்
முட்டல் செய்யு முரட்படை தன்னெடு
நட்ட வர்தங் குழுவொடு நண்ணினன் 17

அசுரர் தங்குழு வம்மையின் பேரொளி
வசுதை யெங்கு நிறைந்த மனங்கொளா
வசலை யங்கிரி வைப்பி லமிழ்தலும்
வ்சைசயி னன்மகு டங்கப மன்னனும் 18

போகி திக்கயந் தாங்கிடும் பொற்றிசை
வாகு சங்க மலிவுங் குணத்தொனி
நாக லோக நடுக்கவு நோக்கியே
வாகை சேர வமரினின் மண்டினார் 19

வாளி யாயுத மாமழை யாற்றிசை
தூளி யாகத் துதைந்திடு மாண்டையர்
யாளி கண்டவ ரென்ன வயர்வுற
மீளி சேனையின் சிக்குரன் மேயினன் 20

கொற்றச் சாமர னோடுங் கொடியவர்
அற்ற மிற்சது ரங்கம டுத்திட
வெற்றி வெஞ்சமர் செய்திட மேயினார்
உற்ற னன்னவண் வெய்யவு தக்கிரன் 21

ஆற டுத்த வயுதா தத்தொடும்
வீற டுத்திடு வெஞ்சம் மேயினன்
ஊற டுத்தம காவனு வுற்றனன்
பாற டுத்தயி ரம்பதி னாயிரம் 22

தூயவொ டுற்றன னைம்பது கொண்டிடு
நியுத மான ரதத்தொடு நேரலர்க்
கயர்வு செய்யசி லோம னடுத்தனன்
அயமு றும்மறு நூறயு தத்தொடும் 23

பாட்க ளன்பொரு திட்டனன் பாய்பரி
கோட்க ரிக்குழு மிக்குடன் கூடவே
ஞாட்பெ திர்ந்தனன் கோடிநற் றேரொடும்
வாட்கொ டுங்கைப் பிடால னெனும்வலான் 24

தந்தி வாசி சகசிர மெண்ணில
வந்து சூழ மணிரதங் கோடியும்
உந்திச் சென்றழி வுற்றபி னைஞ்சத
முந்து கோடி ரதத்தொடு முட்டினன் 25

மற்றை யுக்கிர வீரரு மால்கரி
கொற்றத் தேர்பரி யெண்ணில கூடவே
யுற்றுத் தேவியொ டொண்சம ராற்றினர்
செற்றத் தாற்கண்க டைப்பொறி சிந்தவே 26

கோடி கோடி சகசிரங் கூடவே
யாடற் றேர்கரி மாவவு ணர்க்கிறை
வீடன் மேவச் சமரம்வி ரும்பினன்
சேடு மூவுல குந்தொழுந் தேவிபால் 27

கட்கம் பட்டசங் கைம்மழு வேல்சரம்
உட்கு முற்கர மொண்பிண்டி பாலமும்
புட்கு லஞ்சுழல் தோமரம் பூரியோர்
வெட்க மின்றி விடுத்தன ரம்மைமேல் 28

சிங்க வாகினி யாகிய தேவியுஞ்
சங்கை யிற்சத்தி ராத்திரத் தாரையாற்
பங்கஞ் செய்தனள் பாவியர் தேகத்தை
யங்கு நோக்கி யருந்தவர் யாவரும் 29

ஏனைத் தேவர் குழுவு மிறைவியை
ஞானத் தோத்திரஞ் செய்தனர் நண்ணினர்
யானைக் கேயரி யாகிய வீரனுஞ்
சேனைக் கான நடுக்கண லிற்சென்றான் 30

முளிபுற் கானை முளரி யெனவுளக்
களியி னோடு களங்கனைக் காதினன்
வளநற் றேவியின் மிக்கசு வாசத் திற்
கனையி லக்கங் கணங்க ளுதித்தனர் 31

பாசு பட்டச மாதிக ளாற்படை
யபைரயி மைக்குளொடுக்கின ரன்னவர்
விரைவின் மத்தளம் வெற்றிச்சங் காதிய
புரையில் வாச்சியச் சும்மைபொ லிவித்தார் 32

முத்த லைப்படைவாள்சர மூரிசேர்
சத்தி ரப்படை யாற்றிதி கன்சுதர்
அத்த லைக்க ணுயிரிழுந் தந்தகன்
சித்தி ரப்புரஞ் சென்றிடச் செய்தனள் 33

கண்டை நாதஞ் செவியிற்க லத்தலும்
வண்டர் பூவின் மயங்கி விழுந்தனர்
மண்டு சிற்சிலர் தம்மைவ யங்குகைக்
கொண்ட பாசத்திற் கட்டினள் கோதையே 34

கோவத் தாற்கட்கங் கொண்டு சிலர்தமைக்
கோவிற் சாயக் குறைத்தனள் சிற்சிலர்
மேவு வன்முச லத்தினின் மெய்க்கறை
பூவிற் கக்கிப்பு ரண்டனர் போயினர். 35

தண்ட மேற்றுச் சிலர்சிலர் கம்முரங்
கொண்ட சூலத்தும் பாணத்தும் கோளுற்றார்
கண்டம் வாகுசங் கந்நடு கம்மற்றார்
கொண்ட னர்தனிக் கோசரண் டோளரோ 36

உத்த மாங்கங்க ளிழந்தவர் பின்னரு முடன்று
சத்தி ரத்துடன் றேவியோ டமர்செயச் சார்ந்தார்
அத்தந் தாக்கியே சிற்சிலர் நடித்தன ரஙியர்
சத்தி நில்லெனச் சத்தியோ டமர்செயச் சாய்ந்தார் 37

தான வன்படை யின்னணஞ் சாய்ந்தலுங் கவந்தம்
மான வாகவப் பாரிடை நடித்தன மன்னே
யானை வாசிக டமைபொலா நில்லென வறைந்து
ஞான நாயகி கொன்றிடப் பிணமலை நண்ணி 38

வெஞ்ச மப்புவி மறைந்திடக் குருதிநீர் வெள்ளம்
எஞ்ச லின்றியே யொழுகிடத் தைத்திய ரிறந்தார்
துஞ்ச லின்றொளிர் தேவிதன் கணங்களுந் தொலைப்பக்
குஞ்ச ராரியு முயிரினைத் தேடுதல் குறிக்தான் 39

மதிநி கர்த்திடும் வதனியா மெம்மனை மருவார்
அதிமி குத்திடும் படையினை யடவியின் வன்னி
ததியு றும்புலுந் தருவையு மழித்தல்போற் சாட
விதிபு ரந்தரன் முதலிய தேவரும் வியந்தார் 40

கற்ப கத்தரு விளங்கிய கவினிறை குசுமப்
பொற்ப மைந்திடு மழையினைத் துதியொடும் பொழிந்தார்
அற்ப மைந்திடு மடியவர்க் கம்மையு மருள
மற்பெ ருங்களி மன்னினர் வானவர் மாதோ 41

## வேறு

உலகருள் சுரதனே யுத்த மக்குணத்
திலகுவை சியவிரண் டெனுஞ்ச ருக்கமுங்
குலவிட வுரைத்தனன் கேண்மின் கோதிலீர்
அலகிலாத் தேவிமான் மியத்தி னம்சமும். 42

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று

சிவாப்பியாம் நம :

## மூன்ருவது
## மகிடாசுரன்வதை யுரைத்த அத்தியாயம்.

மருத்துவ னரிக ளாய மகிடன்றன் ருனை யாவும். உருத்தமை
கோற நோக்கி யுற்றனன் சிக்கு ரன்ருன், பெருத்துயர்
மேரு வென்னும் பிறங்கலின் சிகரம் தன்னை, யுருத்தெரி
யாத வண்ண முயர்மங்குல் பொழிவ தேபோல். 1

மாவலி யம்மை மேனி மறைந்திடத் தோணி யுய்த்தே,
மேவலு மவற்றைக் காதி மீனலோ சனிபி னன்ஞேன்,
தூவலித் துரகந் தேருந் தூண்டுவோர்த் தவர்மு றித்துத்,
தாவுகை தனம்ப டுத்துத் தனுவையுந் துளைத்தா ளம்பால் 2

நாந்தகஞ் சருமந் தாங்கி நனிமிகு சினத்தி ஞேடும்,
போந்திடுஞ் சிக்கு ரன்ருன் புனிதைசிங் கத்தின் சென்னி
யேந்துகட் கத்தால் வெட்டி யெம்பெரு மாட்டி வாமஞ்
சார்ந்திடுங் கரத்தி லெறறித் தருக்கின னந்தவேலே. 3

வேறு

நாட்ட மாயிரங் கொண்டவன் பகையெறி நவிருங்
கோட்டின் மாதமெய் தீண்டலுங் குறுந்துக ளாக
வாட்ட மின்றியே முத்தலே வேலினை வல்லே
நீட்டக் காளியுஞ் சூலத்தா னீறுசெய் தனளால். 4

அந்த முச்சிரப் படையினு லங்கமும் பிளந்து, நொந்து
பூவிடைச் சிக்குரன் மடிந்தது நோக்கித், தந்தி கந்தரத்
திவர்ந்துசா மரன்வந்து சத்தி, யுந்தி ஞுனல கெவற்றையு
மீன்றவொண் ணுதன்மேல். 5

அன்ன வேலேயுங் காரஞ்செய் தந்நரி யதனேப். பின்னஞ்
செய்திடக் கயவனும் பெரியசூ லத்தை, யன்னே மேல்விட
வம்பினு லறுத்தன ளக்கான், மன்னு மாதங்கக் கும்பமத்
தியத்தரி மருவி. 6

சீய வீரனுஞ் சாமரன் றானுமே சிறப்பு, மேயபா ணியுத்
தத்தினை விளைத்தன ரித்தம், பாய பூமியிற் குப்புறப்
பருத்தவா கடியாற், றீய போர்புரிந் திருவருந் திரிந்தனர்
மன்னே. 7

அன்ன பின்னரே யரியினாற் சாமர னண்டம், மன்னி
யேபுவி வீழ்தலும் வெய்முடைப் போத்துப், பின்ன
ரன்னவன் சிரத்தினைக் கரபிர கரத்தா, லுன்னு மாத்திரை
யொன்றினிற் பிளத்தலு முவந்தான். 8

அப்ப தந்தனி லுதக்கிர னைதனு மவனை, யொப்பில்
பாதவங் குறும்பொறை யுந்தியே தேவி, துப்ப றக்கணஞ்
சிதைத்தனள் கராளனுந் தோன்றக், குப்ப தத்தினிற்
றலந்தந்த முட்டியாற் கொன்றாள். 9

தேவி யுஞ்சின முற்றுநற் கதையினாற் சேர்ந்த, மாவ
விக்கொரு முக்தகன் றன்னையு மடித்தாள், மேவு
பாடகளன் றனைப்பிண்டி பாலத்தின் வீழ்த்தி, யாவத்
தோணியாற் றாமிராந் தகர்தமை யட்டாள். 10

அந்த முற்றிட வுக்கிர வதனன்மா வனுவும், முந்து முக்கிர
வீரியன் றன்னையு முதன்மைக், கொந்து மூன்றுநாட்
டத்தனைச் சூலத்திற் குமைத்தாள், சிந்தி ணவி
ராற்பிடா லன்சிரந் தேவி. 11

கயவ னாகிய துர்த்தரன் றன்முகக் கள்வன், அயர்வு
றும்படி யப்பிகை யேவினா லட்டாள், துயரு றும்படை
நாயகன் மாரொடுந் தொலைய, நயனம் பாடலத் துடன்மகி
டாசுர னண்ணி. 12

மாகி டவ்வுரு வத்தினான் மன்னிய கணங்க, ளாக வத்திடை
மடிந்திடத் துண்டத்தி னடியாற், றேக முற்றிடத்
துணித்தனன் சூரத்தொழி றன்னான், மோக முற்றிடச்
சிலைவா லதியினான் முடித்தான். 13

சிலரைத் தன்மருப் பாற்பிளந் தான்சிலர் தம்மை, மலநங்
கம்பலை யாற்சிலர் பிரமண மன்னும், உலவின் வேகத்தா
லொண்ணிசு வாசத்தாற் சிலரைத், தொலைய வட்டனன்
சைரிய வுருக்கொண்ட துகளோன். 14

மிருகக் கோவினை யட்டிட வெய்யவன் விரைவி, லுருவக்
கோட்டினாற் பூதரக் கோட்டினை யுடைத்தான், குரவைப்
பான்மகி தலப்பிளப் புறமிகக் குமுறி, நரலைப் பானகந்
தரமெலா மிரலையா னறுக்கி. 15

கொடிய வேகஞ்சேர் கொட்பினான் மகிதலங் குழைத்து,
நெடிய வாலினின் புடைப்பினா லம்புதி நீண்ட, புடவி
யெங்கணும் புரட்டியே யுயிர்ப்பினாற் பொங்கித், தடம
கீதரம் புவிவிழுந் தேசத மாக. 16

உற்ற னன்பெருஞ் சினத்தோடு மகிடனு முமையாண்,
மற்ற வன்றனைப் பாசத்தாற் பிணித்தனண் மன்னோ, வற்ற
மன்னதி லரியுருக் கொண்டிட வம்மை, கொற்ற முற்றிடச்
சிரத்தினைத் தடிந்தனள் கொதித்தே. 17

அந்த வேலையி னாட்டமுஞ் சருமமு ரக்தம், வந்து
மன்னிடும் புருடனாய்ப் போர்செய மதித்தான், சுந்த
ரஞ்செறி யன்னையுந் தோணியாற் றொலைக்க, முந்து
தோன்றினன் மும்மதக் கரியென மூடன். 18

வாரணத்துரு மன்னின னரியினை வன்மைக், கார
ணத்துதி யத்தத்தால் வலித்திடக் கன்னி, சீரணத்தத்தை
நவிரினாற் சேதிப்பத் தேவர்ப், பாரணத்தவன் வடவையி
னுருக்கொடு படர்ந்தான். 19

அனையன் போந்திட முச்சக நடுங்கலு மம்மை, தனைவி
லுத்தம மதுவெழுற் பானமுந் தொடங்கி, நனிசிரித்தன
ணயனங்கள் சிவந்தன நாகந், தனையு றழ்ந்திடு மகிடனுந்
தர்ப்பசத் துவனாய். 20

காளபக்துவிற் கோடணை புரிந்துபின் கரிய, வாளபப்புறு
மருப்பினாற் பிறங்கல்கள் வவ்வி, நீளபப்பதிக் கோவினாண்
மேனியோ கிப்பக், கோளபற்பல வாளியாற் குமரியுங்
குறைத்தாள். 21

போதவேமதத் தாள்முகஞ் சிவந்தவள் புகல்வாள், ஆத
ரத்தொடு மதுவையான் பானஞ்செய் யளவுங், காத
கன்னெனா மூடநீ கர்ச்சனஞ் செய்தி, வீதனீயுமி
லென்கையாற் றேவர்மிக் கார்ப்பார். 22

என்னக் கூறியே குதித்தவன் மேனிமே லெழிலார், மின்னு
பாதத்தால் வலியுற வூன்றியே விமலை, சென்னித் தாரணஞ்
சூலத்தா லெற்றலுந் தீயோன், றன்னுந் தன்முக
வருத்தகா யம்வெளித் தோன்ற. 23

செஞ்சரண்கொடே வலியுற வூன்றியுஞ் செயிர்த்தே
வஞ்சியோடுபோர்க் கருத்தநிட் டொங்கனாய் மன்ன, நஞ்ச
மன்னகட் கத்தினா லவன்றலை நாரி, விஞ்சு பாரிடை
வெட்டியே வீழ்த்தினண் மன்னோ. 24

அந்தமாமகி டன்பல மாகரத்தோடு, நொந்து பூவிடைப்
பாறலு நோக்கியே நவலுஞ், சுந்த ரஞ்செறி தேவருங்
கணங்களுந் துறவோர், முந்து சங்கமு மகிழ்வொடுந்
தோத்திர மொழிந்தார். 25

கானங் கந்தரு வர்புரிந் தார்மணங் கமழ, நானங்
கந்தரஞ் செறிந்திடு மரம்பையர் நடித்தார். ஆன
தன்மையின் மூன்றெனுஞ் சருக்கமு மறைந்தேன், மேனி
கழ்ந்திடு மம்மைதன் பெரும்புகழ் விரிப்பேன். 26

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று

## நான்காவது
## தேவர்கள் தேவியைத் தோத்திரஞ் செய்ததுரைத்த அத்தியாயம்

---

இன்ன வாறுமைமகிடனை முடித்தமை யெண்ணிப்
பொன்னி னாட்டிறை தேவரு முனிவரும் போந்து
கன்னி பாதத்திற் றலையிறக் கிட்டனர் கடத்திற்
றுன்னு நற்புள கத்தொடுந் துதிபல சொற்றார் 1

*அகில மாஞ்சுரர் கணவலி யவையின் மூர்த்தியெனும்
விகல மின்றிய நாயகி தன்மிட லாலிவ்
வகில மாக்குவ ளமரரு முனிவரு மன்பா
னிகரில் பூசனை புரிந்திட நேயமுற் றிடுவள் 2

அனையள் பாதத்தை வணங்கின மடியர்கட் கிடும்பை
வினையு றுவகை மங்கலை மங்கலம் விளங்க
நனிய ளித்திடக் கடவளா யகிபிர பாவம்
பணமலர்ப்பக வன்னரா னனந்தனாற் படுமோ 3

காத்தி யாயனி யாகிய தேவிகாத் தருள்க
ஏத்து லோகபா லனத்தினு மகபச்சூ ரிறவுங்
தாத்தி ரீமுத லுலகனை யருளுளந் தழைப்பாய்
தோத்தி ரம்பெறுஞ் சீயதாய்ச் சுகிர்திமந் திரத்தில் 4

பாவர் மந்திரந் தன்னிடை முகடியாய்ப் படர்ந்து
மேவு நூலுணர் பண்டித ருளம்புத்தி விளக்காய்த்
தேவ ரும்புகழ் புண்ணிய ருளிற்சிரத் தையதாய்ப்
பாவு சற்குலப் பிறப்பினர் பாற்பகர் நாணாய் 5

கின்ன நீக்கிய நின்றிரு வடிக்கென்றுங் கெடாத
மன்னு சீர்நமம் புரிந்தன மாயையி னுதித்த
வின்ன லோகபா லனஞ்செய்வா யெம்பெரு மாட்டி
துன்னு நின்னுரு வசிந்தியஞ் சொற்றிடும் வீரம் 6

சமர்த்தி றத்தினை யெவ்வணஞ் சாற்றுத லுமையே
எமைப்பு ரந்திட நின்பத மிறைஞ்சின மம்மே
அமர்ச கத்தினுக் கேதுவாய்ச் சருவவா சிரய
விமலை யேதிரி குணவடி வாய்மிளி ரிறைவி 7

நித்தி யப்பொரு ளேயரி யரனய னேரின்
மெத்து தேவரு மறியொணா வேதத்தின் றலைவி
சுத்த நின்னுரு வமுசமாஞ் சகமிது துதிசே
ருத்த மீமுதற் பகுதியோ டவ்வியா கிருதை 8

மகத்திற் றேவர்கண் மாண்சுவா கைப்பெய ரோத
மிகத்தி ருத்தியை யுற்றனர் சுவதையை விளம்பி
வகுத்த கன்மத்திற் பிதிர்க்களுந் திருத்திமன் னினராற்
சகத்தி லன்னவை யிரண்டுநீ யன்றியார் சாற்றாய் 9

முத்தி யேதுவாய்ப் பகவதி யாமுதற் றேவி
சித்தத் தாலுணர் வரியமா விரதையே செகுத்த
கொத்துப் போன்றவிந் திரியராயப் பிரமத்தைக் கூடும்
முத்திக் காமராந் தோடமின் முனிவர்க டம்மால். 10

பயிலு மேன்மைசேர் வித்தையாய்ச் சிற்பர புருடற்
கியலு நன்மனை யாகியே யிருந்தநின் சரணந்
துயரு றுவகை தொழுதனந் துலங்குசா மத்தோ
டயலி ருக்கிய சுசாதிமூ லத்தொனி யம்மே 11

ஈத லேதிதி யழித்தற்கு மேதுமூன் றாகி
ஓது தார்க்கமாம் பவக்கடல் கடத்துமொண் புணையே
மேதை யாகிய தந்திர போதையே விண்ணுந்
தீதின் முத்தியு மீயுநின் றிருவடி. தொழுதாம் 12

சீத ரன்னுரந் திகழுமா லயமெனச் சேர்ந்தோய்
ஓது சங்கர பன்னியாங் கௌரியுன் னெழிலார்
பாத பங்கயந் தொழுதனம் பத்தரெம் மிடரை
யாதி நாயகி யிக்கண மகற்றினை யம்மே 13

ஒளிரு நல்லசங் கையொடு பரமையு மோங்கி
மிளிரும் வேதத்தின் மும்மையு மணுக்கண்மே வுதற்கு
விளையு நற்பயிர் விருத்தியா திகளுநீ விண்ணோ
டுளையு நற்புவி யாதனை யொழிப்பவ னீயே 14

தோற்று முக்குணி யாகியுந் தோடங்க டம்மா
லாற்றல் சேர்விட யங்களி லணுகிலா யம்மே
மாற்ற லார்தமை யமரினி லழித்துவிண் மன்ன
எற்றி யெம்பய மகற்றுநின் பதமிறைஞ் சினமால் 15

புன்ன கைபுரிந் தமலமாய்ப் பூரண மதிய
நன்ன யம்பெறுங் கனகவுத் தமநகை வதன
முன்னர் நின்றுபின் கறுவியே மகிடனு முசுடன்
அன்னை யெற்றின னன்னபோ தானனங் குபிதம் 16

பிருகுடிக் கராளச் சசாங்கத் தொளிப்பி ழம்பு
முருட ஞெக்கியு முயிரினை விட்டிலன் முதல்வி
யிருத யந்தனி லோர்ந்திடின் மிகவியப் பிவண்டா
னுருவு ளாரெவர் குபிதவந் தகற்கண்டு முய்ந்தார். 17

தொக்க தானவர் நயனங்கண் முகிழ்த்தில சூலி
உக்கி ரஞ்செறி நினதுகட் கத்தொளி யோடும்
மிக்க சூலத்தின் சவியினால் வெண்ணில வணிந்த
துக்க சாந்திசெய் நின்முக நோக்கிய தொடர்பால் 18

தேவி நீயரு ளெனுமுரை பயனில செப்பில்
ஆவி கட்கருள் புரியியல் புடையளா தலினான்
மேவு மெங்கட்குச் சுபமுற மேவலர் குலத்தைக்
கோவ முற்றுநீ கொல்லுத லிதனினாற் குறித்தாம். 19

தான வக்குழு மடிதலாற் சகஞ்சுக முறவே
மான மில்பவ நரகுற வவுணர்கண் மகிழ்ந்து
நானி லந்தனிற் புரியினுங் கருணைநீ நண்ணித்
தான முய்க்குதி சங்கிரா மந்தனிற் சாய்த்தே 20

அவுணர் தங்களைப் பார்வையா லடலைசெய் நீயவ்
வவுணர் தங்கண்மீ தத்திரம் பொழிதிற மகிதர்
அவுண ராயினு மேவினாற் புனிதர்க ளாகி
யவுணர் மேலுல கடைந்திடப் புரிவினை யாட்டே 21

கொடியர் தஞ்செயல் சாந்திசெய் திடுநின குணமும்
படியில் யாவர்க்குங் கணிக்கொணாப் படியில வுருவும்
நெடிய னேமுதற் றேவர்தம் வலிகவர் நீசர்
முடிய வேயடு வீரமு மொப்பில மொழியின் 22

அம்மை யேயிவண் டுட்டரா மவுணர்கண் மீது
வெம்மைச் சாயக மேவியே யவர்வினை யறுத்துச்
செம்மை யாக்கிநின் றிருவருள் சேரல ரிடத்தும்
எம்மை யும்முள தென்பதை யெமக்குணர்த் தினையே 23

தேவி தன்பெருங் கருணையா னன்மையுஞ் செறியுந்
தேவி தன்மிகு சினத்தினா னாசமுஞ் சேரும்
ஏவ ரைக்குறித் தம்மைநன் னுளத்தினிற் கருணை
மேவு வாளவர் சம்மதர் சீர்த்தன மேலோர் 24

நட்ட வர்க்குறு கீர்த்தியு மறமுத னான்கும்
பெட்ட சந்ததி மனைமுதற் றன்னியர் பிறங்கும்
இட்ட புண்ணிய கன்மிகள் சுவர்க்கத்தி லிருப்பர்
எட்டு ணைத்துயர் பொருந்திடா முத்தியெய் துவரால் 25

பீதன் மாருனை முன்னிடிற் பீதியை யடையா
ரோது மின்பினர் முன்னிடிற் சித்தந்து வுறுவார்
போத வுற்றிடு மிடிதுன்பம் பயங்களைப் போக்க
வேத மற்றமு வுலகினி னினையொழித் தெவரே 26

நினது வீரத்திற் கொப்பிலை பயங்கர நீக்கு
நினது மங்கள ரூபமு நிகருறு தெளியர்
தனைய ளிப்பதற் கேசித்தந் தன்னிடை யளியாய்
நினைவி லொன்னலர்க் கர்க்கசப் போரினீக் கிடுவாய் 27

றூன்று லோகமுந் திதியடைந் தனநினுன் முதல்வி
யான்ற சூலத்தாற் காத்திடு வாயெமை யம்மே
சான்ற துக்கநோ யொழிந்தனஞ் சண்டியே கட்கம்
ஏன்று தீனரா மெங்களைப் புரத்தலெண் ணுதியே 28

கண்டை நாதத்திற் புரந்தரு ளடியரைக் கவின்விற்
கொண்ட நாணொலி சூலத்தி னெழிலு றுங் கொட்பா
லெண்டி சைக்கணுஞ் சந்தத மளித்தரு ளெம்மைத்
தொண்டு கொண்டநின் சௌமியம் பாலிக்க துணையாய் 29

கோர மாவுருப் பாலிக்க கோப்புவி கட்கஞ்
சீர முத்தலை வேல்கதை சரமெமைத் திதிக்க
யாரு நேரிலாத் துர்க்கையே பகவதி யம்மே
யீர நின்கம லப்பத மிறைஞ்சியேத் தினமால் 30

எனம ருத்துவன் முதலினோ ரித்துதி செய்து
மனவி ருப்பொடு நந்தன மலர்கொண்டுங் கந்த
நனிவி ளங்கிய லேபனந் தூபத்தா னங்கை
முனமி ருந்தன்பி னருச்சித்து மொழிந்தனர் துதியே 31

அரம்பை மாதர்க ணடித்தனர் கானத்தை யறைந்தார்
பரம்ப ரன்றிருத் தேவியும் பத்தரை நோக்கிப்
பரந்த வன்பினுன் மகிழ்ந்தன மெவ்வரம் பகிர்தி
ரந்தை தீரயா மளிக்குது மென்றன ளன்றே 32

அண்டர் வேண்டுவர் கொடியனு மகிடனை யடலாற்
றொண்டர் தங்குறை முடித்தனை துன்பங்க ளகன்றேம்
புண்ட ரீகநேர் வதனியே யாமுனைப் போதங்
கொண்ட வேலைவந் தெங்களா பத்தினைக் குறைப்பாய் 33

உம்பர் வேண்டுவ ரித்துதி யுலகிடை யெவரு
நம்பி யோதிடி லவர்துய ரகற்றியே ஞானஞ்
சம்ப தீந்தரு ளெனவர மளித்தபின் றுயு
மின்பொ டேயுறை வீரென வெழுந்தனண் மன்னோ 34

இந்த வாறருட் சத்திதன் னருளினை யியைந்து
முந்து வானவர் தம்முடை முதுநக ரடைந்தார்
அந்த மாநிலத் திந்திர வைசிய வறியென்
றுந்து பேரரு ளாலறைந் துயர்முனி பின்னும் 35

கவுரி தன்கலை பாத்தினிற் சாதையாய்க் கழிந்த
சவுரி யம்முறு மாயையாம் பகவதி தானே
யுவமை யிற்சும்ப நிசும்பரைத் தொலைத்தமை யுரைப்பேன்
நவையி னுன்கதா மத்தியா யம்மிவ ணவின்றேன். 36

நாலாவது அத்தியாயம் முற்றிற்று

*2 முதல் 30 முடிய உள்ளவை செவ்வாய்க்கிழமைதோறும் பாராயணத்திற் குரியன.

---

## ஐந்தாவது
## சும்பன் சுக்கிரீவனைத் தூதுவிட்ட துரைத்த அத்தியாயம்

---

### வேறு

முன்னாட் சும்ப நிசும்பரென மொழியு மவுணர் தோன்றியவர்,
சின்னா ளதனிற் றிடசித்தஞ் சேர்ந்தே புனித புட்கரத்தின்,
மன்னி நின்றே யயுதமெனு மாவாண் டயனை யுளத்
தெண்ணிக், கொன்னார் சுவத்தை யியற்றவரன் றோன்றி
வரனைக் கொடுத்தகன்றான். 1

அனைய ராகண் டலனரசு மனலி யரசு மதியரசு, நினையவரிய
கௌபேர மாக்கி னேய நிகரில்லாப், புனையா மியம்வா
ருணமுலகங் கிருது பாக முதற்புகலத், தனையு மடக்கித்
தேவர்புரி தன்னைத் தன்சே வகர்க்களித்தார். 2

வானோர் கோமான் பதியிழந்து மனைவி யோடு மற்றையராந்,
தேனார் கற்பத் தருநிழல்வா டேவர் மனைவி தம்மோடும்,

ஊனுர் மனுட வுருநண்ணிப் பலியு மேற்றிங் குழல்வதனல்,
ஆனு வொளிசேர் தமதுகட மெலிந்தே யவச மடைந்தனரால்

சதுர யுகந்தா னுற்பதிவ்வா றகலப் பின்பு தானமுளார்,
மதிநேர் வதன மங்கையரு மாயா தேவி தங்களுக்கே
யிதயந் தனினீர் தன்பமெய்து மெல்லை சிவையா
மெனைநினைமின், உதவி புரிந்துந் துயர்களேவே னென்னும்
வரத்தை யோர்ந்தனரால். 4

## தேவர்கள் துதி

* நதிசே ரிமயப் பொருப்பினிடைத் தாதா வோடு
சுரர்நண்ணி, மதிமிக் குதவும் பெருங்கருணை வடிவி
தன்னைத் துதிக்கின்றார், கதியெங் கடவி தேவிசிவை
கனமா தேவி பிரகிருதி, நிதியீந் தருள்பத் திரைகௌரி
யுருத்தி ரீநின் மலிநமவே. 5

விளம்பு மெழிற்றுத் திரிநிலவு மதியி னுருவி கல்யாணி
களங்க மில்லா வடியர்துயர் களேவாய் நமவே சித்திநம
துளங்க வில்லா நைருதிபூத் தாங்கு மரசர் துணையில்செல்வி
வளஞ்சே ருஞ்சர் வாணிதுர்க்கை தூர்க்கபாரை நமநமவே 6

சாரை சருவ காரிணியே கியாதி தாவில் கிருட்டிணியே
சேருந் தூமி ரையதிகஞ் சிறந்த சௌமி யதிரௌத்ரி
ஓரு மூலசப் பிரதிட்டை யோங்கு பூதிப் பிரதைநம
வாரும் பூதி நமநமவே யென்ன வாழ்த்தி வணங்கினரால் 7

யாவள் சகல பூதத்து மரிதன் மாயை யாயமர்வள்
தேவி தனக்கு நமக்காரஞ் சிறந்த சகல பூதத்தும்
ஓவ லிலதாஞ் சத்தியென வுற்று டனக்கு நமக்காரம்
யாவள் சகல பூதத்துஞ் சேத னுரு பிணியாவள் 8

யாவள் சகல பூதத்தும் புத்தி யுருவி யாயமர்வள்
யாவள் சகல பூதத்துஞ் சிருட்டி யுருவி யாயமர்வள்
யாவள் சகல பூதத்துந் திதியி னுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்து மழித்த லுரு வியாயமர்வள் 9

யாவள் சகல பூதத்து நித்த வுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்துங் கருணை யுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்துங் கீர்த்தி யுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்தும் வித்தை யாகி யமர்ந்திடுவள் 10

யாவள் சகல பூதத்துஞ் சிரத்தை யாகி யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்து மிலச்சை யாகி யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்தும் மேதை யாகி யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்தும் சுவாகை யுருவா யமர்ந்திடுவள் 11

யாவள் சகல பூதத்துஞ் சுவதை யுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்துங் குதையி னுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்துந் துயிலி னுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்தும் பிரபை யுருவா யமர்ந்திடுவள் 12

யாவள் சகல பூதத்தும் பத்தி யுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்துங் காந்தி யுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்து நீதி யுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்துஞ் சாயை யுருவா யமர்ந்திடுவள் 13

யாவள் சகல பூதத்தும் ரதியி னுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்தும் மிருதி யுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்துந் திருத்தி யுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்தும் புட்டி யுருவா யமர்ந்திடுவள் 14

யாவள் சகல பூதத்துந் துட்டி யுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்துஞ் சாந்தி யுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்து மரியின் பிரியை யாயமர்வள்
யாவள் சகல பூதத்துந் திருட்டிணையா யமர்ந்திடுவள் 15

யாவள் சகல பூதத்து மிம்சை யாகி யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்துஞ் சத்தி யுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்தும் வியாத்தி யுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல லோகத்துஞ் சாதி யாகி யமர்ந்திடுவள் 16

யாவள் சகல பூதத்தும் விருத்தி யுருவா யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்து மன்னை யாகி யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்தும் பிராந்தி யாகி யமர்ந்திடுவள்
யாவள் சகல பூதத்தும் பரமா னந்த மாயமர்வள் 17

யாவள் வணங்கு மவர்விருத்தி ரூப மாகி யமர்ந்திடுவள்
யாவள் சகலா கமங்களினுங் கூறு மன்னை யாயமர்வள்
யாவள் சகல தேவசக்தி யுருவ மாகி யமர்ந்திடுவள்
யாவள் கிரியை யுருவாகி யமர்வ ளவளைப் பணிகுதுமால் 18

உரைசெ யிந்தி யங்கடமக் கதிட்டாத் திரியா யுலகெங்கும்
வரையா தமருஞ் சிற்சத்தி மாபத் திரைநற் பகவதியே
கரையில் சுபங்க ளெங்களுக்குக் கணத்தி லருளக் கஞ்சமலர்
புரையு நினது பதயுகளம் போற்றி போற்றி மிகப்போற்றி

சீற்ற மகிடற் செற்றபினர்த் தேவர் துதிக்கும் பெருந்தேவி
யாற்ற லவுண ரான்மெலிந்தே யடிதா ழெங்க டுயரகற்றி
யேற்ற மிக்க சுபமருளி யெம்மைக் காக்க விக்கணமே
தோற்றி யருள வேண்டுமெனச் சுரர்க ளன்பி னொடும்
பணிந்தார் 20

என்றே சுரர்க ளன்பினொடு மிறைவி தன்னைப் பரிச்சுதலும், பொன்றே யமர வாபகையி லாடக் கிரிசை புறப்பட்டாள், அன்றங் குறைந்த வமரர்தமை யருளி னோக்கி யுரைசெய்வாள். துன்று நீவிர் துதிதேவி கருணை நம்பாற் சுரந்தனளால் 21

அனையாள் பறம்பின் சுதையுடற்கோ சத்தி லுதிப்ப ளவள்சிவையாம, வினைசேர் தீய வசுரர்தமை வென்றே நுங்கட் கருள்புரியுந் தனைவி லவட்குக் கௌசிகியா நாமந் துலங்கு மவடன்பாற், பனிமா திரபுத் திரிதானுங் கிருட்டி ணையாய்ப் பவமுறுமால். 22

சத்தி யான வனையாட்குக் காளி கையாம் பெயர்சாரும் இத்தை யுணர்மி னென்றருளி யெல்லார் வடிவ முடையா ளாய்ச், சுத்த விமய கிரியின்மிசைத் துகடீர் கன்னிவிண் டாண்டின் மெத்து மன்போ டமர்ந்தாடிக் கானம் பாடி மேவினளால். 23

நன்ன ரல்லோன் கலைச்சமையிற் சிலவா நியநண் ணுறவில்லா, வன்ன பருவ மடைந்தனளா யவனி மீது சரித்தனளாற். றன்னு பாவ வினைச்சும்ப நிசும்பன் றெண்டர் தோகைதனை, முன்னங் கண்டார் சண்டன் மிடன் முண்ட னென மொடியோரே 24

மந்த முறுவல் புரிமாதை மாயை வல்லோர் கண்டு மனத், தந்த மில்லா விறும்பூதை யடைந்து புரியிற் புக்க னரால், அந்த மடுத்த சும்பனைக்கண் டவர்க ளுரைப்பா ரம்புயனேர். வந்த திருக்குச் சுந்தரியை யிமயங் கண்டே மன்னவெனு. 25

பின்னு முரைப்ப ரவள்சுவணப் பேர்விண் டாண்டி லுறைகிறாள், அன்ன வளைநே ரரிவையர்க ளகில மூன்று மிலையறிதி, கொன்னம் பெற்ற வவளைமணங் கொண்டோ னன்றோ நற்புருடன், மன்ன வினிநீ யேகியவண் மணிநே ருருவை நோக்கென்றார். 26

உரைக்கு மிவள்கந் தருவியுமன் றெளிர்பன் னகியு மியக்கியுமன், றிரைக்குங் கடல்சூழ் வசுந்தரையி லெழிற்றா தையினொ டுறவுமிலை, உருக்க முடைத்தோன் றினர் காப்போ ரொருவ ரேனு மிலையொருத்தி, யிருக்கும் விசனந் தனிலவணின் னெழிற்குத் தக்கா ளெனமொழிந்து. 27

ஒளியா ரரச நன்மணிக ளோங்கு புழைக்கை மான சுவம், விளியா துள்ள நின்மனையின் விண்ணோட் டரசன் கரியோடு, தளிரார் பாரி சாததரு தாங்கு முச்சைச் சிரத் தகையார், களிசே ரயமு நின்கோயிற் கண்ணே யென்று முள்ளனவால். 28

அயன்பா லுற்ற வஞ்சமிசை யான முதலா விரத்தினங்க ணயமா யுளசங் கான்றேழு னல்ல நிதியு முள்ளனவா, லியலுங் கிஞ்சற் கினிவாடா வெழிற்பங் கயத்தொங் கலு முனக்குப், பயமா ரத்தி கொடுத்துளது பகரும் வருண னென்போனும். 29

ஈழ வானச் சத்திரமு மீந்தான் பிரசா பதிவையந், தோழ கொடுபோ வெனக்கொடுத்தான் றுலைவி றண்ட தரன் முன்பு, வாழ நினைத்துற் கிராந்திதையா மன்னு சத்தி யளித்தனனு, லாழி யரசன் பாசமதை யளித்தா னிசும்பன் றனக்கம்ம. 30

பின்னு மனையான் கடற்பிறந்த பெருமை யாத னம்மளித்தான், வன்னி யுனக்குத் தழற்சௌசச் சுத்த வாச மிரண்டளித்தான், இன்ன வாறே யசுரர்குலத் திறைவ நின்னு லெப்பொருளு முன்னே யடையப் பெற்றனவான் மூன்று புரியி லுனக்கிணையார். 31

சிறந்த சான்ற வரதனங்க டிரளாய் நினது புரிமேவும், அறைந்த வொளியங் கனைமணியா லுனது நகர மழகாகும், பறைந்தே மெனச்சும் பன்கேட்டுப் பதைத்தே மனத்தி லுற்றிருந்து, நிறைந்த தீரம் போயுளைந்து நிகழ்த்து வான்சுக் ரீவனொடும். 32

விரைவி லிவர்கூ றியநங்கை மேவு மிடத்தி னீயணுகிப், பிரிய வாக்கை யவட்குரைத்துப் பிறங்கு மிங்குக் கொணர்ந் திடுவாய், அரிவை மார்கட் கினியவுரை யலது கூற னீதியதோ, வரிய வுணர்வோய் போய்மீடி யென்று னகஞ் சோ கொடியானே. 33

கொடியோன் கூற்றைச் சிரங்கொண்டு கொடிய சிறிய படையோடும், அடியேன் போந்து வருவலென வகன்றே யிமய வரைபுக்குக், கொடியோன் மருங்கா ருலகனையை நோக்கி யுரைப்பன் கொற்றமுறும், முடிசேர் சும்ப தானவன்றன் றாத னென்ன மொழிகுவனால். 34

ஏத்து மெழிஞ ரியர்திலகி யிறையாஞ் சும்ப ஞணயினைப், பூத்த போகிற் பகவன்முதற் புத்தே ளிர்களு மிகழ்ந்துரையா, ராத்த னுரைபோற் கொள்வரவ னறைந்த மொழிகே ளுலகமெலாம், பாத்த தேவர் குழுவோடு மென்ன தேவல் பரித்திடுமால் 35

யாக பாகம் புசிப்பவனும் யானே ரத்ந பூதங்க, ளாகு மெனக்கே மருத்துவன்ற னழகார் கரியு மெனக்காகுந், தோக மிலபாற் கடலுதித்த துரகம் பாரி சாதமுதல், ஆகும் பொருளுங் கந்தருவா திகட்குள் ளனவு மெனக் காமால். 36

தெரிவை மணியே யாதனங்கள் திரளாய்ப் புசிப்போர் யாமன்றே, வுரிமை யிதனு னீயுமிவ னுறுதற் குரியா யுற்றபினர்க், கரையு மெனையே னும்மனுசக் காவற் புரிவோன் றனையேனும், விரைவின் மணந்து பெருஞ்செல்வ மேவி யிருப்பா யெனவுரைத்தான். 37

என்னைச் சும்பன் வாணியினைச் சுக்கி ரீவ னிசைத் திடவே, யுன்னித் தேவி புன்னகைசெய் துரைப்பள் முன்புன் மதியாலே, யென்னைச் சமரில் வென்றுதர்ப்ப மிடித்தோ னெனது நாயகனென் னன்ன சபத மொழி பொய்யா வனையவீர ரிவணெய்தி. 38

சமரம் புரிந்தே யெனைவென்று தர்ப்ப மடக்கி யெனைக் கொண்டே, யிமையி லேக வவரோடு மிசைப்பா யென்ன வுமைமொழியக், கமையில் சுரளன் கேட்டுமனங் கன்றி னனது பிரதிஞ்ஞை, யமையு மவரோ டமர்புரிய யாவ ருளர்மூ வுலகத்தும். 39

நீயோ வொருத்தி யிவ்வுரைக ணிகழ்த்த லாலே யுனையெவரும், பேயாய் மதிப்ப ருனது கழல் பிடியா முன்ன நீவருதி, யோயாப் புகழ்வந் துறுமென்ன வுன்னு துரைத்த சபதமொழி வேயாய் வந்த மடவோனை விரைவில் வேந்தன் பாற்சென்று. 40

எனது கூற்றினீகூறி லியல வேண்டு மதுசும்பன், மனதி னோர்ந்து புரிவனென்றன் மன்னு சபத மொழி பொய்யாத், துனேவி லேகென் றனளம்மை சுதையாம் பஞ்ச சருக்கமிவண் வினைவென் றவரே முடிந்ததினி மேலாங் காதை சாற்றுவனல் 41

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று

*பாட்டு 5 முதல் 19 முடிய உள்ளவை தினப் பாராய ணத்திற் குரியன.

---

## ஆறுவது
## தூமிரக்கண்ணன் வதையுரைத்த வத்தியாயம்.

என்ன வம்மை யிசைத்த மொழிசெவித்
துன்னு தூதன் றுனைவினிற போயினன்
மன்னு தேவ வ்ரியெனுஞ் சும்பனோ
டின்ன வோத வெழுந்தது வெஞ்சினம் 1

கறுத்த சும்பன் கனல்விழி சிந்துற
மறுக்கொ டூமிர வன்கணன் றன்னையே
பறப்பி னுற்றுப் பருப்பதத் துறறவ
ணிறக்கு ழற்பற்றி நீயிவ ணோர்கென்றான் 2

அனைய டன்னை யளித்திட முன்னியே
வினையிற் றீர்ந்திடும் விண்ணவர் நேரினும்
தனுவின் கான்முளை யோர்க டடுப்பினும்
புனையி யக்கர்கள் யாழ்வலா பொங்கினும் 3

ஐய மின்றி யவர்தமைக் கோறல்செய்
தெய்து வாயிவ ணென்றிட வேசினந்
துய்ய வோர்நெறி யின்றிய வொண்டிறல்
வெய்ய தானவர் மேவினர் மிக்கரோ 4

ஆறெ னும்மயு தத்தொகை பெற்றவர்
வீறெரு டேவர வெண்ணிமக் குன்றிடை
யேறு போலண்டைந் தெம்பெரு மாட்டியைச்
சீறி நோக்கிச் சிலமொழி கூறுவான் 5

சும்ப னென்னுமத் தோன்றலை நீமணந்
தின்ப மெய்தவென் பின்னிற வாயெனிற்
றுன்பு றக்குழற் சுற்றியுய்ப் பேனெனும்
வன்பற் சீறியெம் மன்னைவ ழங்கினாள் 6

கேட்டி மூட னோர்ந்திடு சும்பனு
லோட்ட வந்திவ னுற்றனை தானையோ
டாட்ட முற்றெனை யீர்த்தவ ணங்கையி
னீட்ட நின்னைத் தடுப்பார் நிலத்திலை 7

என்னு முன்ன மெறுழ்வலித் தூமிர
மன்னு நோக்கன் மனத்திடை யேசினந்
தன்னை தன்னைப் பிடிக்கு மமையத்தின்
முன்ன முற்ற மொழியுமுங் காரமே 8

அம்மையி னுங்கா ரத்தா லடலையா யவுணன் மாளச்
செம்மையி லசுரர் தாமுஞ் சினந்தெதிர்த் திடுத னோக்கி
வெம்மைசேர் சரங்கள் சூல நவியமே யாதி விட்டுக்
கொம்மைசேர் குயத்தாள் கோறக் கோளரி யெழுந்ததன்றே

வாகுசேர் கரத்தி னோடு வத்திர முகிர்க டம்மாற்
சேகுறு மவுணர்சேனை சிதைத்தது சிதைந்த கேட்டே
கோகுகேழ் சும்ப னென்பான் கொடியராஞ் சண்ட முண்ட
மாகுநா மத்தி னோர்ப்பார்த் தம்மையைக் கொணர்தி
ரென்றான் 10

அக்கொடி யாளைச் சேர்த்தற் கருமையே லசுரரோடும்
மிக்கபல் படையினோடு மேவியே பொருது நீவிர்

சொக்குறுங் கூந்தல் பற்றிச் சோர்விலா துய்ப்பி ரன்றேற்
சிக்குறத் தாம்பால் யாத்துச் சேருமி னென்றான் மன்னே

இனையது மியலா தாயி னென்சின நீங்கு மாறு, வனி
தையை வயப்போத் தோடு மாண்டிடப் புடைத்து மீள்வீர்,
அனையள்பா லெனக்கு மாத ரகந்தனில் வளர்க நீராற்,
கனியிருட் குழலி தன்னைக் கட்டிநீர் கொணர்தி ரென்றான்.

மாயைசே ரசுர வேந்தன் வன்கழல் வணங்கி யன்னார்
போயின ரம்மை யோடு பொருதழிந் திடுதற் கம்ம
தூயரே யிவணு றென்னச் சொலும்பரிச் சேதம் பூர்ண
மாயது சத்தங் கூற வன்புடன் கேண்மி னென்றான் 13

ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## ஏழாவது
## சண்டமுண்டர்வதை யுரைத்த அத்தியாயம்.

---

ஆணையா றெழுகுஞ் சண்ட முண்டர்தா மனிகஞ் சூழ
நீணிலந் தன்னிற் போந்து நிகரிலாச் சைலவிந்த ரன்
கோணையாஞ் சுவண மாச்சேர் கோட்டினிற் சியவெங் நில்
ஏனுறுந் தேவி யாச முடன்வைகியிருப்பக் கண்டார் 1

சீற்றம துடைய ராகித் தேவியைப் பற்ற முன்னிக்
காற்றினிற் கடிது சென்றார் காவளை வில்ல ராகி
மாற்றலர்க் கண்ட வன்னை மனத்திடை முனியத் துண்டங்
கூற்றுவ னஞ்சக் காள வுருவமாய்க் குலவிற்றன்றே 2

எழிற்பிரு குடிவளைந்த வினையள்பா லத்தி னின்றும்
வழுத்தாகற் கரிய காளி கராளமாம் வதனத்தோடும்
குழக்கதி ரசிபா சங்கட் டங்கமுங் குலவு முண்ட
விழுக்கின்மா லையுங்கொண் டங்க மூடுமா யிசமு மின்றி 3

வெருளிசேர் புலித்தோ லாடை யுடையளாய் விபுலமுற்ற
துகளறு வதனி யாகிச் சஞ்சல சிகுவை சொன்மாச்
சகளவிந் துவிற்சேர் சோணக் கயங்க ரக்கந் தந்தி
யுகளநான் குற்ற திக்கைச் செவிடுற வுநூற்று மார்பும் 4

கொண்டன ளாகித் தோன்றிக் குழுமிய சேனை நாப்ப
ணண்டர்க ளஞ்சப் புக்கே யசுரர்தம படையிற் கண்டை
யண்டிய குப்பி தன்னை யங்குச பாச மேந்துங்
கண்டக ரோடும் வாரிக் கடிதினில் விழுங்கி னாளால் 5

கொய்யுளைக் குந்தத் தோடு கோலுறு பாகர் தம்மை
வையத்தை வலவ ரோடும் வாரியே விழுங்கிப் பின்னர்
எய்யுற்ற சிலர்த முண்ட மிருங்கச மிழுத்துஞ் சில்லோர்
மைபெற்ற கந்த ரத்தை வளைத்துமே மடித்தாண் மன்னோ 6

சிலர்தமை யடியாற் கொன்றாள் சிலர்தமை யுரத்தாற்
கொன்றாள், பலமுடை யவுணர் விட்ட படைசரம் விழுங்கிச்
சேனை, யுலைவுற மர்த்த னஞ்செய் தடியினாற சிலரை
யோட்டிச், சிலர்தமை நாட்டத் தாலுஞ் செற்றனள் காளி
மன்னோ. 7

கட்டங்கத் தடியாற் சில்லோர் கெட்டங்க முடையக் கன்னி
துட்டரா மசுரர் சேனை தொலைத்தல்கண் டிடியே றென்ன
வட்டகா சத்தனாகிச் சண்டனா மவுணன் மேவி
வட்டமாய்த் தவர்வ ணக்கி வாளிமா மழைபொழிந்தான் 8

தோணியா லனையன் மூடச் சுடருறு பரிதி தன்னோ
லேனுள முண்டன் மூட விறைவியும் விழுங்கி நின்றாள்
மானுறு கமலத் தோழன் விசயங்கண் மாக்கொண்டுற்ற
சேனுறு சலத ரத்தில் சேர்ந்துடன் மறைந்தவாபோல் 9

பின்பமை யாசனஞ் செய்து பேரர வத்தி னோடுந்
தன்பலி னொளிவி ளங்க நாந்தகம் விதிர்த்தம மென்றே
முன்புபோய்ச் சண்டன்கேசம் பற்றியே முண்டந்தன்னை
வன்படை நவிராற் காதி வானுளோர் துதிக்க நின்றாள் 10

நின்றவ டன்னைக்கண்டு முண்டனுங் கொடிய னேர
வன்றிறற் காளி யந்த மாவசி யதனுல் வீட்டத்
துன்றிய கவனங் கண்டு தொலைகுவ மென்ன வுன்னிச்
சென்றன பயத்தி னேடு மாதிரஞ் செறிந்த மன்னே 11

அனையர்தங் கம்மெய் காளி யங்கையி னேந்தி யட்டம்
புனையுமா சத்தி யேடு போந்துசண் டிகையைக் கண்டு
வினைபுரி சண்ட முண்ட வீரராம் பசுக்க ளிற்கு
நணியுப கிருதமாகப் புரிந்தன னற்போர் யாகம் 12

கொடுந்தொழிற் சும்பனேடு நிசும்பனைக் கொல்வாய் நீயென்
றடுப்படைப் பகைவர் தம்மைக் காளிதா னறைத லோடும்
விடப்புரை யனையர் தம்மை மெல்லிய னேக்கி யின்னேர்க்
கடந்தமை யானீ பூவிற் சாமுண்டி யாவாய் காளி 13

என்றருள் புரிந்தா ளம்மை யிவற்றைமயோர்ந் திடுதி ரென்னு, வொன்றிய நயத்தி னேடு முறுவர்கோ னெழிலோ ரேழாத், துன்றிய வத்தி யாயஞ் சொற்றன னினிமே லுங்கட், கென்றுமே யழியாக் கன்னி யியற்றிய வாடல் சொல்வேன். 14

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## எட்டாவது இரத்த பீசன் வதையுரைத்த வத்தியாயம்

வலியுறுஞ் சண்ட முண்டர் மாப்படை யோடும் போரிற், றொலைவுறுந் தன்மை கேட்டுச் சும்பனுஞ் சினமேற் கொண்டு மலைவுறு தலைவ ரோடு வன்பதா கினிதன் னென்னத் தலமிசை வருக வென்று சாற்றினன் கூற்ற மஞ்ச. 1

மைந்துறு திதியின் மைந்த ராமுதா யுகர்கண் மண்மே, னங்கெண்பத் தாறு மொய்க்க நாலொடண் பதுகம் பெண்ணூர், முந்துறு மசுரர் சேர மொழிகோடி

வீரி யப்பேர், வந்திடு மசுரர் தங்க ளைம்பது குலங்கண் மன்ன. 2

வெற்றிசேர் தௌமி ரன்மார் குலஞ்சத மேவ வேண்டா, ரற்றிடச் சங்கி ராமத் தடர்ந்திடுங் கால கன் மார், சொற்றௌர் கிருத ரோடுமௌரியர் துகளில் சீர்த்தி, பெற்றிடுங் கால கேயர் பெயர்க போர்க் கோலத் தோடும். 3

இவ்வண்ண மசுரர் தங்கட் கிறையவன் வெம்மை சேரும், எவ்வமா ராணை கூறி யெண்ணில படைகள் சூழ, வவ்வைபாற் சமர்கு றித்தே யடைந்தன னயனந் தன்னிற், கவ்மைமிக் கிடவே யோரிச் சாலங்கள் கரைந்த வன்றே. 4

துன்னி மித்தமிவ் வாறுபற் பலவவண் டோற்ற
வன்ன வுட்கொளா திமவரைச் சாரலை யடைந்தான்
என்னை யாளுடை யிறைவியு நோக்கியே யிறையிற்
றன்ன வார்தவர் வடவொலி செயச்சகந் தளர்ந்த. 5

மதுப தித்தொனி கண்டைசங் காதியின் மன்னும்
விதமு றுஞ்சுமை யாலமை வென்றனண் மிக்க
குதுக லத்துடன் கேசரி யொலித்தது கோவெண்
விதிய ரீசனும் வலாரியும் விசாகனு மன்றே. 6

அமரர் தாமுத யத்தினை யடையவு மசுரர்
சமரின் மாளவுந் திருவுள முன்னினர் தந்தார்
விமல மாமதி வீரிய மாதரை மெய்யி
லமர்பு ரிந்திடத் தோற்றமும் வடிவமு மறைவாம். 7

உலக ளித்திடுஞ் சத்திக ளியாவரு முரைத்த
புலவர் காயத்தி லவரவர் படைக்கலம் பூணு
மிலக வேயணிந் தெய்தின ரக்கதந் தெழில்சேர்
சலமு றுங்கமண் டலமஞ்ச யானமேற் சார்ந்தாள். 8

அயன்வ லிச்சுடர்ப் படைப்பிர மாணியா மன்னே
சயமு றும்பிறன் மேற்கொடு சூலமா பாந்த
ளியலொ டுந்தரித் திந்துவின் றுணியொடு மெனயாண்
மயமு றும்மகே சன்மனைக் கிழத்தியும் வந்தாள். 9

குமர னில்லவள் கொற்றவேற் படையொடுங் கோதில்
விமல மாஞ்சிகா வளத்திவர்ந் தெய்தினள் விண்டு
நிமலே யாழிகம் பொடுகதை சார்ங்கநே ரிலசி
கமல நேர்கரத் தேத்தியே கருடன்மேல் வந்தாள். 10

கோல மார்மகக் கிடியுரு மாதொடுங் கோரஞ்
சால மேவுறு நாரசிங் கியுமவண் சார்ந்தார்
பாலின் வெண்டந்தி மிசைக்குலி சப்படை யோடுந்
தால முந்நடுங் கிடச்சசி தசசத நயனி 11

ஆக வம்புரிந் திடமொயி லடைந்திடுங் காலேச்
சோக நீக்குறீ சானனு மவரொடுந் துன்னி
மோக மாக்கிடு மவுணரை முருக்கச்சண் டிகையாந்
தோகை யோடுரை செயவொலி யோரிகூ ழனையாள் 12

வேக மோடவ ளீசனை நோக்கியே விளம்பும்
பாக சாதன னாதியோர்க் கிடர்செயும் பதகச்
சூக ரம்பொரு சும்பனு நிசும்பனுஞ் சூழு
மாகு லத்தரா யழிந்திட வனையர்பா லடைநீ. 13

அனையர் தம்மிடைப் பொன்னுல கரிக்களித் திடவு
நனிம கத்தவி சுரருண நல்கவும் பின்னர்த்
தனிய ரத்திடை யவுணர்சார்ந் திடவுமே சாற்றுய்
வினைய ரின்னவை மறுத்துப்போர் புரிந்திட மேவில். 14

நம்மு டற்றசை யாற்சண்டி சிவைகட்கு நொய்தில்
வெம்மைச் சாடரப் பசியற்றுத் திருத்தியு மேவு
மிம்மெ னும்பொழு தின்கணென் றிசைத்திவண் மீள்கென்
றம்மை யேவலா லேசிவ தூதியா யமர்ந்தாள். 15

அன்ன பின்னரீ சானனு மசுரர்பாற் றேவி
சொன்ன வம்மொழி சொற்றிடச் சுடுசினங் கொண்டு
கன்னி பால்வந்து கடுஞ்சமர் கருதிய சத்தி
மின்னு தண்ணமா தியபடைக் கலமெலாம் விடுத்தார். 16

ஏனு றுஞ்சிவ தூதியன் னவர்படை யிமைப்பின்
மாணு றுந்தவர் பொழியப்பிற் கோறலும் வணங்கார்
நாணு றுஞ்சிலைச் சேனைக்கா வலரெதிர் நண்ணித்
தாணு சத்திமேற் சரம்பொழிந் தடுசமர் சமைந்தார். 17

காளி யும்மது நோக்கினள் கரிக்குலங் கற்றி
மீளித் தேரரைச் சூலகாட் டங்களால் விளித்துத்
தூளிப் போர்த்தலை யுதிர முங் குடித்தவர் தூவும்
யாளிப் பற்களாற் கழித்துத் தினட்டரை யடக்க. 18

அபனில் மந்திர பூதவன் னிசத்தினு லவுண
ருயர்வொ டுக்கமா கேசனில் சூலத்தா லொறுத்தாண்
மயமு றும்பரி தித்திற லால்வை ணவியும்
சயமு றுங்கவு மாரியுஞ் சத்தியாற் சாய்த்தார் 19

பாக சாதனன் பாரிவச் சிரத்தினாற் பன்றி
யாகி துண்டத்தாற் றசனத்தா னேமியா லழித்தா
ளாக வந்தனி னரசிங்கி யொலியுட னவுணர்
போக வென்றன ளாகிரினாற் புலவர்க டுள்ள 20

சண்டஞ்சே ரட்ட கரசத்தாற் றுன்னவர் மோகம்
மண்டி யேவிழ வுண்டனன் மாச்சிவ தூதி
மண்டி யப்படை யோர்டனு நிசும்பசும் பன்மார்
ஒண்டி றற்குமோ தவதியாம் பகினிபெற் றுள்ளோன் 21

வெஞ்சி னங்கொடே யிரத்தபீ சாசுரன் விரைவில்
வெஞ்ச மஞ்செய வடுத்தனன் மேதினி மிசையில்
வஞ்சன் மேனியின் குருதிசேர் துவன்மன் னியதே
லஞ்ச லில்லிரத் தப்பிச னொருவனாண் டெழுவான் 22

அனையன் சோணித பிந்துவு மம்புதி யாடை
புனையு மங்கைமேற் பொருந்திடிற் பொருக்கென வவுணன்
சனன மாம்வரம் பெற்றவன் போர்செயச் சாரத்
துணைவி யிந்திரா ணியுஞ்சத கோடியைத் தொட்டாள் 23

அமரர் தம்பகை சிரமறக் குருதிபாய்ந் தழியா
வமர வாபகை போற்செல வளவிலா விரத்த
மமர முன்னப ரத்தினிற் பீசஞ்சே ரவுண
ரமர வேதைத் தியமெலா மார்ப்புட னெழுந்தார் 24

மிடலு றுந்திதி புத்திர ரொடுமட்ட மேவு
மடலு றும்மனை மார்பொரு திடவிழி யருவி
யுடலு றுங்குரு திப்புன லிடையெழுந் துலப்பில்
கடலெ னும்படி பரந்தன ரிரத்தபீ சர்களே 25

மிக்க வன்னவர் கதையினுன் மாதரை வெகுண்டு
துக்க மெய்தவே மோதலுஞ் சுரர்குழு நோக்கித்
தொக்க தானவர் கணத்தினை யிக்கணந் தொலைப்பா
னக்கன் சத்தியே யருள்புரி யென்றனர் நடுங்கி 26

அன்ன காலையிற் சண்டிகை யமரர்கா ளொழிமி
னின்ன லென்றுபின் காளியை நோக்கியே யிசைப்பா
ளின்ன போதுநின் வாயினை யெங்குமாய் விரித்து
மன்னி ரத்தபிந் துக்களை மகிழ்வொடுங் குடித்தி 27

என்னி லோவிரத் தபீசர் வாயிடை யெழுவ
ரன்னர் தங்களை விழுங்குதி நீயென வறைந்தா
மின்னு சூலத்தா லவருடல் பிளக்கவீழ் குருதி
கன்ன லொன்றினிற் குடித்தனள் காளிதான் மன்னோ 28

அன்ன காலையி லிரத்தபீ சர்கள்சின மடைந்தெம்
மன்னை மேனியிற் கதைகொடு மோதலு மவட்குத்
தன்ன மேனுநோய் செய்தில தென்னெனிற் சத்தி
மின்னு சிற்சுக வுருவியாய் விளங்கலான் மன்னோ 29

குருதி சோடிக்குக் குருதிபீ சக்குழுக் குலைந்து
தரையில் வீழ்ந்திடத் தேவிசத் திரங்களை விட்டாள்
விரைவி லேற்றிரத் தப்பிசர் வீந்தனர் விண்ணோர்
உருகி யேமன மம்மையை யுவந்துபோற் றினரால் 30

சத்த மாதரு மொருத்தியுந் தேவியைத் தாழ்ந்து
பத்தி யோடுதோத் திரஞ்செய்து பரவினர் நின்றார்
சத்தி மான்மியத் தெட்டதாஞ் சருக்கமுங் கட்கு
மெத்து மன்பினு லுரைத்தனன் சேடமும் விரிப்பேன் 31

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## ஒன்பதாவது
## நிசும்பன் வதையுரைத்த அத்தியாயம்.

பத்தி யுற்றிடுஞ் சுரதனும் பூபதி முனியை
மெத்து மன்பொடு வணங்கியே விளம்புவன் விரித்த
ரத்த பீசன்றன் வதைமிக விசித்திர மன்னுந்
தத்தை நேர்மொழித் தேவிதன் சரிதமா மமுதம் 1

முனிவ நின்முகப் பாற்கடற் பிறந்தன மொண்டு
துனிய றப்படி யுள்ளெனும் பாத்திரத் துளையா
னனிய ருந்தியுந் திருத்திகண் ணிலமத னனீ
யினியை யாகியே சும்பன்செய் முயற்சியை யிசைப்பாய் 2

என்று மன்னவன் கூறலு முனிவா னிசைப்பான்
வன்றி றற்பெறு மிரத்தபீ சன்வதை கேட்டே
கன்றி யேசும்ப நிசும்பனுங் கடுஞ்சமர்க் கெழலுந்
துன்று சேனையெண் ணிறந்தன தொக்கன மன்னா. 3

சங்க மாதிய பல்லிய முழக்கொடுந் தானைத்
துங்க வீரருஞ் சதுரங்குஞ் சுலவிடப் போந்து
பொங்கு போர்செயச் சும்பனு நிசும்பனும் பொங்கி
நங்கை யோடுகோ தண்டப்போர் புரிந்தனர் நவையோர் 4

அனையர் விட்டிடுஞ் சரங்களை யம்பிகை யேவாற்
றனையி லட்டிட நிசும்பனுந் தோலகி தாங்கிப்
புனிதை வாகன மாய்வயப் போத்தின்கம் மெற்ற
வனிதை யுங்குரப் பிரங்கொடு வாளத ளறுத்தாள் 5

பின்ன ருந்நிசும் பாசுரன் சத்தியைப் பிடிக்கேக
முன்ன ரேவிடப் பரிதியான் முறித்தனண் முதல்வி
யன்ன வன்றிரி சூலத்தோ டடுத்தலு மம்மை
முன்னு முன்னரே முட்டிபா தத்தினான் முடித்தாள் 6

கதைசு ழற்றியே யன்னவன் விடுதலுங் கன்னி
வதைபு ரிந்திடுஞ் சூலத்தா லன்னதை மடித்தா
டுதையொ ளிப்பர செடுத்தவன் றன்னலு மம்மை
குதையு றுங்குழச் சரமெடுத் தன்னவற் குறித்து 7

விட்ட காலையி லவைபட மெலிவொடு நிசும்பன்
மட்டின் மோகமாய் வீழ்தலுஞ் சும்பனும் வலியோன்
எட்டெ ணுங்கரங் களிற்பல படைகளு மேந்தி
யட்ட காசஞ்செய் திரதமேற் கொடுசமர்க் கடைந்தான் 8

அனைய காலையிற் றேவியும் வளையெடுத் தார்த்து
நினைவின் முன்னரே குணவொலி புரிந்தன ணின்று
டுனையிற் சிங்கமுங் கண்டையுங் காளியுந் துகடீ
ரனையெ னுஞ்சிவ தூதியு மார்த்தனர் மன்னோ 9

ஆசை யெங்கணு நிறைந்திடுங் கண்டையி னரவான்
மாசு றுந்தைத் தியர்படைத் தேசுகண் மாண்ட
கேச ரித்தொனி யெங்கணு நிறைந்துகேழ் வண்டு
மூசு வாரண மாமத முருக்கிய தன்றே 10

அடன்மி குத்திடு மழூரியந் தாமிசைக் குதித்துப்
புடவி யெய்கியே கரங்களா லெற்றலும் பொற்பார்
இடிநி கர்த்திடு மொலியெழ முன்னுள விசைகண்
மடித லுற்றன பின்சிவ தூதிவண் சினத்தால் 11

அசிவ மாகிய வட்டகா சஞ்செய வமர்செய்
நிசிச ரக்குழூ வெருவியே நிற்றலுஞ் சும்பன்
சுசிபொ ருஞ்சின மடைந்தனன் றுர்க்கையுந் துட்ட
பிசித போசன நின்னிலென் றுரைத்தனள் பிறங்க 12

அன்ன காலையி லந்தரத் துறைந்திடு மமரர்
அன்னை நீசய சண்டிகை நீசய வடியே
மின்னல் போக்குவாய் நீசய வெம்பெரு மாட்டி
மின்னு மாபரை நீசய வென்னவாழ்த் தினரால் 13

வன்னி கூடநேர் காந்தியுஞ் சுவாலையு மருவ
மின்னு சத்தியொன் றதிபயம் புரிவது மேவார்
தன்னை யட்டிடு சும்பனாண் டெறிதலுஞ் சார
வன்னை யும்மகோற் கையினா லழித்தனண் மன்னோ 14

அயில ழிந்தது நோக்கியே சும்பனா மசுரன்
மயலு றப்புலி சிங்கநா தஞ்செய்து வந்தான்
இயலுங் கோரனா யபசயத் தாலல றினனாய்க்
குயினி கர்க்குழ லம்மைமேற் பொழிந்தனன் கோல்கள் 15

வாளி யாவையு மம்பிகை பொடித்துமன் னியுறும்
மீளி மேற்சர மழைபொழி தலுமவன் வெகுண்டு
தூளி யாக்கினன் சண்டிகை சூலம்விட் டிடவே
யாளி மொய்ம்பின னவசமா யவனியில் வீழ்ந்தான். 16

சும்பன் வீழ்தலு நிசும்பனாங் கொடியவன் சோக
முன்பு கொண்டது நீங்கியே சினங்கொடு முகிலுங்
கம்ப மாம்படி சரமழை பொழிதலுங் ககுபம்
உம்ப ருந்நடு நடுங்கினர் பரிதியு முலைந்தான் 17

காளி தேவிகை சரியுடல் சாத்திறற் காணா
தாளி யன்னவன் புரிந்துவா கயுகமங் கனைந்தே
யோளி யுற்றிடும் பரிதிக ளாலொளித் திடலு
மாளு மன்னையாஞ் சண்டிகை சரங்களா லழித்தாள். 18

பின்ன ரன்னவன் கதையெடுத் தடுத்தலும் பெரியாண்
மன்னு மைந்தசி யாற்பொடித் தாளவன் வலிசேர்
கொன்னு றுந்திரி சூலமேந் திடவமை குலவு
மன்ன வேதியா லிதயத்தைப் பிளந்தன ளன்றே 19

பின்ன மாமுளத் தலத்தினிற் பெருவலி யொருவன்
வன்னி நேர்பவன் பிறந்தன்னை தன்னைநீ மண்ணி
வின்ன லற்றிட வோடுறு தேநிலென் றிசைத்து
முன்ன ருற்றன னவன்சிர மசியினுன் முறித்தாள் 20

தால மீமிசை யனையவன் விழுதலுந் தாஞ்செய்
கோல வாகன மாமரி தந்தத்தாற் கொடியோன்
பானு றும் படை யழித்தது காளியும் பரிவாற்
சால வேதின்று குறைத்தன டானவர் படையை 21

பாமு றுஞ்சிவ தூதியு மவுணரைப் படுத்தாள்
வரனின் மந்திர பூதவா ரியின்மடி வித்தாண்
முருகன் பன்னியுஞ் சத்தியான் முடித்தனண் மூன்று
சிரமு றும் படை யான்மகே சன்மனை சிதைத்தாள் 22

கோலியுந் துண்ட காதத்தாற் கொன்றனள் கோல
மாலி னங்கையு மாழியாற் படுத்தனள் வலிசேர்
சால வுன்னத நாரசிங் கியுநகந் தன்னுன்
ஞால மீதழித் தனண்மருத் துவனெழி னங்கை 23

குலிச மாப்படை யாற்குறைத் தனள்சிவ தூதி
வலியு றும்வயப் போத்தொடு காளியு மற்றைச்
சலதி நேரசு ரப்படை யொழித்தனர் சாற்றிற்
குலவு மொன்பதாஞ் சருக்கமு முடிந்தது குணத்தீர். 24

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

## பத்தாவது

## சும்பன் வதையுரைத்த அத்தியாயம்

தன்பி னாநிசும் பன்னவ னிறந்ததுந் தானை
யென்பொ டிந்தவ னிறந்ததுஞ் சும்பனு மெறுழோன்
முன்பு நோக்கியே முனிந்தனை தன்னொடு மொழிவான்
றன்ப ளித்திடுந் தருப்பமுற் றனையிவண் டோகாய் 1

மற்றை யோர்வலித் துணையினால் வலியுடை யாணீ
அற்ற மின்றிய கருவமே னடைகுதி யறைதி
இற்றை யென்றனும் தேவியு மூடகே ளிவண்டா
னுற்ற வெப்பொரு ளும்மெனை ஒழித்துள வோசொல். 2

எனையொ ழித்திரண் டாவதா மொருபொரு ளில்லை
இனையர் யாருமென் பூதிக ளென்னிடை யொளிப்பர்
துனையிற் காணெனு முன்னரே தோகைசேர் சிகியை
யனைய தேவிய ரெவருமவ் வம்மைதன் றனுவில். 3

இலய முற்றபின் றேவியே காகினி யாகி
நலனு ணர்ச்சியிற் சும்பநீ நோக்குதி நானே
குலவு கின்றனன் சமர்புரி யென்னலுங் கொடியோன்
உலைவு றும்படி தேவியோ டமர்செயற் குற்றான். 4

சுரர் தைத்தியர் துண்ணென விருவருந் தொலைவில்
சரம ழைக்குலம் பொழிந்திரு வருஞ்சர மழித்தார்
இருவர் கோரவெஞ் சமங்கண்டு புவனமு மிளைப்பக்
கரமு றும்பகைப் படைக்கல மெறிந்தனர் கடுகி. 5

சமர்ச மத்திட னிருவருஞ் செய்துரித் தாழ்ந்தான்
அமரர் துண்ணெனச் சரமழை யம்மைமேற் பொழிய
விமலை லீலையாக் கோரவுங் காரத்தால் விளிப்ப
வமரர் யாவரு மம்மையைத் துதித்தன ரன்றே. 6

அன்ன காலையிற் றேவிதன் றனுவையா வரண
மென்னும் வண்ணமே யேவினன் மூடின னெறுழோன்
கன்னிசா பத்தை யேவொடு முறித்தனன் கடியோன்
மின்னு சத்தியேந் திடவது பரிதியால் வீழ்த்தாள். 7

பரிதி தன்கர நிகர்த்திடு மமலமாம் பரிசை
யெரியு மிழ்ந்திடு மொளியுடைச் சதமதி யென்னு
முரிய கட்கமு மேந்தியே போர்செய வுன்னி
யரியெ னக்குதித் தம்மைமுன் னெய்தின னழிவான். 8

கட்கந் தோலவன் கைக்கொண்டு தேவிமுன் கடுக
வுட்கு றும்படி யம்பினா லரியத னோங்கு
புட்கு லஞ்சுழ லிரதமாச் சூதனும் போரில்
விட்பு லம்பகை வர்க்களி விறனூறுந் தனுவும். 9

கண்ட மாக்கினள் கண்டுமுற் கரங்கொண்டு கடுக
துண்ட மாக்கினள் வாளியாற் சும்பனுந் துணையி
லண்ட ருட்கவே தேவிதன் னிதயத்தி லடல்சேர்
எண்ட குந்தன முட்டியா லெற்றினன் மாதோ. 10

மிடல் படைத்திடுஞ் சும்பன்ற னுரத்திடை மேவார்
உடல்கி ழித்திடுந் தலத்தினாற் றேவியு முறுத்தக்
கடனு டைப்புவிப் பதித்தவ னெழுந்துபின் கடுக
அடலை யிற்பொலி தேவியை யெடுத்தண்டமடைந்தான். 11

தான வாதிப னும்மமை தானுமம் பரத்தின்
மான வாகுப்போர் நெடும்பதம் புரிந்தனர் மன்னோ
ஞான நாயகி சும்பனைப் பிடித்துமண் ணண்ண
மேனி மிர்த்துச் சுற்றிக்கரத் தெறிந்தனள் விரைவில். 12

பின்ன ருஞ்சினங் கொண்டவன் முட்டியாற் பெரும்போ
ருன்னி வந்திடத் தேவியுஞ் சூலத்தா லுரத்தைப்
பின்னஞ் செய்தகல் பிருதிவி யிடைப்பதிப் பித்தாள்
அன்ன வேலையி லத்திரி தீவத்தி யோடும். 13

அவனி கம்பித முற்றிடச் சும்பனு மாவி
பவன நீங்கியே மடிந்தனன் பங்கயன் முதலோர்
தவமு றும்முனி சங்கமு மகிழ்ந்தனர். சகல
புவன முள்ளவ ருள்ளன யாவையும் பொலிந்த. 14

அண்ட மீமிசைப் பரிதியும் விளங்கின னதிகம்
மண்டு மன்பொடு நடித்தன ரமரர்தம் மாதர்
வண்டு றுந்தொடைக் கந்தருவர்க ளிசைப்பாட்டை
யெண்ட ரும்படி பாடின ரெழிலொடு மன்னோ. 15

விண்ட லங்கிம லத்தினை யடைந்தது விசும்பும்
மண்டு முற்கையைப் பொழிதலை மறந்தன மார்க்கம்
அண்டி யேசென்ற நதியெலா மமரரிற் சில்லோர்
எண்ட கும்பறை முழக்கின ரியங்கின சுவந்து. 16

ஒளிருங் காருக பத்தியத் தோடுதக் கிணத்தின்
மிளிரு தாசன னுகவ னியமென மேவுங்
களிசெ யங்கிகள் வலஞ்சுழித் தெழுந்தன ககுபம்
விளையு முற்பதப் பேரொலி சாந்தமாய் மேவும். 17

இன்ன வாறுபத் தெனும்பட லத்திடை யிசைக்கு
மன்ன காதையுங் களுக்கிவ ணன்பொடு மறைந்தேன்
மன்ன வைசிய தேவிமான் மியக்கதை மற்றுந்,
துன்னு மன்பொடு கேட்பிர்யான் சொல்வலென்
றறைவான். 18

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று

## பதினொன்றாவது
## தேவர்கள் நாராயணி தோத்திரமுரைத்த அத்தியாயம்

கொடிய சும்பன் றேவியினாற் குறைந்தே கமண்ணினிடைவீழ
நெடிய குலிசனுடன்வன்னி முதலாமமரர் திசை நெருங்கி
யுடலி லடங்கா மகிழ்வெய்தி யுரைத்த துதியை யுரைசெய்யு
மடலி லேனையினுந்தேவி யருளா லிங்கு சிலமொழிவேன். 1

* தேவி துக்க மகலவருள் செய்வா யுலக மாதாவே
தேவி யசர சரங்கட்குச் சிறந்த தலைவி சரணநம
தேவி சகல வுலகிற்குந் திகழா தாரப் பூவானாய்
தேவி சீவர் சீவனமாய்த் திகழூ மப்பி னுருவானாய். 2

தேவி யனந்த வீரியையே செகத்தின் வித்தா மரிமாயா
தேவி பரமை செகமயக்கித் திகழு முத்தி தருபவளே
தேவி கவிக ளிதயத்திற் றிகழ்விஞ் ஞான மளித்தருண்மா
தேவி வித்தை யுருவான திகழ்நின் கமல சரண்போற்றி. 3

தேவி சகல வித்தைகளுந் திகழ்நா ரியரு நீயானாய்
தேவி சகல வுலகத்துந் திகழ்வி யாபி யாய் நின்றாய்
தேவி சகல சன்வுளத்துந் தெளிபுத் தியினல் லுருவானாய்
தேவி சுவர்க்க மபவர்க்கந் தருவாய் நின்செஞ் சரண்போற்றி

தேவி காட்சா யணிகலையுங் காட்டை யாதி திகழுருவில்
தேவி பரிணா மங்கொடுப்பாய் திகழும் விசுவ நாசசத்தி
தேவி மூலப் பிரகிருதி திகழுஞ் சருவே சுவரிசிவை
தேவி யெழின்மங் கலப்பிரதை திகழ்சர் வார்த்த சாதிகையே

தேவி கௌரி சரணியையே திகழும் பரையே முக்கண்ணி
தேவி நாரா யணிமகத்தாய்த் திகழு மாயா ரூபிணியே
தேவி யளித்தல் பாலிக்க றிகழு மழித்தல் புரிபவளே
தேவி சகலை சைப்புகழ்சேர் திகழ்ச நாத நீவரையே. 6

தேவி குணவா சிரயமுடைத் தேவி யகுண மயமுடைய
தேவி நாரா யணிநமவே திகழும் பத்தி சீலத்தாற்
றேவி நினது சரணடைந்தார்க் கருளுங் கருணைத் திருவுருவி
தேவி சகலார்த்திகளழித்துத் திகழுஞ்சர்வ பூதையம்மே. 7

தேவி கமலா லயைநாரா யணியே திகழு மாமாயை, தேவி
யஞ்ச முறுமெழில்சேர் திகழ்வி மானத் தமர்பவையே, தேவி
யெழிலார் கமண்டலவா ரியினு னணைப்பாய் திகழ்வரதை,
தேவி நாரா யணிமகத்தாய்த் திகழு மாயை பிரமாணி 8

தேவி திரிசூ லம்மதிபாம் பணிந்த பவையே சேவேறி
தேவி யெழிலார் வடிவுடைமா கேசு வரியே திகழ்மாயா
தேவி மாசத்தியையேந்தி சிகண்டி யிறகுக் கொடியனைகை
தேவி கௌமா ரியின் வடிவ தானமுள்ளாய்செயசெயவே 9

தேவி சங்க மரிசார்ங்கந் திகழுங் கதையு மேந்தியுறும்
தேவி வைண விவிநதை சிறுவன் வெந்நிற் சேர்பவளே
தேவி கோர மாநேமி சேர்த்தாய் பூமி யேந்துதந்தத்
தேவி பன்றியுருவினளே சிவையே நினதுசரண்போற்றி. 10

தேவி யுலக முழுதுய்யச் செய்யு மிக்க விதத்தாளே,
தேவி கொடிய வசுரருயிர் செகுப்பக் கோர நரவுருவின்,
மேவு சிங்க வடிவமுளாய் விண்ணோர் பழிச்சு மொண்ணி
தியே, தேவி யெமையா ணாரணியே திகழ்நின் கமல சரண்
போற்றி. 11

தேவி யெழிலா ரைந்திரியே திகழ்வச் சிரமேந் தியதேவி
தேவி யெனையாள் கிரிடினியே திகழுநயன மாயிரத்தாய்
தேவி விருத்திரனைச்செற்றாய் திதியின் சுதர்தம் வலியழித்த
தேவி கோர ரூபிமகா ராவை சிவதூ தீநமவே. 12

தேவி கோர தந்தத்தாற் பயஞ்செய் வதனி சிரமாலை
மேவு மணியா யணிந்தாளே மிக்க வலிசேர் சண்ட முண்ட

ராவி யுண்ட சாமுண்டி யடியேந் துக்க மழித்தவளே
தேவி யுலகம் பாலிப்பாய் திகழ்நா ரணிநின் சரண் போற்றி.

அழியா வீர முடையாளே யகில மங்க லங்களுடை, யெழிலாரும்மங் கலத்தன்மை யுருவி நியதையுடனீசை, மொழியால் வேதமூனக்கெளணம் முக்கியம்மாயுரைப் பதனுற், பழியி னினது துதிப்பரம வாக்கும் பரையே நீயன்றோ. 14

தேவி செய்யா ஞண்சுவதை திகழ்மா வித்தை துருவையொடு, தேவி சிரத்தை மாராத்ரி திகழும் புட்டி சரசுவதி, தேவி மேதை மாவ்வித்தை பூதி ரசசி தாமசியே, தேவி யெங்கும் பாணிபதஞ் சிரங்கண் முகமூக் கொடு காதும். 15

தேவி நீயே பொருந்திநிற்பாய் திகழுஞ் சர்வரூபமுளாய்
தேவி சருவ சத்தியொடுந் திகழு வாய்துர்க் காதேவி
தேவி முக்க ணுறுநினது சிறந்த சாந்த முகம்பயங்க
ளோவ நீக்கி யெமைப்புரக்க வுனது பாதம் போற்றினமால்.

கோர வசுரர் குலமொடுக்கிக் கனல் கொப்பளிக்கு நின்சூல
நேரும் பீதி களைந்தெம்மை நித்தம் புரக்க வருள்காளி
சாருமசுரர் தேசழித்துச் சகத்திஞெலியா னிறைகண்டை
யாரும் பாவம் போக்கிமைந்த ராமெங்களைக் காத்திட
வருளே. 17

திதியின் சுதர்கள் குருதியொடு சேருமிதையத் தசைச் சேறு துதையு மொளிசேர் நினதுகட்கஞ் சுபங்க ளளிக்க வெங்களுக்கே, மதியின் வதனச் சண்டிகையே மாவார் காத்தியாயனியே. புதிய கஞ்ச நிகர்நினது பொன்னர் பாதம் போற்றினமால். 18

தேவி நினது திருவருளாற் சிதைந்து ரோக மகன் றொழிக, மேவ விட்ட காமியங்கள் விளங்கா சிரிதர் தங்க

ளுக்கே, வோவ வாபத் துனையடைந்தார் தம்மை யெவருஞ் சரணுறுவர், பாவ வவுணர் வதைபுரியப் பரைநீ யன்றி வேறெவரே. 19

ஞான நூல்கண் மனுநூல்க ணவிலும் வேதத் துட்பொருள்க, ளேன மிலவாஞ் செயற்காண்ட மனைத்து மிருந்து மிவ்வுலகை, மான மில்லா மாவந்த கார மமதைக் குழிச் சுழற்றும், மான முடையாள் நீயன்றி வேறிங் கெவர்சொன் மாதாவே. 20

ஒல்லை யெம்மை யரிபயத்தா லுனையா வண்ணங்காத் தருள்தாய், மல்ல லுலகி னகமொழிப்பாய் மாவுற் பாத பாகசமாம், அல்லல் மாரி யாதிகளு மடியர் துயரு மழித் திடுவாய், புல்லும் புவனத் தார்போற்றும் புவன வரதா யெனத் தொழுதார். 21

உற்ற மமதைக் குழிவீழ்ந்தே மோக விருளா லொளி மழுங்கப், பெற்ற ஞானக் கண்ணொளியைப் பெறுதற் கம்மே யருள்புரிவாய், வெற்றி யரக்கர் நாகமரி விளங்கு தாவ மாதிகளாற், பற்று துன்ப மகலவவண் பாலித் தருள்வாய் சிவதூதி. 22

விளங்கும் விசுவே சுவரியமே விசுவ பாலி விசுவ முழுங், களங்க மகலு முருவுடையாய் விசுவந் தரிக்குங் கன்னிகைநீ, வளங்கொ ளுன்னைப் பிரமன்முதல் வானோர் பத்தி யால்வணங்கித், துளங்கும் விசுவா சிரயர்களா யிருக்கின் றார்களெனத் தொழுதார். 23

என்று தேவர்கள் தோத்திரஞ் செய்தலு மெனையாள்
கின்ற வன்னையுங் கிருபையோ டவர்முக நோக்கி
யின்று நீவிர்க ளுலகர்க்கு நுங்கட்கு மின்ப
மொன்று நல்வர மிசைக்குதி ரெனவவ ருரைப்பார். 24

அகில நாயகி யெம்பெரும் பகையழித் தகனல்
அகில லோகமு மகிழ்ந்துதந் தொல்லையி னமைந்த

வகில நன்மையு மெங்களுக் களித்தரு ணினக்கே
அகில மங்கல பதம்பணிந் திடுங்கைமா றளித்தேம். 25

இத்தி றம்பகை யெதிர்பொழு துறிலெமை யிறையிற்
சித்த மீமிசை யருளொடு புரத்தனின் செய்லென்
றுத்த ரஞ்சொல வம்மைவை வச்சுத வுரவோன்
மெத்து மந்தரத் திருபத்தெட் டெனுமுக மேவும். 26

அன்ன காலையிற் சும்பனு நிசும்பனு மவுனி
மன்னு வாரவர் தமைத்தெற நந்தன்மா மகளாய்ப்
பின்னஞ் செய்தியான் பின்புவிந் தப்பிறங் கலிற்போய்
மன்னர் வீற்றிருந் தருளுவ னடுங்கலி ரென்றாள். 27

துட்ட ராகிய வைப்பிர சித்தர்தோற் றுவரா
லட்டன் னோர்குல முடித்திட வௌத்திரை யாகி
யிட்ட மோடவர்ப் புசிப்பல்யா னென்றந்தத் திரத்தம்
பட்ட தன்மையா லிரத்தந் திகையெனப் பகர்வர். 28

பின்ன ரும்மிவண் சதச்சமை வருடம்பெய் யாது
மின்னு மோர்குறை யப்பக லறவர்கண் மனத்தி
லுன்ன வேயயோ னிசையென வுரைக்கவுற் பவித்தே
யன்னர் தங்களை நூறுகண் ணலரு ளோடும். 29

நோக்கி யேயருள் புரிகுவ லெனையவர் நூறு
நோக்கு றுங்கய னத்தியாய் நொடிப்பரா விருட்டி
யார்க்கு மென்மெயிற் சாகத்தைப் பரித்தளிப் பதனாற்
பாக்கி யம்முறுஞ் சாகம்ப ரீயெனப் பகர்வார்

தர்க்க மன்னெனு மவுணனை யழித்தலாற் றுர்க்கை
யர்க்க சன்பய மடைந்திடும் பீமமா முங்கம்
புக்கி யான்பனிப் பதலையி லரக்கர்தம் பொலிவை
யக்க ணந்தனில் விழுங்கியே யறவரை யளிப்பன். 31

அன்ன காலையி லந்தணர் பணிந்தெனை யமலம்
மன்னு பீமதே வீயென வகுப்பவர்வண் டெண்ணி

றுன்னி டும்பிரா மரவுருக் கொண்டியான் றொலைப்பேன்
கின்ன மேபுரி யருணனு மசுரனைக் கேண்மின். 32

அன்ன காலையின் மூவுல கத்தமர் வாரு
மென்னை யேபிரா மரியெனத் துதிப்பரிவ் வண்ணந்
துன்னு தானவர் தங்களாற் றுன்பமுண் டாயிற்
கொன்னு றும்புவி யவதரித் தரிகளைக் கொல்வல் 33

இனைய வாறுமா முனிவான் பன்னொன்று மியம்பும்
புனைபெ ருஞ்சருக் கத்தினைப் பூபவை சியர்க்குத்
துனிய கன்றிடச் சொற்றனன் றுவத்தொடு தசமா
கனிபெ ருஞ்சருக் கமுமவ னயத்துடன் மொழிவான். 34

பதினொன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

* பாட்டு 2 முதல் 23 முடிய உள்ளவை வெள்ளிக்கிழமை தோறும் பாராயணத்திற்குறியவை.

---

## பன்னிரண்டாவது
## தேவி தேவர்களுக்கு வரங்கொடுத்த அத்தியாயம்

---

தேவர் கேண்மி னெனப்பினுஞ் சீர்பெறுந்
தேவி யுந்தயை யோடுரை செய்குவள்
பூவி லென்னையிவ் வாறு புகழ்பவ
ரோவில் போக முறுவரென் றோதினள். 1

அகில துக்கமுந் தீர்ப்பனஃதன்றியு
மகியில் வீர மதுவொடு மைந்துறும்
அகித னுன கைடவன் மாகிடன்
நிகாறுஞ் சும்ப னோடு நிசும்பனும். 2

என்று கூறு மிடருல கிற்புரிந்
தொன்று துட்டரை யட்டவிவ் வொண்கதை

றுன் று மன்போடு சொற்றிடு வோருமே
நன்று றட்டமி யோடு நவமியும் 3.

குறைய கற்றுபன் ஞன்கினி லுங்கொற்ற
முறையு மென்கதை யோதுவர் கேட்பவர்
இறையு மோக மகமெய்தி டாரென்றும்
அறையும் பாவச வாபத்தும் மேவிடார். 4

கொடிய துயர்செய் வறுமையுறூர் கூடாரிட்ட மனு காமை, யடையார் சோரர் நிருபர்களா லணுகும் பீடை யன ஞேயம், படையா லுறுமா பத்துகளும் படையா வண்ணம் புரந்தருள்வன், படன மெனது சரிதத்தைச் செய்வோர் கேட்போர் பலகாலும் 5

கோர மாமா ரியிற்றேன்றுங் கொடிய வுபசார்க் கமூமூன்ருய்ச், சேரு முற்பா தமுமணுகார் சிறந்த பத்தி யாலெனது, நேருங் கோட்டங் தனிலுரைத்தா னேருஞ் செல்வம் பூசைபலி, யாரு மெழில்சேர் திருச்சாற்றி லவனித் தேவர் போசனத்தில் 6

என்றன் சரித நினைத்திடினுஞ் சிரவித் திடினு மெவ்வெவருந், துன்றுஞ் செல்வ மனுபவிப்பர் தோற்ற பேத மான்மியமு, மொன்ற வுரைப்போர் கேட்டிடுவோ ருயர்வ ரிறையின் மனவிச்சை, மன்ற வடைவர் கெடு கனவு மன்னு சுகன வாய்மருவும் 7

சுபத்தின் மார்க்க மாமெனது சரித மொருவன் றுகளின்றிச், செபிக்கி னில்லி னவ்வில்லிற் றீரே மோமந் தனிற்செபிக்க தபிக்கு மொருவ னெனதுகதை சாற்றிப் பூசை பலியோமம், விபத்து நீங்க வறிந்தேனு மறியா தேனும் விதித்திடினும். 8

அன்பாய் மகிழ்வேன் பண்ணவர்கா ளரியா சாற்கா லந்தன்னில், என்பா லன்பர் வருடமுறு மெழிற்பூ சனையா

மாபூசை, இன்பாற் செய்வ ரவனெனது சரித மிசைப்பர் கேட்டிடுவோர், துன்ப நீங்கி எனதருளாற் சம்ப துறுவர் தூயோரே 9

என்மான் மியங்கேட் பவர்சுபங்க ளடைவர் பயத்தை யென்று முறார், அன்னோர் குலமுந் தழைத் தோங்கு மரிய சாந்தி கன்மத்திற், றன்னுங் கொடிய சொப்பனத்திற் சொல்லுங் கிரக பீடையிலும், கொன்னார் சரிதங் கேட்டிடுவ ரறிவு மிகுநற் குணத்தோரே. 10

கொடிய கிரக பீடையுப சருக்கங் கொடியர் பலம்பூதம், வெடிசெய் மண்ணை யாதிக்ளும் மிக்க வெனது மான்மி யத்தைப், படனஞ் செய்ய நசித்திடுமாற் படிப்போர்க் கென்னை வெளிப்படுத்தும், கடவு ளோரே பலிகுசுமங் கந்தந் தீபந் தூபமுடன். 11

ஒளியா ரட்டாங் கத்தாலு மோமத் தாலும் விப்பிரர்க்கே யளியா லளிக்கு முணவாலுந் தானத் தாலு மிரவுபகற் களியா லெனக்குப் புரியபிடே கத்தாற் கட்டு மலாதி விளியா விவித போகத்தா லோர்வற் சரத்தி னளிமேவும் 12

அன்ன வளியென் மான்மியத்தை யன்பா லோர்காற் கேட்பவர்பான், மன்னும் சிரவ ணத்தாலே பாவ மழியு நோயின்மை, துன்னு மரிகள் பயமணுகா தும்மான் முனியா லயனுற்சொன், மின்னு துதிகள் சுபமதியை யளிக்குங் காண்மின் மெய்யறிவீர். 13

மேவுஞ் சத்தாம் புருடர்சபை மிக்க பெருமை யுடையானுந் தேவர் குழுவே பாலருமுஞ் சீற்றப் பீடை தீர்ந்திடுமாற பூவின் மனுடர் சங்காத பேதந் தன்னிற் புணர்ப்பாக்குந் தேவி சரித சிரவணத்தாற் றிதியின் சுதர்பூ தாதிபயம் 14

தூரத் தோடு மாகவத்தி லெனது வலிமை சொலக் கேட்பிற், கோரப் பகைவர் பீதியில கொடிய வனத்தி

லடைந்திடினு, நேருந் தாவம் வளைந்திடினு நெருங்கு வனமேவ மும்முறினு, மாரு ிகள முற்றிடினு மாசர் கொல்வா னுரைத்திடினும். 15

இரணத் திடையி லரிகள்வளைந் திட்டா ரேனும் வாதத்தா லரண மாக வளைவுறினு மலைமேசர் கடல்வா யம்பிமிசைக், கரண மயங்கிப் பயமுறினுங் கடுஞ்சத் திரங்க ளேற்றிடினும். முரணார் நோயா ஹுட்கிடினு மூர்க்கன் சிங்கம் புலிசோரன். 16

நள்ளார் முதலா யினர்புரியு நலிவு மெனதுதோத்தி ரத்தால், விள்ளா வெருவி யகலப்போம் விண்ணோர் குழுவே விரைந்தகிலம், உள்ள துயருந் தீர்த்தருள்வ லென்ன வும்பர்க் குரைத்தருளி, யள்ளார் நயனி மறைந்திடலு மமரர் தந்த மில்லடைந்தார். 17

சுரலோ கத்தை யடைந்தமரர் துட்ட வசுரர் பயமின்றி
யுரனூர் தத்த மதிகார முஞற்றி வேள்வி யவி யுண்டு
அரிகண் மாண்டா ரெனக்களித்தே யம்மை பாத மிரவுபகற்
பரிவா லிதைய மிசையிருத்திப் பரசி வணங்கி வாழ்த்தி
னரால் 18

சும்ப நிசும்பர் தமைத்தேவி தொலைப்ப மற்றை யசுரர்குழாங், கம்ப மடைந்து பாதாளக் கண்ணி லொளித்தா ரிவ்வண்ணம், வன்பார் பெருமைப் பகவதியா மாயா தேவி சகமளித்த, லன்போ டளித்தன் மோக மதை யாக்க லவ்டன் வலியாமல். 19

கருணை வடிவி விஞ்ஞானஞ் சித்தி வேண்டு மடியர்கட்கு
விரைவி லளிப்பண் மாகாளி மேவு மாகா லந்தன்னின்
மருவு மாமா ரியினுருவாய் மன்னு வாளிவ் வண்டமெலா
மருளுங் கால யளிகால மழிக்குங் கால முச்சத்தி 20

அவளே யாவள் பிறப்பிறப்பு மில்லா தவளு மவளேயாம்
அவளே செல்வ முறுங்கால மில்லிற் கமலை யாயமர்வள்

அவளை வறுமை யுறுங்காலங் கேட்டையாகி யமர்ந்திடுவள்
அவளை குசுமந் தூபகந்த மாதி பொருளாற் பூசித்து 21

பத்தி யுடனே துதிப்பவர்க்குப் பாங்கார் தனமும் பழிப்பில்லாச், சுத்த குணமார் புத்திரருந் துகளின் மார்க்கந் தனிற் செல்லும், மெத்து சுபமார் மதிநீங்கா மிக்க செல்வ மிகுமாயுள், வித்தை முதலாம் பெருஞ் செல்வ மளிப்ப ளென்றான் முனிவேந்தன். 22

உலக மாதா வெவ்விடத்து முறைவ ளவளை வணங்கியிடி, னலகில் சிவங்க ளேவருக்கு முண்டா மென்ன வாசனுக்குங், குலவு குறங்குச் சாதனுக்குங் கோவார் முனிவன் பன்னிரண்டா, நலங்கொள் சருக்கத் தைத்தேவி நலமா ரருளாற் பகர்ந்தனனால்.

பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## பதின்மூன்றுவது
## தேவி சுரதவைசியர்களுக்கு வரங்கொடுத்த அத்தியாயம்.

பின்னு முனிவ னுரைசெய்வான் பீடார் நினையு நின்பினுறு
மன்னோன் றனையு மன்னியராம் விவேகமடைந்தவனை வரையும்
மன்ன மோகம் புரிபவடான் மாலின் மாயா தேவியதைப்
பின்னஞ் செய்வா ளும்மவளை பேணியவளைச் சரணடைவீர்

அனைய பரமே சுவரிபதமன்பிற் பணிவார்க் கபவருக்க, மினையுஞ் சுவர்க்க போகமுத லான வளிப்ப ளெனநிமல, முனிவ னுரைப்பக் கேட்டரசன் பின்னேனோடு முடி தாழ்த்துப், புனித விரதன் பதம்வணங்கிப் போனார் தவத்தைப் புரிந்திடவே. 2

சித்த மிசைத்தன் புரிபெறுமா றுன்னுஞ் சூரத வைசியனு
நத்தார் புனித நதிப்புளின நண்ணி யெனையா டேவியுரு
மெத்து மிருத்தி கையிற்புரிந்து தேவி சூக்க மிகச்செபித்துப்
பத்தியுடனம் மையைநினைந்து தன்னவுணவிற் பயின்றனரால்

பின்ன ருணவு சிறிதுமின்றிப் புறத்தின் மனமும் பெயராம
லன்னை பூசை மலர்தூபங் கந்த மோம மாதிகளான்
மன்ன வியற்றித் தந்தேக மலியு மிரத்தப் பலியீந்து
மன்ன னொடுபின் னவன்றானும் வணங்கியம்மை தனைத்
துதித்தார் 4

இனையவாறு மனமொன்று யெழிலார் தவத்தை மூன்றுசமை
யனைய ரியற்றி யமர்நாளி லம்மை கருணை கூர்ந்தருளித்
துணையி லெய்தி மனவேட்கை சொல்லி ரீண்டேயளிப்பலென
மனவன் வணங்கி யெனதுபுரி மாறு தெனக்குக் கணப்
பொழுதில் 5

கிடைக்குமாறு மறுபிறப்பிற் கிடைக்குமாறு மரு ளென்னத், தொடிக்கைக் கருணை யுருத்தேவி சூரத வரசற் கவ்வரத்தை, நொடிப்பி லடைவா யெனநொடிப்ப நோற்கும் வைசி யப்புனிதன், படிக் கண்வீழ்ந்து தேவிதனைப் பழிச்சி வரத்தைப் பகர்கின்றான். 6

எனக்குத் துன்பமளியகத்தோ டெய்துமமதை யெஞ் ஞான்று, மனக்கண் வாரா தருள்புரிவாய் மாயா தேவி மாதேவி, சினக்குங் காலற் காய்கால தேவன் றேவி சிவ ஞானம், அனுக்க மகல விக்கணமே யளிப்பா, யென்னப் போற்றினனால். 7

களியாற் போற்றும் வைசியனைக் கருணைத் தேவி கண் ணுற்றே யளியா லுரைப்ப ணின்விருப்ப மாற்ற வியக்கத் தக்கதுவாம், ஒளியார் ஞான மெனதுசா னுற்ற பத்தி யெஞ்ஞான்றும், விளியா தளித்தா மந்தத்தின் மேலாம் வீடும் வழங்குதுமால். 8

என்று கூறிச் சுரதனெனு மெழிலார் மகிபன் றனைப்
பின்னும், மன்ற லோதி பார்த்துரைப்பண் மன்ன வரிகடமை
வென்றே, யின்றே யெல்லாப் புவியினுக்கு மேக வரசாய்
முன்னுகிபாற், பின்றேய் பிறப்பிற் பரிதிமனை பிறங்கு சாவர்
ணையின கட்டில் 9

பிரிய மருளுஞ் சாவர்ணி யென்னு மனுவாய்ப் பிறந்திந்த
விரியு முலகை யாளென்ன விளம்பக் கேட்டே யவ்விருவ
ரரிய துதிகண் மொழிந்தாடிக் களித்தா ரனையர் கண்டிடவே
பெரிய தேவி மறைந்தனளாற் பேணு மடியார் வாழ்த்திடவே

தேவி யருளாற் சுரகமனன் றெவ்வர் தமைவென் றேநகரம்
மேவி யாண்டான் சின்னளின் மேலாம் வைசி யப்புனிதன்
லவ லிலகாம் ஞானமதை யுற்றான் சாவர் ணிப்பெயராய்த்
தேவர் வியப்பச் சுரதமனன் சேர்வ னெட்டாம் மனுவாகி

என்று மார்க்கண் டேயமுனி யெழிலார் தேவி மான்
மியமுந், துன்று புகழ்சேர் சுரதமனன் மநுவாய்த் தோற்ற
முறுமாறும், ஒன்ற வுரைப்பக் கேட்டருளி யோங்கு
முவகைச் சைமினியும், மன்ற வுளத்திற் றேவிபத மருவ
வழுத்தி யாடினனால். 12

இனைய வாறு பதின்மூன்று யியம்பு மத்தி யாயத்திற்
புனையுங் கதையை யாயிரத்தி லாறு நீங்கும் பொருவில்கலி
நனியின் பருணங் தனவருட நண்ணு மிதுன ரவிமனுயுக்
கெனுநா ளுந்த ராடமுறு மெல்லை யாகி யம்மிசைத்தேன்.

உலக மெல்லா நிறைந்துறையு மொளியார் தேவி மிகவாழி
யிலகு சிவனார் தாம்வாழி யெழிலார் தந்தி முகன்வாழி
கலப மயிலூர் குகன்வாழி கண்ணன் வாழி திருவாழி
யுலக தந்தை பாரதியோ டுற்று வாழி வாழியவே. 14

மதுர மளிக்குந் தமிழ்ப்பாவால் வகுத்த தேவி மான்
மியத்தை, யதிக விருப்பா யுரைப்பவர்கேட் பவர்களம்மை

திருவருளாற், புதிய வின்பம் பொருளறத்தைப் பூவிலடைந்தே தேகாந்தங், கதியை யடைவ ரடைவரெனக் கற்ற மேலோர் கழறுவரால். 15

மாத மூன்று மழைபொழிந்தே மலிக வளங்க ளெவ்வுலகு, நீதி யரசர் பொலிந்திடுக நீரோடக்க மணிவிளங்கப், போத மிகுத்தே யடியர்குழாம் பொங்கத் தேவி மான்மியத்தைக், காதலுடனே யுரைப்பவர்கேட் பவர்கள் கருதும் பொருளடைக. 16

இனைய வளஞ்சேர் தேவிபுக ழிசைப்போர் கேட்போ ரெஞ்ஞான்றும், மனையி லெழுதிப் புத்தகத்தை வைத்துப் பூசை புரிந்திடுவோர், இனிய செல்வங் கல்விமகப் பேறு தீர்க்காயுளுமெய்திப், புனித ஞான மடைந்துமிகப் பொலிவ ரம்மை திருவருளால். 17

வேறு

இன்ன தேவி யெழில்பெறு மான்மியம்
மன்னு மார்க்கண் டேயவட நூறனிற்
பன்னு சாவர்ணி மன்வந் தரத்தின்பாற்
சொன்ன தென்று துணிவர் புலவரே. 18

பதின்மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

**தேவி மான்மிய மூலம் முற்றும்.**

ஆகச் செய்யுள் 395.

# தேவி மான்மியம் குறிப்புரை.

## பாயிரம்.

1. பூவி—இலக்குமி, நாவி—சரசுவதி, மான்மியம்—மகிமை, தேவி—காளி, சேவி—நெஞ்சே நீ வழிபடுவாய்.

2. பொறி—இலக்குமி, திருவுரன்—திருமால், அஞ்சம்—அன்னம். பூதாரம்—பன்றி, உத்தமாங்கம்—முடி, தோம்—குற்றம், தூமகேது—நெருப்பு; புகையைக் கொடியாகவுடையது.

3. உமா தேவியாரே முத்தேவியராக விளங்குபவர், சுப்பிரமெய்—வெண்ணிறமேனி, கருமைபெற்றவள்—காளி.

4. அவுணர்கோன் — கயமுகாசுரன், வதனத்துஅத்தி—முகத்திலுள்ள தந்தம், அத்தி—அழித்தல், பொருள்—புத்திரன், பாலத்தியான்—பாற்கடலையுடையவன், மால். அம்புயத்தவன்—பிரமன்.

6. ஆனியம்—நாள். அராமானும்—பாம்பை ஒப்பாகின்ற. ஆணவம்திண்வல்லி—ஆணவமலமாகிய வலிய விலங்கு. விட்டு—விடுவித்து.

7. புலவர்—தேவர், கயவரன்—கசேந்திரன், பின்னை—நப்பின்னையார்.

15. புளினம்—மணல்திட்டு, அயிர்...குறி—மணலினலாகிய சிவலிங்கம். உகுகீரம்—சொரிகின்றகுடத்திலுள்ளபால், பரிசித்திட—உதைக்க, தண்ணம்—மழுப்படை.

17. மூங்கையர்—ஊமைகளாயுள்ளவர். விரும்பினரேல்—கதைசொல்லவிரும்புவாராஞல். எத்தகைய—எவ்விதமாக. வித்தகி—தேவி; "வித்தகந்தரித்த செங்கைவிமலையை" கம்பர். குண்டிகை—கமண்டலம். வித்தாரம்—அகலக்கவி.

18. கூர்மை—நுட்பபுத்தி, வாமனர்—குறளர். அத்தம்—கை. தாருமீமிசை—மரத்தின்உயரம். பலம்—பழம். ஏளனம்—இகழ்ச்சி. எகினம்—அன்னம். "நீரொழியப்பாலுண்குருகு" நாலடி.

19. குசைநுனி—தருப்பையின்நுனி. மதியர்—நுட்பபுத்தியர், குசாக்கிரபுத்தி என்பர். மஞ்ஞை—மூடன். விசயம்—சூரிய மண்டலம், பரிதி—சூரியன். வெங்கரம் — வெண்மையாகிய கிரணம், நிசி—இரவு. உறும்—தோன்றும்.

**தேவிதியானம்** ஏற்கும்—எதிர்த்த, வீட்டினள் — அழித்தவள், காய்ந்த—கோபித்த, அதிதம்—மேன்மை, வித்தகி—அறிவுருவமானவள், பவம்—பாவம்; பிறப்பு. குமைத்திட—அழிக்கும் பொருட்டு.

**நூல்வரலாறு** அங்கிரி—பாதம், பவம்—பிறப்பு, மனு—சாவர்ணிகமனு.

## நூல். முதலத்தியாயம்.

1. தரணிசூனு —சூரிய புத்திரன், அனுபாவம் — இச்சை (கருணை,)மாபாகன் —பெரிய பாக்கியமுள்ளவன், ஓவு—வருத்தம். த்தான்—அசை.

2. பூருவம் திகழும்—முன்பு விளங்கிய, அந்தரம்—இரண்டாவது மனுவந்தரம், பூவை—பூமியிலுள்ளவர்களை, துகள்-குற்றம், ஔரசசுதர்—விதிப்படி விவாகம் செய்து கொண்டவளிடம் பிறந்த பிள்ளைகள்.

3. வேலை-காலம், கோலா விதுவம்சியாம் அரிகள்—கோலா என்னும் பட்டணத்தை மிகுதியும் நாசம் செய்தவர்களாகிய பகைவர்கள், வசுந்தரை—பூமிதீனன்—பலம் குறைந்தவன். தவ்வு—கெடுதல். சாருவபௌமன்—சகல பூமண்டலங்களுக்கும் அதிபன்.

4. கலர்—கீழ்மக்கள், பண்டாரம்—பொக்கிஷசாலை, பலம்-சேனை, புரம்—தனக்குரிய பட்டணம்.

5. குரகதவெரிந்—குதிரையின் முதுகில், வரை அடை—மலையையடுத்துள்ள, ககனம் ஆட — காட்டில் வேட்டையாட, மறையவர்வரியன்—முனிவர்களில் சிறந்தவன்.

6. அங்கிரி—பாதம், மன்—அரசன், சற்காரம்—மரியாதை, உபசாரம். முளரி—காடு, ஓடி—திரிந்ததனால், நந்தின—கழிந்தன, மமத்துவம்—அபிமானம்.

7. எனபுரம்—என்னுடையநகரம், தரம்—ஒப்பு, ஆனியம்-காடு, கரம்பொரு—விடத்தைஒத்த, கிணகர்—அடிமைகள்.

8. கின்னம்—உபத்திரவம், கேடுறுதயையர்-இரக்கமற்றவர், இரண்டுபம் — பட்டத்தியானை, இரண்டு கருவிகளினால் நீரை யருந்துவது. தரியலர்—பகைவர், குளகு—இலையுணவு.

9. என்வழி — என்பின்னால், அனகம்பைஞ்ஞீல் — குற்ற மில்லாத எனது நாட்டுமக்கள், சாயை—மனைவி, சூனு—புத்திரன், என்னும்—என்பான், மணிகுயின் உறும் - மணிகள் பதிக்கப்பெற்ற.

10 சேத்தும்—ஒப்பாகின்ற, மாயோர்—அந்தப்புரமகளிர், உத்தமவியயம் —நல்வழியில்செலவு, கோசம்—பொற்களஞ்சியம், அரந்தை—துன்பம்.

11. எட்டியர்—வணிகர், நட்டம்—கேடு, கட்டம்—கஷ்டம், ஆனனம்—முகம், கானனம்—காடு, பட்டது — சேர்ந்ததை, சரதம்—உண்மை, பாலன்—காப்பாற்றுபவன்.

12. மகிபதி—அரசன், கேட்டவன்—வணிகன், விநதன்—பணிவுடையவன், பிரணயம்—அன்புடன், தனிகர்—பணக்காரர், ஊருசன்—வணிகன்.

13. நசை—ஆசை, பொருள்ஒடு —எனது புத்திரருடனே, உரிமைப்பொற்பினர் - மனைவியர், நிரசிக்க - தள்ளிவிட, நிரசியாய்-தள்ளப்பட்டவனாய், பரர்பொரும்—பகைவரை ஒப்பாகின்ற, அசுகம்—சுகமின்மை, பற்றுளோர்—நண்பர்.

14. சுதர்—புத்திரர், சீலர்—நல்லொழுக்கமுடையவர், அவசீலர்—ஒழுக்கம் கெட்டவர், தீனன்-மனதில்குறைபாடுடையவன்.

15. கீர்—சொல், சோத்திரம்—காதில், ஆயன்—கேட்டறிந்தவன், அத்தலுத்தர்—பொருளாசையுடையவர்கள், சேய்—புத்திரன், தனிசேர்ந்த—தனியே காட்டுக்குவந்த, அயர்ந்தமை—மனதில் தளர்ச்சியடைதல், சித்திரம்—விசித்திரம்; ஆச்சரியம்.

16. இயம்புவன் —பதில்சொல்வான், அமல—குற்றமில்லாதவனே, உவ் உவமம் இல்—அப்பொருள்களிடத்தில் சமானமில்லாத, நினைவு —அபிமானம், எவ்வம் —மனதில்துன்பம், திடமின்மை—மனத்தளர்ச்சி.

17. அளி—அன்பு, பொலிவு எய்தும்—அதிகரிக்கின்றது, நாயகம் —தலைமை; ஒள்நயம் - மிகுந்தஅன்பு, அறிகிலேன் —காரணமறியேன்.

18. தொடையன் — வணிகன், இன்னணம் — இவ்வாறு, பல—பலமொழிகள்.

19. முனி—சுமேதசமுனிவன், சற்கரித்து — உபசரித்து, இருத்த—இருக்கும்படி செய்ய.

20. கமைஉறு—கீரைப்பொருந்தியுள்ள, நீரசம்—தாமரை மலர், அல்லகண்டங்கள்—மனத்துயரங்கள், உமைபதி—சிவபெருமானே, சேத்தவன்—ஒத்தவன், முனிவன்.

21. பகவன்—பகவதியின் பிரதிசொரூபமாயுள்ளவன், தவநிதி—தவத்தைத் தனமாகவுடையவன், பரமாமஞ்சன்—பரமஹம்சன்; துறவிகளில் உயர்ந்தோன், புகர்—குற்றம், பிருத்தியர்—வேலைக்காரர்; மந்திரிகள். பத்தனம்—பட்டணம், பதகர்—பாதகமுடையோர்.

22. புரையோர்—குற்றமுடையவர், பாசம்ஈரும் — ஆசை இழுக்கின்றது, மமதை — அபிமானம், சீரில் — சிறப்பில்லாத கிருகம்—வீடு, உடல்—பொன்.

23. அளி — அன்பு, பாரம் — கரை, சோங்கு—மரக்கலம், மாபாக—பெரும் பேற்றையுடையவனே, ஞானம்—விஷயதோஷங்களை யறியும் அறிவு, மூடம்—தோஷமான விஷயங்களில் பிரியமும் மோகமும் கொள்கின்ற அவிவேகத்தன்மை, கின்னவிருத்தி—துக்கவளர்ச்சி.

24. எனகு பாலன்—என்று பூமியைக்காக்கின்ற அரசன், கேளா—கேட்டு, விடயந்தானும்—அவ்விஷயங்களும்; சுவை ஒளி ஊறு ஓசை நாற்றங்கள்.

25. பகல் அந்தம்—பகற்குருடுகள்; கோட்டான் முதலியன. நிசியந்தம்—இராக்குருடுகள்; காக முதலியன. இரவும் பகலும் குருடுகள் மண்ணுண்ணிப்பாம்பு முதலியன. துலியதிருட்டியுடையன—இரவும் பகலும் சமமான பார்வையுடையவைகள்; இராக்கதர் பூனை முதலியன. பிரமஞானம்—பிரமத்தைச்சேரும் அறிவு, மோகம்—அறியாமை, ஞானிகள்—விஷயஞான மட்டும் உடையவர்கள்.

26. ககம்—பறவை, மா—மிருகம், கழறப்படும்—மோகமும் ஞானமும் உண்டென்று சொல்லப்படும், வீ—பறவை, அண்டம்—முட்டை, உகம்—பூமி, அளித்து—இட்டு, சதனம் — இறகு, இகந்து—நீங்கி, துண்டம்—மூக்கு, போடித்திடும்—பாதுகாக்கும்.

27. பயிலும்—பறக்கும், அவை—அக்குஞ்சுகளை, பொருளால்—புத்திரர்களால், மரித்து—அடைய நினைத்து, எனது ஆம் சுழி—என்னுடையது என்பதாகிய சுழல், சமுசாரம். திதிசெய்—பிறப்பிறப்பில் நிலைபெறச் செய்கின்ற.

28. விபுதர்க்கு இறை—திருமால், யோகத்து அனந்தர்—யோக நித்திரை, தபுவில்—கேட்டிலிருந்து, வபுசில்-பெருமையில், உலகபதி—திருமால், மைந்து—வலிமை, சேதனர்—ஞானிகள், குபுதர்—இழிந்த புத்தியை யுடையவர்

29. வித்தை—பிரமஞானம், சருவேச்சுவரேஸ்வரி—சருவேஸ்வரர்களுக்கும் ஈஸ்வரியாயிருப்பவள், பரமை—மேலானவள், அவித்தை—மோககாரணமான மாயை.

30. பவம்—அவள்பிறப்பு, எவண்—எவ்விடத்தில், பிரபாவம்—பெருமை, கன்மம்—தொழில்

31, பூபாலன்கீர்—அரசன் சொல், கடிந்தவன்—முனிவன், கோபால—அரசனே, பின்னவன்—வணிகன், பூபால் ஆதி—தாமரை மலரிலிருக்கும் பிரமன், போதம் உறார்—அறியமாட்டார்,

32. அண்டம் தனு—உலகமாகிய உடம்பு, அருள்வான்—அருள்செய்வதற்கு, உலகு—உலகினர், தோற்றம்—பிறப்பு, வனம் மயம்—நீரின்மயம் (ஜலப்பிரளயம்).

33. அன்னவம்-கடல்கள், சங்கமம்-வானிலும் மண்ணிலும் இரண்டு கலத்தல்,ஐந்தலோர் அதிபன்—திருமால், கன்னம்—காது கட்டம்—மலம், குறும்பி. கடோர விக்கியாதன்—உக்கிரத்தினால் பிரசித்தியடைந்தவன், மன்னினன்—தோன்றினான்.

34. தானவர்—மதுகைடவர்கள், இதலை—திருமாலின் உந்தி, நீரசம்—தாமரை மலர், விரிஞ்சன்—பிரமன், கோள்—கொல்லுதல், வானவசிரேட்டன்—பிரமன். துயிலை—யோக நித்திரையாகிய தேவியை.

35. பிரமன் செய்த துதிகள் காளி சூக்தம் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. அருட்சத்தி-படைப்புச் சக்தி, பாலிப்பு—காத்தல், வீக்கு—அழித்தல், பரிப்பாய்—தரித்திருப்பவளே, சாந்தி—மனவடக்கம், சாவித்ரீ—ஒவ்வொரு காரியத்தையும் பிரேரேபிப்பவள், வேதமாதா—வேதங்களை உண்டாக்கியவள்.

36. திரிகுணப்பகுதி — மூக்குணங்களையுடைய மூலப்பிரகிருதி, மேதை—புத்திவிசேடம், மிருதி—நினைவுருவம், அத்தரி—பிரமத்தைத்தரித்திருப்பவள், நாண்—அகாரியத்தில் வெட்கம்.

37. ஏண் — வலிமை, சுவாகை — அக்கினியின் மனைவி, சுவதை —பிதிர்தேவதைகளின்மனைவி, சுதை—அமுதம், வடட்காரம் —யாகதேவனையழைக்கும் மந்திரம்.

38. அக்கரை-அட்சரை; வளர்தலும் தேய்தலுமில்லாதவள். அருத்தமாத்திரை—மெய்யெழுத்து, சொக்கு—அழகு, புலுதம்—உயிரளபெடை

39. புவனையின்பீசம்—ஹ்ரீஎன்பது, தேவி—தேவசக்தி, நவமின்—புதுமையானவெள்வனமுடையவள், ஆசுரி-அசுரசக்தி.

40. உருவலி—வடிவமும்சக்தியும், அனந்தர் — நித்திரை, இத்தலை —இவ்வுலகம்

41. காளராத்திரி — பிரமப்பிரளயத்தை யுண்டுபண்ணக்கூடிய இரவு. மாராத்திரி — எல்லோருக்குமுண்டாகும் இரவு, மோகங்கலக்கும் காளராத்திரி—மோகராத்திரி, மோகக்குழியில் தள்ளிப்பிறப்பிறப்புக்களையுண்டாக்குகின்ற ராத்திரி ரூபமானவள். இம்மூன்று ராத்திரியும் சேர்ந்து யோகநித்திரையைக் காட்டும் என்பர். புட்டி—புஷ்டி; உருவவிருத்தி. காந்தி—க்ஷாந்தி, அன்னியன் செய்த குற்றத்தைப் பொறுத்தல். துட்டி-துஷ்டி; கிடைத்தவற்றில் திருப்தி

42. கட்கினி-வாளையுடையவள், சூலினி-சூலமுடையவள், சக்கிரிணி-சக்கரமுடையவள், கோரை-பானபாத்திரமுடையவள், சங்கினி—சங்கத்தையுடையவள். கதினி—கதையையுடையவள், கதை தண்டு, முசுண்டி—இருப்புத்தடி, வாளி—பாணம், பரிகம்—வளைதடி. இதனால் காளியின் பத்துத்தோள்களும் குறிக்கப்படுகின்றன

43 சவுமியை — பக்தரிடத்தில் குரூரமில்லாதவள், கோரரூபி — அசுரரிடத்தில் குரூரமான தோற்றமுடையவள், விண்டு—திருமால், விடையான்—சிவன், யான்—பிரமன், பவம்—பிறப்பு.

44. நின்திரிசீர்—உனதுமுக்குணங்கள், ஆதாரம்—உடம்பு.

45. மத்தன்—மதமுடையவன், இத்தலே—இவ்விடம், இப்பொழுது. மோகம்நல்கி—(நின் மோகனரூபத்தைக் காண்பித்து) மோகமடையச்செய்து, இறையை—திருமாலே, எழுப்புதி—இவர்களைக்கொல்லுவதற்கு எழுப்புவாய்.

46. முன்னம் — எண்ணம், தாமசி—தமோகுணத்தை முக்கியமாகக்கொண்டுள்ள யோகநித்திரை, கோ-கண்கள், இதயம்-இருதயம், உரம்—மார்பு.

47. கருணைவாரிதி—அருட்கடலாகிய தாமசீதேவி, ஓவி—நீங்கி, கஞ்சன்—பிரமன், தானவர்—மதுகைடவர்கள்.

48. ஆகவம்—போரை, வாகு—தோள், வற்சரம்—வருடங்கள், மோகர்—மோகமடைந்தவர், முராரி—திருமால், நீவரத்தைக் கவர்—நீவிரும்பியவரத்தைப்பெற்றுக்கொள், நெடியன் - திருமால், "மோகமடைந்த அசுரர்கள் திருமால் வேண்டிய வரங்களைக் கொடுத்துவிட்டால் இப்பெண்ணோடு கூடிவாழலாமென்று நினைத்துத்திருமாலே வரங்கேட்குமாறு கூறினர்."

49. வஞ்சிதர்—திருமாலால் வஞ்சிக்கப்பட்டவர், கைதவம் முன்னி—தாமும்மனதில் வஞ்சகமான யோசனைசெய்து, ஓடைப்பட்ட—நீரோடையில் தோன்றிய, பங்கயம்—தாமரை, கண்ணன்-திருமால்.

50. மிடல்—வலிமை, நீரம்—தண்ணீர், சோதிநேர்ந்து—திருமாலும் அதற்கு உடன்பட்டு, சகனம்—தன்னுடைய உபஸ்தத்திற்குமேல் கொப்பூழின் கீழ்ப்பாகம்.

51. சுபர்ணன்—கருடன், சுபர்ணவாகன்—திருமால், நடம்பரி—நடஞ்செய்யும் குதிரைகளையுடைய, கோடிபதங்கர்—கோடிக்கணக்கான சூரியர்கள், நண்ணினர்கடுத்த — ஒன்று சேர்ந்தனர் போன்ற, நேமி—சக்கரம், கமலசம்பவன்—பிரமன், தாசாருகன் - திருமால்.

52. திதிமைந்தர்—மதுகைடவர்களின், மேதம்-கொழுப்பு, சித்தசன்சனகன்—மன்மதன்பிதா; திருமால்; மேதசினாலாகியது மேதனி.

53. சர்க்கம்—அத்தியாயம், சுரர்மொழி—வடமொழி நூல், தொகுத்தேன்—தொகுத்துச்செய்தேன்.

## 2-வது அத்தியாயம்.

1. பெருஞாட்பு—பெரும்போர், சென்றபோது—முற்காலத்தில், உகளர்—இருதிறத்தார், சதம்சமை—நூறுவருடங்கள், புருகூதக்கோ—இந்திரன்.

2. கருணையன்னவம்—கருணைக்கடலாகிய சிவபெருமான், பன்னகேசத்தளிமம்-ஆதிசேடனாகியபடுக்கை, கண்படையான்—தூங்குபவன்; திருமால்.

3 சைரிபத்துமுகன்—எருமைமுகமுடைய மகிடன், பாசி-யமன், பாசி—வருணன். இருவரும் பாசத்தைக்கையிலுடையவர். எல்லை—சூரியன், புரம்—பட்டணம், தொழில்கள்-அதிகாரங்கள், மடக்க்—தனக்குரியனவாக அபகரித்துக்கொள்ள.

4. அசலை—பூமி, இக்கின்னம்—இந்தத்துன்பம், பூவை—காயாம்பூவை, தேவிர்—தெய்வங்களே.

5. சீ-இலக்குமி, புகுடிகுடிலம்—புருவங்களின் வளைவினால், கோரம்தேசசு-உக்கிரமானஒளி, துண்டம்—முகம், ஆவிர்ப்பவித்த-வெளிப்பட்ட.

6. புஞ்சம்—கூட்டம், உர்வி—பூமி, வேணி—வானம், அருணம்குறும்பொறை—சிவப்பாகியமலை, கடையங்கி - ஊழித்தீ, கோரம்அளை இ—உக்கிரம்கொண்டு, அகிலககுபம்—எல்லாத்திசைகளிலும்.

7. அசலை ஒளிநிதம்பம் — பூமியின் ஒளியால் கடிதடம் சௌமியம்—சந்திரனொளி, குயம்—தனம், யாமியம்-யமனது ஒளி, கேசபாரம்—கூந்தல்.

8. பொன்கரம்—அழகியஒளி, வாருணம்—வருணனுடைய ஒளி, ஊரு—தொடை, சங்கை—கணைக்கால், ஒளியின்ஒளி—சூரியனுடையஒளி, அத்தாங்குலி—கைவிரல்கள்.

9. பிரசாபதிகள்—தட்சன் முதலிய உபப்பிரமாக்கள், தசனம்—பற்கள், சந்திகள்—இரண்டு சந்தியா காலங்கள், பிருகுடிகள்—புருவங்கள், வந்து கிரணம்—காற்றினுடைய ஒளியால், சிரவணம்—காது, சிவை—சிவசக்தி, சிவையென்னும் இத்தேவியே மகாலட்சுமியெனப் பெயர் பெறுவாளென்று தேவிமகாத்மிய ரகசியம் தேவீபாகவதம் முதலிய நூல்கள் கூறுகின்றன.

10. காலகாலன்—சிவன், வடசாயி—திருமால், நேமி—சக்கரம், பரிதி—சக்கரம், கடற்கோன்—வருணராசன், கம்பு—சங்காயுதம், தகனன்—அக்கினி. சத்தி—சதக்னி என்னும் வேல்.

11. பவன நாதன் — வாயுதேவன், தவர் — அம்புகள், பாணவாவம்—அம்புப்பட்டி, தவனகுலிசம்—நெருப்புப் போன்ற வச்சிராயுதம், தண்டன்—யமன், சலசன்—பிரமன், தவளமாலை—முத்துமாலை, கமண்டலம்—பாத்திரம், வாரிபதி—வருணன்.

12. சண்டன்—சூரியன், கசகூபம் - மயிர்க்கால்கள், காலன்—யமதூதன், துத்தவாரிதி—பாற்கடல், ஆரம்—முத்துமாலை, அசரம்—அழிதலில்லாதது, இருமடி—உத்தரீயம், அந்தரீயம் என்னும் ஆடைகள்.

13. மேலும் பாற்கடலானது, அருத்தமதி—பிறைவடிவான நெற்றியிலணியும் அணி, கேயூரம்—தோள்வளையம். நூபுரம்—சிலம்பு, கண்டப்பணி — கண்டிகை, மணிகள் — விரலிலணியும் அங்குலீயரத்நங்கள், பரசு—கோடாலி, ஏ—அம்பு, கவசம்—இரும்புச்சட்டை.

14. சலதி—சமுத்திரம், கமலத்தொடை — தாமரைப்பூமாலை, குசுமம்—தாமரைப்பூ, இமவான்—மலையரசன், வய்ப்போத்து—சிங்கம், உடலீசன்—குபேரன், மத்தியம் நசியா—கள் குன்றயாத, பாண்டம்—பானபாத்திரம்.

15. பன்னகேசன்—ஆதிசேடன், பணியாரம்—நாகவடிவான மாலை, ஏனைநாகர்—மற்றத்தேவர், பணிபடை—அணிகளாலும் ஆயுதங்களாலும்.

16. மானிதை—தேவர்களால் வெகுமானம் செய்யப்பட்டவள், இருக்கும் அளப்புஅரிய—இருக்குமுதலிய வேதங்களால் அளந்து சொல்லுதற்குக்கூடாத, அட்டகாசம்—பெருஞ்சிரிப்பு, மகிதரம்—மலை, வசுந்தரை—பூமி, நடுக்கம்மன்ன—நடுக்கத்தையடைய.

17. அசலை கம்பித்தல்—பூமி நடுங்குதல், தைத்தியர் தோன்றல்—மகிடாசுரன், நட்டவர்தம்குழு—உறவினராயுள்ள பிரதானமான அசுரர் கூட்டம், நண்ணினன்—அன்னையின் அட்டகாசந்தோன்றிய இடத்தையடைந்தான்.

18. வசுதை—பூமி, அசலை—பூமியானது, அங்கிரிவைப்பில் அமிழ்தலும்—(அத்தேவி) பாதத்தைக் கீழேவைப்பதால் கீழே தாழ்தலையும், நன்மகுடம்—கிரீடம், நபம்மன்னலும்—ஆகாயத்தைப்பொருந்தவும்.

19. போகி—எட்டு நாகங்கள், திக்கயம்—எட்டுத்திக்கு யானைகள், வாகுசங்கம் மலிவும்—தேவியின் தோள்களின் கூட்டம் நிறைதலையும், குணத்தொனி—தேவியின் வில்லின் நாணொலி, நோக்கி—அசுரர்கள் பார்த்து, மண்டினார்—தேவியின் சமீபத்தில் நெருங்கினார்கள்.

20. வாளி—பாணம், தூளி—புழுதி, ஆண்டையர்—அவ்விடத்திலுள்ள தேவர்கள், யாளி—சிங்கம், மீளி—பலம்பொருந்தியவன்

22-23. அயுதம்-ஆயுதம், பாறுஅடுத்த-ஓடுதல் பொருந்திய, பருந்துகள் பொருந்திய எனினுமாம், குயவொடு—தேர்களுடன் நியுதம்—லட்சம், அயமுறும்—குதிரைகள் பூட்டப்பெற்ற, அறுநூறயுதம்—அறுபது லட்சம்தேர்கள்.

27. சகசிரம்—ஆயிரம், வீடல்மேவ—அழிதலைப்பொருந்த,

29. சிங்கவாகினி—சிங்கவாகனமுடையவள்; தேவி, சத்திரம்—வேல், அத்திரத்தாரை—அம்புமழை.

30. யானைக்கு அரி—யானைக்குப் பகைவன், வீரன்—சிங்கவீரன், சேனைக்கானம் நடு—சேனையாகிய காட்டின் நடுவில், கனலில்—நெருப்பைப்போல.

31. முளிபுற்கானை—வறண்ட புற்காட்டை, முளரிஎன—நெருப்புப்பற்றி எரிப்பதுபோல, தளம்—அசுரசேனைகள்.

33-34. சித்திரப்புரம்—யமபட்டணம், வண்டர்—துஷ்டர்; அசுரர்.

35-36. கோவில்சாய — பூமியில் சாயும்படி, முசலம்—உலக்கை, மெய்க்கறை—உடம்பிலுள்ள இரத்தம், பூ—பூமி. கோளுற்றார்—கொலையையடைந்தார், வாகு—தோள், சங்கம்—கணைக்கால், நடு—இடுப்பு, தனிக்கோதனிச் சரண்தனித்தோள் கொண்டனர்—(சிலர்) ஒரு கண் ஒருகால் ஒரு தோள் பெற்றனர், கோ—கண்.

37-38. அரியர் சிலர்—துட்டர்கள் சிலர், தானவன்—மகிடன், கவந்தம்—உடற்குறைகள், மானம்ஆகவம் பாரிடை—பெரிய யுத்தபூமியில்.

39-40 சமப்புவி—போர்க்களம், குஞ்சராரி—சிங்கவீரன். உயிரினைத் தேடுதல்—அசுரருடலில் எங்கேனும் உயிருளதோ வென்று தேடுதல், மருவார்—பகைவர், அடவியில் வன்னி—காட்டில் நெருப்பானது.

41-42. குசுமம்—பூ, அற்பு—அன்பு.

## 3-வது அத்தியாயம்.

1. மருத்துவன் அரிகள்—இந்திரனுடைய பகைவர்கள், அம்மைகோற—தேவியானவள் கொல்லவும், பிறங்கல்—மலை, மங்குல்—மேகம்.

2. மாவலி—மிக்கவலிமை, தோணி—அம்பு, காதி-அழித்து, மீனலோசனி—தேவி, தூவலி—மிக்கவலிமை, தூண்டுவோர்—தேர்செலுத்துவோர், தவர்—வில், கேதனம்படுத்து—கொடிகளையும் அழித்து, தனுவை—அவனது உடம்பை.

3. நாந்தகம்—வாள், சருமம்—கேடயம், வாமம்—இடது பக்கம்.

4 நாட்டம்—கண்கள், பகையெறிகவிர்—பகைவனுகிய சிக்குரன் வீசியவாள், கோட்டின்—நுனியினுல், மாது—தேவியின்.

5. தந்திகந்தரத்து இவர்ந்து—யானையின் மத்தகத்தில் ஏறி.

6. மாதங்கக்கும்பம்—யானையின் மத்தகத்தின், மத்தியத்து-நடுவில், அரிமருவி—நெருப்பைப்போல் ஏறியிருந்து

7. பாணியுத்தம்—கைச்சண்டை, வாகு அடியால்—தோளில் ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்வதால்.

8. வயமுடைப் போத்து—சிங்கம், கரப்பிரகரம்—கையாகிய ஆயுதம், கையினது அடியினுல்.

9. பாதவம்—மரங்கள், குறும்பொறை—மலை, துப்பு அற—வலிமை கெடும்படி, குபதத்தினில்—சிறிது நேரத்தில், தலம்—விரல் விரித்த கைகளினுலும், தந்தம்—பற்களினுலும், முட்டியால்-குவித்த கைகளாலும்.

10. பிண்டிபாலம் — எறிவேல், ஆவம் தோணி — அம்புப் புட்டி, தாமிராந்தகர்—தாமிரன் அந்தகன் என்பவர்.

11. மூன்று நாட்டத்தன்—திரிநேத்திரன், நவிர்—வாள்.

12. ஏ—அம்பு, நயனம்—கண்கள், பாடலம்—(கோபத் தால்) சிவப்பு.

13. மாகிடம் — எருமைக்கடா, ஆகவம் — போர்க்களம், துண்டத்தின் அடியால்—முகத்தின் அடிப்பாகம், தோகம்—வருத் தம், குரம் தொழில்—குளம்பினால் உதைத்தல், மோகம்—வருத் தம், மயக்கமுமாம், வாலதி—வாலினால் வீசுதல்.

14. மருப்பால்—கொம்புகளினால், கம்பலை—சப்தம், கத்து தல், பிரமணம் —சுழற்சி, நிசுவாசம்—வெளிவிடும் மூச்சு.

15. மிருகக் கோவினை—சிங்கவீரனை, வெய்யவன்—மகி டன், கோடு—கொம்பு, பூதரக்கோடு—மலையின் சிகரங்கள், குரம் வைப்பு—குளம்புகளை தூக்கிவைத்தல், மகிதலம்—பூமி, நாலை பானம் கந்தரம்-கடலைக்குடித்தலையுடைய மேகம், இரலை-கொம்பு.

16. வேகஞ்சேர் கொட்பு—வேகத்தோடு கூடிய சுழற்சி, புடைப்பு—அடித்தல், அம்புதி—கடலை, புடவியெங்கணும்—பூமி யின் எல்லாவிடங்களிலும், புரட்டி—புரளும்படி செய்து, உயிர்ப்பு- பெருமூச்சு, பொங்கி—கொதித்து மேலெழும்பி, தடம் மகீதரம்— பெரிய மலைகள், சதம் ஆக—நூறாய்ப் பிளக்கும்படி.

17. அற்றம் அன்னதில்—அந்தச்சமயத்தில், அரியுரு-(மகி டன்) சிங்கவடிவம்.

13. வேலை—சமயம், நாட்டம்—வாள், சருமம்—கேடயம், தோணி—அம்பு, கரியென —யானைபோல, மூடன்—மகிடன்.

19. வாரணத்துரு மன்னினன்—யானை யுருவங்கொண்ட மகிடன், அரியினை-சிங்க வீரனை, காரணம்-வலிமைக்குக்காரணமா யுள்ள, துதியத்தம்—தும்பிக்கை, வலித்திட—வலிந்திழுக்கவும், கன்னி-தேவி, சீர்அண் அத்தம்-சிறப்புடைய அவனது துதிக்கை, நவிரினால் சேதிப்ப-வாளினால் வெட்டவும், தேவர்ப்பாரணத்தவன் —தேவர்களை யுபவாசமிருந்து உண்பவன் (மகிடன்) வடவை யின் உரு—எருமை வடிவம்.

20. நாகம்தனை உறழ்ந்திடும்—நாகபாம்பைப் போன்ற வீரியமுடைய, தர்ப்பசத்துவன்—கருவகுண முடையவன்.

21. காளபம்—போரில், குவில் கோட்டணபுரிந்து-பேரொலி செய்து, வாளம்பப்புறு—வாளை ஒத்திருக்கின்ற, மருப்பினல்—கொம்புகளினல், பிறங்கல்கள் வவ்வி—மலைகளைத் தூக்கி, பம்பதி கோவினள்—சந்திர கிரணத்தைத் தரித்துள்ளவள் (தேவியினுடைய), மேனியோகிப்ப—உடம்பின்மேல் எறியவும், கோள—கொல்லுதலையுடைய, வாளி—பாணங்கள், குமரி—தேவி, குறைத்தாள்—அவன் வீசிய மலைகளை உடைத்தாள்.

22. மதம்—கருவம், காதகன்—கொலைஞன், கர்ச்சனம் செய்தி—கர்ச்சனை செய்து கொண்டிருப்பாய், நீவீதல் உறின்—நீ இறத்தலை அடைந்தால்.

23. அவன் மேனிமேல் இவர்ந்து—அவனது எருமைவடிவான உடம்பின் மேற்குதித்தேறி, வலியுற ஊன்றி—வலியுண்டாகும்படி மிதித்து, விமலை—தேவி, சென்னித்தாரணம்—அவனது கழுத்தை, எற்றலும்—அடிக்கவும், தன்முகம்—தன்னுடைய எருமை முகத்திலிருந்து, அருத்த காயம்—நிசமாகிய அசுர வுருவில் பாதியுடம்பு, வெளித்தோன்ற—வெளிப்படவும்.

24. வலியுற ஊன்றியும்—தேவி அசுரவுருவம் பாதிக்குமேல் வெளிப்படாதபடி அவனை மிதித்துக்கொண்டிருக்கவும், அருத்தம் நிட்கிராந்தனய்—அசுர வுடலில் பாதி வெளிப்பட்டவனயிருந்துகொண்டே, போர்மன்ன—போரைச் செய்யவும், கட்கத்தினல்—வாளினல், நாரி—தேவி.

25. மகிடன் பலம்—மகிடனுடைய சேனைகள், பூவிடைபாறலும்—பூமியில் விழுந்து அழியவும்.

26. கானம்—இசையை, புரிந்தார் — விரும்பிப்பாடினர், நானம் — கஸ்தூரி வாசனை, கந்தரம் செறிந்திடும் — கூந்தலில் பொருந்தியுள்ள, கந்தரம்—உவமையாகு பெயர், கழுத்து எனினுமாம்.

## 4-வது அத்தியாயம்.

1. இறை—தேவேந்திரன், கன்னி—துர்க்கை, தலையிறக்கிட்டனர்—தலைகுனிந்து வணங்கினார்கள், கடத்தில்—உடம்பில், புளகம்—மயிர்க்கூச்சல்.

2. அகிலம்—எல்லாம், சுரர்கணம்—தேவர்களின் கூட்டம், வலி அவையின்மூர்த்தி — சக்திக் கூட்டங்களின் வடிவுமுடையவள், "நிச்சேஷ தேவகண சக்தி சமூக மூர்த்தியா" வடநூல். விகலம்—குறைவு.

3. இடும்பை வினையுருவகை—துன்பம் தரும் தீவினைகள் உண்டாகாதபடி, மங்கலை—மங்கள முடையவள், மங்கலம் விளங்க—நன்மை யுண்டாகுபடி, அளித்திடக் கடவள்-காப்பாற்றத் தக்கவளாவாள், பிரபாவம்—பெருமை, பகவன்—பிரமன், அரன்—சிவன், அனந்தன்—திருமால், படுமோ—அளவிட்டுச் சொல்ல முடியுமோ.

4. லோகபாலனம்—உலகங்களைக் காப்பாற்றுவது, அசுபம் சூர் இறவும்—கெடுதலைப்பற்றிய பயங்கள் அழிவதன் பொருட்டும், தாத்திரீமுதல் உலகு அன்னை—பூமி முதலிய உலகங்களுக்கு ஆதாரமாகிய தாயே, சுகிர்தி மந்திரத்தில்—நல்ல காரியங்களைச் செய்பவருடைய வீட்டில், சீ அதாய்—சம்பத்தைத் தரும் இலக்குமியாயிருக்கின்றாய்.

5. பாவர் மந்திரம்—பாபகாரியங்கள் செய்பவருடைய வீடுகளில்; மூகடியாய்-அலட்சுமி(மூதேவியாய்); புண்ணியர் உள்ளில்-அறம்செய்வோருடைய மனதில், சிரத்தை—வேதாகமங்களில் சொல்லப்பட்டுள்ளவைகளில் உள்ள நம்பிக்கை, நாண்—தகாத காரியங்களில் வெட்கம்.

6. நமம்—வணக்கம், மாயை—பிரகிருதி மாயை, அசிந்தியம்—சிந்திக்கமுடியாதது, வீரம் சொற்றிடும்—நினது வீரத்தையும் அப்படியே சிந்திக்க முடியாததாய்ச் சொல்லப்படும்.

7. எது—மூலகாரணம், சருவ ஆசிரயம்—எல்லாவற்றிற்கும் இருப்பிடம்.

8. சகமிது—இந்த உலகம், நின் உரு அமிசம்—உனது வடிவத்தின் ஒருபாகம் ஆகும், முதற்பகுதி—மூலப்பிரகிருதி, அவ்

வியாகிருதை—வெளிப்படாமலிருப்பவள், உலகமென்னும் காரிய வடிவில் வெளிப்படுகின்ற மாயை மூலப்பிரகிருதி. காரணவடிவில் வெளிப்படாமலிருக்கும் மாயை அவ்வியாகிருதை. தேவி இவ்விரண்டு வடிவங்களுமுடையவள். வியக்தாவ் வியக்த சொரூபிணி, லலிதா சகஸ்ரநாமம் 399.

9. மகம்—யாகம். சுவாகை—வேள்வித்தீயில் தேவர்களுக்குக் கொடுக்கும் அவியுணவைத் தேவர்களிடம் சேர்க்கும் அக்கினி சக்தி, சுவதை—பிதிர் தர்ப்பணம் சிரார்த்தம் முதலியவைகளில் பிதிரர்களுக்குக் கொடுக்கப்படும் உணவைப் பிதிரர்களிடம் சேர்ப்பிக்கும் பிதிர்பத்தியாகிய சக்தி, கன்மம் — பிதிர்தருப்பணம், சிரார்த்த முதலியவை.

10. மாவிரதை — மகாவிரதங்களையுடையவள், செருந்த கொத்துப்போன்ற இந்திரியர்—அடக்கப்பட்டவைகளும் பூங்கொத்துப்போலத் தொகுதியானவைகளுமாகிய ஐம்பொறிகளையுடையவர், "பஞ்சமலக்கொத்து" என்பர் உமாபதி சிவம். காமர்—விருப்பமுடையவர்.

11. வித்தை—ஸ்ரீ வித்தை, மனை—மனைவி, மூலத்தொனி—வேதங்களின் ஆதிகாரணமான சப்தரூபம்.

12. துர்க்கம் — தாண்டுதற்குக் கூடாதது, ஒண்புனை — சிறந்த தெப்பமாகவுள்ளவள், மேதை-சரசுவதி, தந்திரபோதை—எல்லா நூல்களிலுமுள்ள சாரமாகிய ஞானத்தை யுணர்ந்தவள், விண்—சுவர்க்க முதலிய போகவுலகங்கள், ஈதல்—படைத்தல்.

13. சிதரன் உரம்—திருமாலின் மார்பு, சங்கரபன்னி—சிவன்மனைவி.

14. அசங்கை—ஒன்றிலும் பற்றில்லாதவள், வேதத்தின் மும்மை—இருக்குயசுர்சாம மென்னும் மூன்று வேதங்களாயிருப்பவள், அணுக்கள் மேவுதற்கு—உயிர்கள் வாழ்வதற்கு, பயிர் விருத்தி ஆதி—உழவுத்தொழில் முதலிய தொழிலுருவங்கள், யாதனை—துன்பங்கள்.

15. தேவி நீ முக்குணங்களையுடையவளாயிருந்தும், அவற்றினால் வரும் ராகாதி தோஷங்களினால் மனதையிழுக்கும் ஐம்புல விஷயங்களில் சேராதவளே என்பது முன்னிரண்டடியின் பொருள்.

16. கனகம் உத்தம நகைவதனம்—பொன்போல மேலான ஒளி விளங்குவதாகிய உன்முகத்தை, முன்னர் நின்றும்—எதிர் நின்று பார்த்தும், எற்றினன்—உன்னை அடித்தான், ஆனனம் குபிதம்—உன்முகத்தில் உண்டாகிய கோபத்தையும், இது அடுத்த செய்யுளில் முடிகின்றது, மகிழ்ச்சி தருவதும் ஒளி பொருந்தியதும் ஆகிய தேவியின் முகத்தைப்பார்த்து மகிழ்ச்சியடைய வேண்டியது நியாயமாயிருக்க அங்ஙனம் செய்யாது அடித்தான் என்பது ஆச்சரியம் என்பது கருத்தாம்.

17. பிருகுடிக்கராளம்—புருவங்களின் நெறிப்பினால் உண்டாகிய பயங்கரத்தையும், சசாங்கத்து ஒளிப்பிழம்பு—சந்திர பிம்பம் போன்ற உன்முகத்தின் சிவந்த ஒளியின் திரட்சியையும், உயிரினை விட்டிலன்—மகிடன் பயங்கரத்தால் உயிர்விடாதிருந்தான், குபிதவந்தகன்—கோபத்தோடு கூடிய யமன், எவர்—யாவர்; ஒருவருமில்லை.

மகிடன் தேவியை யடித்தபின்பு கோபமிகுதியினால் தேவிக்கு முகத்தில் உண்டாகிய பயங்கரமான புருவ வளைவினையும் சிவந்த ஒளியையும் கண்டும் மகிடன் சாகாமல் இருந்தான் என்பது ஆச்சரியம், இதனால் மகிடனுடைய தீரம் விளங்குகின்றது.

18. கட்கம்—வாள், தானவர்—அசுரர்கள், நயனங்கள் முகிழ்த்தில-கண்கள் அவியவில்லை, உன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபடியால் உனது உக்கிரமான வாள் சூலம் ஆகியவற்றின் உக்கிரமான பேரொளியால் அசுரர்களின் கண்கள் அவியவில்லை, மூடவில்லை யெனினுமாம்.

19. தேவி உயிர்களுக்கு அருள்புரியும் இயல்புடையவளாதலின் அவளை நீ அருள்செய் என்று வேண்ட வேண்டியதில்லை என்பதாம.

20. சகம்—உலகினர்; சுகம் உற—சுகத்தையடையவேண்டும், மானம் இல்பவம்—அவர்கள் அளவில்லாத பாவங்களைச் செய்வதால், நரகுஉற— நரகத்தையடைய வேண்டும், (அங்ஙனமிருக்க, புரியினும்-அசுரர்கள் தீமையையே செய்தாலும்;) சங்கிராமம்—போர், சாய்த்து —கொன்று, தானம் உய்க்குதி—மேலான சுவர்க்கத்தில் செலுத்துகின்றாய், தேவி பகைவர்களிடமும் கருணையுடையவள் என்பதைப் புலப்படுத்தும்.

21. அடலை—சாம்பல், பொழி திறம்—சொரிவது, அகிதர்—தீச்செயல் புரிபவர், ஏ—அம்பு, மேல் உலகு—மேன்மையான சுவர்க்கம் முதலியன.

22 படியில உரு—சமானமில்லாத உன் அழகிய வடிவம், ஒப்பில—சமானமில்லாதவை.

23. சாயகம்—அம்பு, செம்மை—தூய்மை, சேரலர்—பகைவர், எம்மையும்—எங்களிடத்தும், உளது—ஒப்பவுள்ளது.

24. சம்மதர்—மதிக்கப்படுவார், சீர்த்தனம்—சிறந்த செல்வம்.

25. நட்டவர்—உன்னிடம் அன்பு வைப்பவர், பெட்ட—விரும்பத்தகுந்த, மனை—மனைவி, தன்னியர்—புண்ணியசாலிகள்.

26. பீதன்மார்—பயமுடையவர், இன்பினர்—சுகமுடையவர், தூ—தூய்மை.

27. மங்கல ரூபம்—அழகிய வடிவம், ஒன்னலர்—பகைவர், அளியாய்—கருணையுடையவளாய், கர்க்கசம்—கடுமை, நீக்கிடுவாய்—கொல்வாய்.

28. திதி—பாதுகாவல், ஏன்று—தாங்கி, தீனர்—பலம் குறைந்தவர்.

29. கண்டைநாதம்—மணியொலி, நாண்ஒலி—வில் நாண் கயிற்றின் சப்தம், கொட்பு—சுழற்சி, சௌமியம்—சாந்தவுருவம், பாலிக்க—எங்களைக் காப்பாற்றட்டும்.

30. மாஉரு—பெரியவடிவம், கோபுவி—வானிலும் பூமியிலுமுள்ளவர்களை, திதிக்க—காப்பாற்றுக.

31. மருத்துவன்—இந்திரன், நந்தனம்—தேவர்களின் உத்தியான வனம், லேபனம்—சந்தன முதலிய வற்றின் பூச்சு.

33. புண்டரீகம் — தாமரை, வதனி — முகமுடையவள், போதம்—நினைவு.

35. இயைந்து—பெற்று, நிலத்து இந்திர—பூமிக்குத் தலைவனே.

36. கவுரி — பார்வதி, களேபரம்—உடம்பு, சாதை — தோன்றியவள், கழிந்த சௌரியம் — மிகுந்தவீரம், பகவதி—

தேவி, சாதம்—பிறப்பு, சாதை—பிறந்தவள், சாதன் ஆண்பால் குறங்குச் சாதன், 12அத். 13 செய்யுள் காண்க. சத்தியின் அனந்த பேதங்களுள் மாயையும் ஒன்றுதலின் மாயையாம் பகவதி என்றார். "விமலனுக்கோர் சத்தியாய் மாயை மயக்கமும் செய்யும்" சிவஞான சித்தியார்.

## 5-வது அத்தியாயம்

1. புட்கரம்—புட்கரத்தீவு, அயுதம்—ஆயிரம், மாஆண்டு—தேவவருடங்கள், வரன்—பிரமதேவன்.

2. ஆகண்டலன் — இந்திரன், அனலி—சூரியன், கௌபேரம் — குபேரனுடைய அரசு, ஆக்கினேயம் — அக்கினியின் அரசு, யாமியம்—யமனது அரசு, வாருணம்—வருணனரசு, கிருதுபாகம்—அவிர்ப்பாகங்கள், அடக்கி—தன் கீழ்ப்படுத்தி, புரி—பட்டணங்கள்.

3. பலி—பிச்சை, கடம்—உடம்பு, அவசம்—மயக்கம்.

4. தானமுளார் — தேவர்கள், எல்லை—காலம், சிவை—சிவசத்தி, ஓர்ந்தனர்—நினைத்தார்.

5. தாதா—பிரமன், ஈ—கொடுக்கின்ற, சிவை—நன்மை தருபவள், பிரகிருதி—படைப்புச் சக்தி, பத்திரை—காத்தல்சக்தி, கௌரி—வெண்மை கலந்த செந்நிறமுடையவள், உருத்ரீ—அழித்தற் சக்தி, நம—வணக்கம்.

6. தாத்ரி—உலகைத் தரித்திருப்பவள், நைருதி—நிருதி என்னும் அசுரனாகிய திக்பாலகனது சக்தி; அசுர சக்தி, செல்வி—லட்சுமி, துர்க்கை—சிரப்பட்டுத் தெரிந்துகொள்ளத்தகுந்தவள், சர்வாணி—சிவசக்தி, துர்க்கபாரை—சங்கடத்திலிருந்து கரையேற்றுபவள்.

7. சாரை—பலமுடையவள், கியாதி—பிரசித்தி, கிருட்டினி—கருப்புவர்ண முடையவள், தாமிரை—கருமைகலந்த செந்நிறமுடையவள், சௌமி—சாந்தமுடையவள்; அதி ரௌத்ரி—மிகுந்த கோபமுடையவள், உலகப்பிரதிட்டை — உலகங்களைத் தன்னிடத்தே தாபித்திருப்பவள், பூதிப்பிரதை—ஐசுவரியங்களைக் கொடுப்பவள், பூதி—ஐசுவரிய ரூப மானவள்.

8. அரிதன் மாயை—விஷ்ணுமாயை, தேவி—தேவசக்தி, சேதன ரூபிணி—அறிவுவடிவமுடையவள்.

11. சிரத்தை — வேதாகமப் பொருள்களில் நம்பிக்கை, இலச்சை — வெட்கம், மேதை—நூல்களையறிந்து அவற்றைக் காப்பாற்றக் கூடிய சக்தியுருவம், சுவாகை—ஓமம் செய்யும் அவிசைத்தேவர்கள் அடையுமாறு செய்பவள்.

12. சுவதை—பிதுர் தர்ப்பண காலங்களில் உச்சரிக்கப்படு பவள், குதை—பசி, துயில்—நித்திரை, பிரபை—வெளிச்சம்.

13. பத்தி—தேவதைகளிடம் விசுவாசம், காந்தி-பிறனுக்கு அபகாரம் செய்யாமை, நீதி—நியாயம், சாயை—நிழல்,

14, ரதி — சுகவடிவினள், மிருதி—நினைவுருமானவள், திருத்தி—திருப்தி, புட்டி—செழுமை (புஷ்டி).

15. துட்டி—மகிழ்ச்சி, சாந்தி—மனவடக்கம், அரியின் பிரியை—இலக்குமி, தனதானிய சம்பத்து, திருட்டிணை—தன தல்லாததைத் தனதாக்கிக்கொள்ள வேண்டுமென்ற ஆசை.

16. இம்சை—வதைபுருவம், சக்தி—சடமும் சித்துமாகிய பொருள்களிலுள்ள சக்தி, வியாத்தி—வியாபித்தல், சாதி—பசு பட்சி முதலியவற்றின் சாதியுருவம்.

17. விருத்தியுரு — சீவன வடிவம், பிழைப்புருவம், அன்னை—மாதா, பிராந்தி—ஒன்றை மற்றொன்றாய் அறிவது, பர மானந்தம்—பேரின்பம்.

18. விருத்தி—பாக்கியம், கிரியை—தொழில், உத்தியோக பத்தினி.

19 இந்தியம்—ஞானேந்திரியங்கள், அதிட்டாத்திரி-நிலைக் களனாய் இருப்பவள், சித்சத்தி—ஞானசக்தி, மாபத்திரை—சிறந்த மங்கள வடிவமுடையவள், பகவதி—ஐசுவரிய முடையவள், பதயு களம்—இரண்டு பாதங்கள்.

21. அமரவாபகை—தேவகங்கை, கிரிசை—பார்வதி.

22. பறம்பின் சுதை—இமயமலையின் புதல்வி, உடற் கோசம்—சரீரத்தின் மேற்போர்வை, கௌசிகி—சரீர கோசத்தி லுதித்தவள், பனிமாதிரம்—இமயமலை; கிருட்டிணை—கிருஷ்ண சக்தி, பவமுறும்—தோன்றுவாள்.

23. கன்னி—பார்வதி, விண்டாண்டு—ஊசல், இச்சொல் காற்றில் அசையதலையுடையது என்றும் விண்ணில் தாண்டுத லுடையது என்றும் காரணப் பொருள்படும்.

24. அல்லோன் கலை—சந்திரனுடைய கலைகளின் அள வினவாகிய பதினாறு என்னும், சமையில்—வருடங்களில், சில வாணியம் நண்ணுறல் இல்லா— சிலநாள் கூடப்பெறாத, அன்ன பருவம்—பதினாறுண்டுப்பிராயம், அவனி—இமய மலையின் கீழுள்ள பூமி.

25. மந்தமுறுவல்—புன்சிரிப்பு, 'இறும்பூது—ஆச்சரியம், புரி—சும்பநிசும்பருடைய ராசதானி நகரம், அம்புயம் நேர்வந்த—தாமரை மலர் போன்ற, திருக்குச்சுந்தரி—கண்களுடைய அழகி.

26. சுவணம்—பொன், பேர்விண்டாண்டில்—பெருமை பொருந்திய ஊசலில், மணிசேர் உரு—அழகிய வடிவம்.

27 பன்னகி—நாகவுலகத்துப் பெண், தாதை—தந்தை, உறவு—உறவினர், தோன்றினர்—உடன்பிறந்தோர், காப்போர்—காவலர், விசனம்—சனமில்லாதவிடம்.

28. புழைக்கைமான்—யானை, அசுவம்—குதிரை, உச்சைச்சிரம்—உச்சைச்சிரவம், தகை ஆர்—பெருமை பொருந்திய அயம்—குதிரை, கோயில்—அரண்மனை.

29. அஞ்சம் "இசையானம் —அன்னங்கள் பூட்டப்பெற்ற விமானம்", "அன்னத்தேரேறி அயன்வலப்பாற்கைபோத" ஆதியுலா. கிஞ்சற்கினி என்னும் பெயரையுடையது, பங்கயத் தொங்கல்—தாமரைப் பூமாலை, பயமார் அத்தி—பாற்கடல்.

30. ஈழம் வானம் சத்திரம்—பொன்னைச் சொரியும் மேகம்போன்ற சீலமுள்ள குடை, பிரசாபதி—தட்சன், வையம்—தேர், தண்டதரன்—இயமன், உத்கிராந்திதை—உயிரை அப கரிப்பதாகிய இயமனிடத்துள்ள சக்தி, ஆழி அரசன்—வருணன், பாசம்—பாசாயுதம்.

31. வன்னி—அக்கினி, தழல் சௌசம் சுத்தவாசம்-அக்னி சௌசம் என்னும் பெயருடைய தூய்மையான ஆடைகள், நெருப் பினால் தூய்மை செய்யப்பெற்ற ஆடைகள் எனப்பொருளுரைத் தலுமொன்று.

32. அங்கனை — பெண், பறைந்தோம் — சொன்னோம், தீரம்—தைரியம்.

35. போகில்பகவன்—தாமரை மலரிலுள்ள பிரமன், புத்தேளிர்—தேவர், ஆத்தன் உரை—வேதம்; கடவுள் வாக்கு.

36. யாகபாகம்—அவிர்ப்பாகம், துரகம்—உச்சைச்சிரவம், குதிரை.

37. அரதனம்—இரத்நங்கள், புசிப்போர்—அனுபவிப்போர், அனுசன்—தம்பி; நிசும்பன்.

38 வாணி—வார்த்தை, தர்ப்பம் இடித்தோன்—எனது கர்வத்தைப்போக்கியவன்.

39. கமை—பொறுமை, சுகளன்—சுக்ரீவன், (நல்ல கழுத்தையுடையவன்)

40. வேய்—தூதன்.

41. சுதை—அமுதம்.

## 6-வது அத்தியாயம்.

1. தேவவரி—தேவர்களின் பகைவன்.

2. கறுத்த — கோபித்த, பறப்பு — விரைவு, நேர்க— கொண்டுவருக.

3. அளித்திட—காப்பாற்ற, நேரினும்—எதிர்த்தாலும், தனுவின்கான்முளையோர்—அசுரர்கள்.

6. வழங்கினுள்—சிலசொற்களைக் கூறினுள்.

7. தானை—சேனை, ஆட்டம் உற்று—போர் செய்து, ஈர்த்து—இழுத்து, நீட்ட—நீ கொடுப்பதற்கு.

8. உற்றமொழி—வந்தசொல், உம் காரம்—உம் என்று உரப்புதல்.

9. அடலை—சாம்பல், நவியம்—கோடாலி, மழுவுமாம், குயத்தாள்—தனமுடையவள், கோளரி—தேவியின் சிங்கம்.

10. வாகு—தோள், பலம், வத்திரம்—முகம், உகிர்—நகம், சேகு—பலம், கேசு கேழ்—கழுதையை ஒப்பாகின்ற.

11. சேர்த்தற்கு—என்னிடம் சேர்த்துதற்கு, சொக்கு—அழகு, உய்ப்பீர்—கொண்டு வருவீர்

12. வனிதை—தேவி, வயப்போத்து—சிங்கம், மாதர்—காதல், குழலி—கூந்தலுடையவள்.

13. பரிச்சேதம்—அத்தியாயம், பூர்ணம்—நிறைவுற்றது, சத்தம்—ஏழாவதுஅத்தியாயம்.

## 7-வது அத்தியாயம்.

1. அனிகம் — சேனை, சைலஇந்த்ரன் — இமயமலை, கோணை — வலிமை, சுவணம் மாசேர்கோடு—பொன்மயமான பெருமை பொருந்திய சிகரம், சீயம்வெந்—சிங்கத்தின் முதுகு, ஏண்—பெருமை, யாசம்—சிரிப்பு.

2. துண்டம் — முகம், காளம் உருவம் — கருமையான நிறம்.

3. பிருகுடி—புருவம், இனையள்—தேவியின், பாலம்—நெற்றி, கராளவதனம்—கருநிறமான முகம், அசி—வாள், கட்டங்கம்—தண்டு, விழுக்கின்முண்டமாலை—கொழுப்பினையுடைய மனிதரின் சிரமாலை.

4. விபுலம்—விசாலம், வதனி—முகமுடையவள். சஞ்சலம் சிருவை—அசைகின்ற நாவினையுடையவள், சொல்மா—சொல்லப்படுகின்ற பெருமை, சகளம் விந்துவில் சேர்சோணம்—மாயையின் உருவமுடைய இரத்தபிந்துவினிடத்திற் பொருந்திய செந்நிறத்தையும், கயம்நிகர் அக்கம்—தடாகம்போன்ற ஆழத்தையுமுடைய கண்கள், தந்தி—யானைகள், யுகளநான்கு——எட்டு, உஞற்றும்—செய்கின்ற,

ஸ்ரீ சக்கரத்தில் உள்ள திரிகோணத்தில் சுக்கிலம் சோணிதம் (இரத்த) மிசிரம் என்னும் மூன்று பிந்துக்கள் உள்ளன. இவற்றுள் மாயையுருவமாயிருப்பது இரத்தபிந்துவாதலின் சகளவிந்து என்பதற்கு மாயைவடிவமாகிய இரத்தபிந்துவெனப் பொருள் உரைக்கப்பட்டது. சகளம்—மாயாரூபம், இரத்தபிந்து மிகவும் செந்நிறமுடையது.

5. கண்டை—மணி, கும்பி—யானை, கண்டகர்—அசுரவீரர்.

6. கொய்உளை — கொய்தபுறமயிர், குந்தம் — குதிரை, வையம்—தேர், வலவர்—தேர்ப்பாகர், எய்யுற்ற—அம்பு எய்த, முண்டம்—தலை, கசம்—மயிர், கந்தரம்—கழுத்து.

7. அடி—கால், உரம்—மார்பு, மர்த்தனம்—நசுக்குதல், நாட்டம்—வாள்.

8. கட்டங்கம் — குண்டுத்தடி, தவர்வணக்கி — வில்லை வளைத்து.

9. கமலத்தோழன் விசயங்கள்—சூரிய மண்டலங்கள், மா—பெருமை, சலதரம்—மேகம்.

10. அம்மை—காளி, யாசம்—சிரிப்பு, நாந்தகம்—வாள், கேசம்—தலைமயிர், நவிர்—வாள், காதி—கொன்று.

13. புரை—ஒப்பு, கடந்தமை—வென்றமை, பூ—பூமி.

## 8-வது அத்தியாயம்.

1. பதாகினி—சேனை.

2. மொய்க்க—திரண்டு வருக, கம்பு—கம்பு என்னும் குலம்.

3. தௌமிரன்மார்—தூமிர வம்சியன்மார், குலம்சதம்—நூறுகுலம், சங்கிராமம்—போர்.

4. அவ்வை—தேவி, அயனம்—வழி, கவ்வைமிக்கிட—துன்பங்கள் மிகுவதற்கு, ஓரிச்சாலம்—நரிக்கூட்டம்.

5. இறை—விரைவு, தன்னம்—சிறிது, வார்தவர் வடம்—நீளமான வில்லின் கயிற்றிலிருந்து, ஒலி—குணத்தொனி.

6. மதுபதி—காளி, சும்மை—பேரொலி, தேவிமணி முதலியவற்றின் சப்தங்களால் காளியின் பெரிய ஆரவாரத்தை அடங்கும்படி செய்தாள். கேசரி—சிங்கம், கோளண்விதி—பிரமன், கோ—கண், அரீசன்—மால்பிரமன், வலாரி—இந்திரன், விசாகன்—முருகன்.

7. உதயம்—சிறப்பு, முன்னினர்—நினைத்தவர்களாய், மெய்யில்—தம் உடம்பிலிருந்து, வீரியமாதர்—வீரமுடைய சக்திகளை வெளிவரச்செய்து, தந்தார்—தேவிக்குத்தந்தார்கள்.

8. புலவர்காயம் — தேவர்களின் உடம்பு, அக்கதந்து—அட்சசூத்திரம்; பதுமமாலை, அஞ்சயானம்—அன்னவாகனம்.

9. அயன்வலி — பிரமசக்தியாகிய. இறல் — எருது, பாந்தள்—பாம்பு, இந்துவின் துணி—சந்திரகண்டம்.

10. சிகாவளம் — மயில், விண்டுநிமலை — விஷ்ணுசக்தி, ஆழி—சக்கரம், கம்பு—சங்கு, கதை—தண்டு, சார்ங்கம்—வில், அசி—வாள்.

11. மகம்—யாகத்தில் தோன்றிய, கிடியுருமாது—வராக முகமுடையவள், வெண்டந்தி—ஐராவதயானை, தாலம்—பூமி; சசி—இந்திர சக்தி, தசம்சதநயனி—ஆயிரம் கண்களையுடையவள்.

12. மொய் — போர்க்களம், முருக்க — அழிக்குமாறு, ஒலிஓரி—பேரொலியையுடைய நரிகள், அனையாள்—சண்டிகை.

13. பாகசாதனன்—இந்திரன், சூகரம்—பன்றி, ஆகுலத்தர்-வியாகுலமடைந்தவர்.

14. அரி — இந்திரன், அவி—வேள்வியுணவு, அரம் — பாதாள லோகம்.

15 சண்டிசிவைகள்—சண்டிகையிடமுள்ள நரிகள், சாடரம்—வயிறு, அம்மை—தேவி, சிவனைத்தூதனாக ஏவியதால் சிவதூதி எனப் பெயர் பெற்றாள்.

16. தண்ணம்—மழு.

17. தவர் பொழி—வில்லில் சொரிகின்ற, தாணு சக்தி—சிவ சக்தி; சண்டிகை.

18. கற்கி—குதிரை, தேரர்—தேர்வீரர்; நாட்டம்—வாள், விளித்து—கொன்று, ஊ—மாமிசம்.

19. இது முதல் ஏழு கவிகள் பிரமாணி முதலிய சக்திகளின் போர் கூறுவன, அயன் இல்—பிரமாணி, மந்திர பூதம்—மந்திரித்தலைப் பொருந்திய, வன்னிசம்—நீர், நெருப்பிலிருந்து தோன்றுவது "மேவருகனலில் தோன்றும் வண்ண வொண் கமலம்" (கந்-புரா) பரித்திறல்—சக்கரத்தின் வலிமை, சக்தி—வேல்.

20. பன்றியாகி—வராகி, தசனம்—பல், ஆகவம்—போர்; உகிர்—நகங்கள்.

21. சண்டம்-மிகுதி, மோகம் மண்டி—மயக்கமுற்று, பகினி—தங்கை.

22. தூவல்—ஒரு துளி, ஆண்டு—அவ்விடத்திலிருந்து.

23. அனையன் — இரத்தத்திலுண்டாகிய இரத்தபீசன், சோணிதபிந்து—இரத்தத்தின் ஒரு துளி, மங்கை—பூமி, சனனம்—பிறத்தல், சதகோடி—வச்சிராயுதம், தொட்டாள்—அவன்மேல் செலுத்தினாள்.

24. பகை—பகைவன்,இரத்தபீசன். அற—அறுபட்டதால், அமரவாபகை—ஆகாய கங்கை, அமரம் முன்—போர்க்களத்தில்; அபரத்தினில்—பின்பு தோன்றிய, அமர—நிறைய, தைத்தியர்—மற்ற அசுரர்கள்.

25. திதி புத்திரர் — இரத்தபீசாசுரர், அட்டம் — எட்டு; அனைமார்—ஏழு மாதரும் காளியுமாகிய எண்மர்.

26. மாதர்—எட்டுச் சக்திகள், நக்கன் சக்தி; சண்டிகை.

27. இரத்தபிந்து — அசுரருடம்பிலிருந்து விழும் இரத்தத்தின் துளிகள்.

28. என்னில்—எதற்காகவென்றால், கன்னல்—நாழிகை.

29. சித்சுகவுருவி—சிதானந்த வடிவினள்.

30. குருதி சோடித்து—உடம்பிலுள்ள இரத்தம் வற்றி; குருதி பீசக்குழு—இரத்த பீசர்களின் கூட்டம்.

31. சேடம்—எஞ்சிய அத்தியாயங்கள்.

## 9-வது அத்தியாயம்.

1. தத்தை நேர்—கிளிமொழியை ஒப்பு.
2. முகம்—வாய், அள்—காது, உருவகம் காண்க.
4. கோதண்டம்—வில்.

5. ஏ—அம்பு, தோல்—கேடயம், அசி—வாள்; புனிதை—தேவி, கம்—தலை, எற்ற—அடிக்க, சுரப்பிரம்—அரிவாள், கொடுவாள்—சும்பனுடைய கொடுமையாகிய வாள், அதள்—கேடயம், சுரப்பிரம்—இதன் தற்பவம் சுரப்பிரம்.

6. சத்தி—வேல், ஏவிட—செலுத்த, முட்டிபாதம்—கைப்பிடி.

7. பரசு—மழு, குதை — கூர்மை, குழுச்சரம் — கூட்டமாகிய அம்பு.

10. ஆசை—திக்குகள், அரவு—ஒலி, தேசுகள்—பலங்கள், மூசும்—மொய்க்கின்ற, வாரணம்—யானை, உருக்கியது—உருகியொழுகும்படி செய்தது. சிங்கத்தின் கருச்சனையால் யானை மதமழியும், யானை மதத்தில் வண்டுகள் மொய்க்கும்.

11. அமரி—காளி, குதித்து—துள்ளிக்கிளம்பி, எற்றலும்—பூமியை அடிக்கவும், முன்னுள விசைகள் — முன்புண்டாகிய கண்டை சிங்கம் முதலியவற்றின் பேரொலிகள், மடிதல்—அடங்குதல்.

12. அசிவம்—கேடுதருவது, நிசிசரக்குழு—அசுரர் கூட்டம், சுசி—நெருப்பு, பிசிதம்—மாமிசம்.

14. வன்னி கூடம்—நெருப்புத்திரள், சுவாலை—சொலிப்பு, மேவார்—பகைவர், சார—தன் சமீபம் வரவும், மகோற்கை—மகோல்கா என்னும் பெயருடைய வேல், கொள்ளிக்கட்டை என்னலுமுண்டு.

15. சிங்க நாதம்—சிங்கத்தின் கர்ச்சனை போலச் செய்யும் தொனி, ஒருவகை வாத்தியமுமாம், அபசயம்—வேல் அழிந்ததால் தனக்கு ஏற்பட்ட பலவீனம், குயின்—மேகம்.

17. கம்பம்—நடுக்கம், ககுபம்—திக்கு, பரிதி—சூரியன்.

18. கைசரி—சிங்கம், புரிந்து—மறைத்து, வாகு—தோள்கள், அயுதம்—பதினாயிரம், ஒளி—வரிசை.

19. மைந்து அசி—வலிமை பொருந்திய வாள், அன்னவேதி—அதே திரிசூலம்.

20. பின்னம் ஆம்—பிளந்த, உளத்தலம்—இருதயம்.

21. தரம்செய்—மேன்மை பொருந்திய, அரி—சிங்கம், தந்தம்—பல்.

22. வரன் இல்—மகேசுவரி, மந்திர பூதவாரி—பிரணவ மந்திர சம்பந்தமுடைய தீர்த்தம், பன்னி—மனைவி.

23. கோலி—வராகி, துண்டம்—மூக்கில், காதத்தால்—தாக்குவதனால், மருத்துவன்—இந்திரன், நங்கை—இந்திர சக்தி.

## 10-வது அத்தியாயம்.

1. தன்பின்—தன் தம்பி, என்பு—உடம்பு, எறுழோன்—வலியோன்.

2. மற்றையோர்—பிரமாணி முதலிய வேறு சக்திகள், வலித்துணை—பலத்தின் உதவி, வலி—பலம், அற்றம்—குறைவு.

3. இனையர்—இந்தச் சக்திகள், என்பூதிகள்—எனது சம்பந்தமுடையவர், சிகி—மயில்.

4. இலயம்—அடங்குதல், ஏகாகினி—ஒரே வடிவமுடையவள்.

6. தாழ்ந்தான்—சும்பன், கோரம்—உக்கிரம், விளிப்ப—அழிக்கவும்.

7. தனு—உடம்பு, ஆவரணம்—மூடி. சாபம்—வில், ஏ—அம்பு.

9. இரதம்—தேர், மா—குதிரை, சூதன்—தேர்ப்பாகன்.

10. முற்கரம்—சம்மட்டி வடிவ முள்ளது, மட்டிப்படைக் கல மென்பர், தன முட்டி—தன்னுடைய விரல் முடக்கின கைகள்.

உரத்திடை—மார்பில், மேவார்—பகைவர், தலம்—விரல் விரித்த கைகள், உறுத்த—அழுத்த, புவிப் பதித்தவன்—பூமியில் பதிந்த சும்பன். அடலை—போர்க்களம்.

12. அம்பரம்—வானம், வாகுப்போர்—மற்போர், பதம்—நேரம், மண் நண்ண—பூமியை யடையும்படி.

13. முட்டி—விரல் முடக்கிய கை, பிருதிவி-மண், அத்திரி—மலை, தீவு—கடலினுட்டீவுகள், அத்தி—கடல்.

14. பவனம்—பூமி.

16. விண்டலம்—வானம், நிமலம்—தூய்மை, உற்கை—கொள்ளிக்கட்டை, மார்க்கம் — இயல்பாகச் செல்லும் வழி, சுவந்து—நல்ல காற்று.

17. ககுபம்—திக்கு, உற்பதப் பேரொலி—பூகம்ப முதலியவற்றால் வரும் உற்பாதமாகிய பேரொலிகள்.

## 11-வது அத்தியாயம்.

1. குறைந்து — கொல்லப்பட்டு, குலிசன் — இந்திரன், வன்னி—அக்கினி.

2. அசரம் — நிலைபெயராதது, சரம்—நிலை பெயர்வது, பூ—பூமி, சீவனம்—பிழைப்பு, அப்பு—நீர்.

3. அனந்த வீரியை—அளவிடப்படாத வீர முடையவளே, அரிமாயா—விஷ்ணு மாயை, பரமை—மேலானவள், கவிகள்—புலவர்கள், விஞ்ஞானம்—மேலான அறிவு.

4. நாரியர்—பெண்கள், வியாபி—பரந்திருப்பவள்—சனவுள்ளம்—மக்களின் உள்ளம், சுவர்க்கம்—பொன்னுலகம், அபவருக்கம்—முக்தி.

5. காட்டை 13 நிமிடம் கொண்டது. கலை முப்பது காட்டை கொண்டது. உரு—காலவடிவம், பரிணமம்—மாறுபாடு, விசுவம்—உலகம், மங்கலப்பிரதை—நன்மை கொடுப்பவள்.

6. பரை—பரா என்னும் சப்தத்திற்குரியவள், சகலேசை—எல்லாவிதமான காரிய சாமர்த்தியமுடையவள், சநாதனீ — எப்போதுமிருப்பவளே, வரை—வரம் கொடுப்பவள்.

7. குணவாசிரயம்—சிறந்த குணங்களுக்கு இருப்பிடமானவள், அகுணம்—குணமின்மை, ஆர்த்தி—துன்பம், சருவபூதை—ஐம்பூதங்களாயிருப்பவள், நாராயணி—நாராயணனுக்குச் சகோதரியாயிருப்பவள்.

8. அஞ்சம்—அன்னம், உறு—பொருந்திய, கமண்டல வாரி—கமண்டலநீர், பிரமாணி—சரசுவதி.

9 சே—எருது, சிகண்டியிறகு—மயிலிறகை, கொடி—கொடியாகவுடையவள், அனகை—குற்றமில்லாதவள், தானம்—இடம், செய—வெல்க.

10. விநதை சிறுவன்—கருடன், வெர்—முதுகு, மாநேமி சேர்த்தாய்-பெரிய சக்கரப்படையைத் தரித்துள்ளவளே, சிவை—நன்மையுடையவள், பூமி.....தேவி—வராகசக்தி, பன்றியுருவினள்—வராகவடிவமுடையவராகி.

12. ஐந்திரி—இந்திரசக்தி, கிரிடினி—கிரீடம் தரித்துள்ளவள், மகாராவை—பெருஞ்சப்தமுடையவள்.

14. அகிலமங்கலங்கள்—எல்லாவிதமான அழகுகளையும், மங்கலத்தன்மை—நன்மையாகிய குணங்களை, உருவி—வடிவமாகவுடையவள், நியதை—ஊழின் உருவமானவள், ஈசை—வலிமையுடையவள், கௌணம்—குணமுதலிய சம்பந்தங்களால் பொருளுணர்த்தும் சொல், முக்கியம் நேரே பொருளுணர்த்தும் சொல். சிங்கம் கருச்சிக்கின்றது இதில் சிங்கம் முக்கிய மொழி. இவன் சிங்கக்குட்டி இதில் சிங்கக்குட்டி கௌணமொழி.

15. செய்யாள்—இலக்குமி, சுவதை-சுவதாதேவி, துருவை-நிலையாயிருப்பவள், சிரத்தை—ஆஸ்திகபுத்தி, மாராத்ரி—பிரளய சொரூபமுடையவள், புட்டி—பலம்; செழுமை, மேதை—விசேடபுத்தி, மாஅவித்தை—பெரிய அஞ்ஞான வடிவினள், பூதி—சத்துவகுணப் பிரதானமுடையவள், ரசசி—இராசதகுணமுடையவள், தாமசி—தாமதகுண முடையவள்.

16. சருவரூபம்—எல்லாப்பொருள்களின் உருவம், சருவசக்தி—சடசேதனப் பொருள்கள் எல்லாவற்றினுடைய சக்திரூபமாயிருப்பவள், ஓவநீக்கி—ஒழியச்செய்து.

17. தேசு—கீர்த்தி வீரம்பலம் ஆகிய தேசுகள், சகத்தின்—உலகத்தை, ஒலியால் நிறைகண்டை—சப்தத்தால் நிறையும்படி செய்கின்ற உனது மணியானது.

18. இதயம் தசைசேறு—இருதயத்திலுள்ள மாமிசமாகிய சேறு, காத்தியாயனி—கத்தியயனமுனி கோத்திரத்தில் பிறந்தவள்.

19. இட்டகாமியம் — விரும்பியவைகளை விரும்பியபடியே பெறுதல், ஆசிரிதர்—சரண்புகுந்தவர், ஓவ—ஒழிக.

20. ஞானநூல்கள் — தத்துவஞான சாத்திரங்கள், மனுநூல்—தருமசாத்திரங்கள், வேதத்துட் பொருள்கள்—உபநிடதங்கள், செயல் காண்டம்—கருமகாண்ட வாக்கியங்கள், மமதைக் குழி — அபிமானமாகிய பள்ளம், மானமுடையவள் — வலிமையுள்ளவள்.

21. ஒல்லை—விரைவு, அரி—பகைவர், அகம்—பாவம், உத்பாதபாகசம் — உத்பாதங்களுடைய பலத்தைக் கொடுக்கும் காலத்தால் தோன்றுவது, உத்பாதம்—பின்னிகழும் தீமைகளை முன் அறிவிப்பது, மாரி—மகாமாரி என்னும் நோய்.

22. மோகம்—உண்மைப் பொருளின் உருவம் மறைந்து அது வேறு பொருளின் உருவமாய்த்தோற்றுதல், ஒளி—ஞானவொளி, நாகம்—பாம்பு, யானையுமாம், அரி—பகைவர், தாவம்—காட்டுத்தீ, அவண்—அவ்வவ்விடங்கள், பாலித்து—காப்பாற்றி.

23. விசுவம்—உலகம், பாலி—காப்பாற்றுபவள், விசுவாசிரயர்கள்—உலகைக்காப்பாற்றுகிறவர்கள்.

26. இறை—விரைவு, அருளொடு புரத்தல்—அருளினாற் காப்பாற்றுதல், உத்தரம்—பதில், அந்தரம் வைவசுத மனுவந்தரம்; இப்பொழுது நிகழும் ஏழாவது மனுவந்தரம்.

27. மன்னுவார்—வேறு அசுரராய்த் தோன்றுவார், தெற—அழிக்க, பின்னஞ்செய்து—அழித்து, விந்தப்பிறங்கல்—விந்திய மலை, "விந்தியாசலவாசினி".

28. வைப்பிரசித்தர்—விப்பிரசித்தவமிசத்திற் பிறந்த அசுரர்கள், அட்டு — கொன்று, ரௌத்திரை—கோபமுடையவள், புசிப்பல்—புசிப்பேன், தந்தம்—பல், இரத்ததந்திகை—இரத்தத்தால் மாதுளம்பூப்போலச் சிவந்து தோன்றும் பற்களையுடையவள்.

29. இவண்—இவ்வுலகம், சதம்சமை—நூறு வருடங்கள், வருடம்—மழை, அறவர்—முனிவர், அயோநிசை—யோனியிற் பிறவாதவள், சுக்கில சுரோணிதக் கலப்பின்றித் தர்மவிசேடத்தோடு கூடிய பரமாணுவிலிருந்துண்டாகியவள்.

30. நூறு நோக்குறு நயனத்தி—நூறு கண்களையுடையவள்; சதாட்சி, நொடிப்பர்—சொல்லுவர், ஆவிருட்டி—மழை, ஆர்க்கும் என்மெய்—நிறைந்துள்ள என் உடம்பில், சாகம்—பச்சிலை, பரித்து—தாங்கி, சாகம்பரி—பச்சிலை முதலியவைகளைத் தாங்கிக்காப்பவள்.

31. அர்க்கசன்—யமன், பீமம் ஆம் அங்கம்—பயங்கரத்தைச் செய்யும் உடம்பு, பனிப்பதலை—இமயமலை, பொலிவு—மிகுதி; கூட்டம், அறவர்—முனிவர்.

32. அந்தணர்-முனிவர், பீமதேவி—பயங்கரமான தோற்றமுடையவள், வகுப்பர்—சொல்வர், பிராமரம்—வண்டு, கின்னம்—உபத்திரவம்.

33 பிராமரி—பிராமரம் என்னும் பெயருடைய வண்டுகளால் சூழப்பட்டவள், அரிகள்—பகைவர்கள்.

34. பூபன்—அரசன், துவம்—இரண்டு, தசம்—பத்து.

## 12-வது அத்தியாயம்

4. பன்னான்கு — சதுர்த்தசி, மோகம் — ஞானத்திற்குத் தடையாயுள்ள அஞ்ஞானம், அகம்—பாவம், பாவசவாபத்து—பாவங்களினால் ஏற்படுகிற தீமைகள்.

5. இட்டம் அணுகாமை அடையார்—இஷ்டமான நண்பர்கள் தம்மைச் சேராதிருத்தலை யடையமாட்டார், படனம் செய்வோர்—படிப்பவர்

6. மாமாரி—சனநாசஞ்செய்யுந் தேவதை, உபசர்க்கம்—துன்பம், மூன்றாய்ச்சேரும் உற்பாதம்—தெய்வத்தால் உண்டாகும் இடிவறுமை மழையின்மை முதலியவைகளும், உடம்பிலிருந்துண்டாகும் சுர முதலிய நோய்களும், பேய்பூதம் விலங்கு முதலியவைகளிடத்திருந்துண்டாகும் உபத்திரவங்களுமாம். கோட்டம்—கோயில், திருச்சாறு—திருவிழா.

7. சிரவித்திடின்—கேட்டால், தோற்றபேதம்—அவதாரபேதங்கள், கெடுகனவு—கெட்ட சொப்பனம், சுகனவு—நல்ல சொப்பனம்.

8. சுபத்தின் மார்க்கம்—நன்மைக்கு வழி, செபிக்கில்—உச்சரித்தால், படனம் செய்தால்.

9. பண்ணவர்காள்—தேவர்களே, சரற்காலம் — ஐப்பசி கார்த்திகை மாதங்கள், வருடமுறும் எழில்பூசனை—வருஷபூசை, மாபூசை—நவராத்திரிபூசை.

11. உபசருக்கம்—மகாமாரியின் உபத்திரவங்கள், வெடி செய் மண்ணை — அச்சத்தைத்தருகின்ற பேய், பலி—அன்னம், குசுமம்—மலர், கந்தம்—சந்தனம்.

12. அட்டாங்கம்—நீர், பால், தருப்பை, தயிர், அட்சதை, எள், யவம், வெண்கடுகு. விவிதபோகம்—பலவகையான சுகானுபவங்களையுண்டாக்குதல், வற்சரம்—வருடம், அளி—என்கருணை.

13. அன்ன அளி — அவ்வாறு செய்வதால் உண்டாகும் எனது கருணை, சிரவணம்—கேட்டல், முனியால் சொல்லிய துதிகள் 1 அத். 27, 28, 29 செய்யுட்கள்.

14. சத்தாம் புருடர் — நல்லறிவைப் பெற்றிருக்கின்ற மேலோர், பாலர் உறும் சீற்றப்பீடை—குழந்தைகளையடைகின்ற உக்கிரமாகிய பூதனை முதலிய பாலகிரக பீடைகள், சங்காத பேதம்—மித்திர பேதம், புணர்ப்பு—நட்பு.

15. நிகளம் உற்றிடினும் — விலங்கு பூட்டப்பெற்றாலும், தாவம்—காட்டுத்தீ, வேழம்—யானை.

16. இரணத்திடை—போர்க்களத்தில், அரிகள்—பகைவர்கள், வாதம்—சுழல் காற்று, அம்பி—கப்பல், சத்திரங்கள் ஏற்றிடின்—ஆயுதங்களை உடம்பில் ஏற்றினால்.

17. நள்ளார்—பகைவர், அள்ளார் நயனி—காதுவரையிலும் சென்ற நீண்ட கண்களையுடையவள். (தேவி)

19 கம்பம்—நடுக்கம், பாதாளக்கண்—பாதாளவுலகத்தில், சகமளித்தல்—உலகத்தைப் படைத்தல், அளித்தல்—காத்தல், மோகம்—மயக்கம், வலி—சக்தி.

20. விஞ்ஞானம்—மேலான தத்துவஞானம், சித்தி—காரிய சித்தி, மாகாலம்—பிரளயகாலம், மாமாரியின் உரு—அழித்தற்றொழிலின் வடிவமுடையவள்.

21. கமலை—இலக்குமி, கேட்டை—அலட்சுமி.

22. முனிவேந்தன்—சுமேதசமுனிவன்.

23. சிவம்—நன்மை, குறங்குச்சாதன்—வணிகன், பிரமாவின் தொடையிற் பிறந்தோர் வணிகர், "மன்னுந்தொடையில் வந்துதித்தார் வணிகர்," வாயுசங்கிதை.

## 13-வது அத்தியாயம்.

1. அன்னோன்—வணிகன், விவேகம்—தத்துவஞானம், பின்னம்—கெடுத்தல்.

2. அபவருக்கம்—முத்தியின்பம், சுவர்க்கம்—மறுமையின்பம்.

3. புரி—இராச்சியம், நத்து—சங்கு, நதிப்புளினம்—ஆற்றின் மணல்மேடு, மிருத்திகை—மண், தேவி சூக்கம்—தேவீ சூக்தமந்திரம், தன்னவுணவு—அற்பமான ஆகாரம்.

5. சமை—வருடம்.

6. நொடிப்ப—சொல்ல, பழிச்சி—துதித்து.

7. அகம்—அகங்காரம், மமதை—அபிமானம், மாஃதேவி—விஷ்ணுசக்தி, அனுக்கம்—துன்பம்.

9. மன்றல் ஓதி—தேவி, அரிகள்—பகைவர்கள், பரிதி மனை—சூரியன் மனைவி, அகடு—வயிறு.

13. ஐயாயிரத்தில் ஆறு நீங்கும் பொருவில்கலி—சமானமில்லாத கலியுக சகாப்தம் நாலாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று நான்கு, மிதுனரவி—ஆனிமாதம், மனுயுக் எனும் நாள்—பதினான்காம் நாள், எல்லை ஆனியம்—ஞாயிற்றுக்கிழமை.

18. சாவர்ணிமன்வந்தரத்தின்பால்—சாவர்ணிக மனுவந்தரத்தைப்பற்றிக் கூறும் பகுதியில், புலவர்—அறிஞர்.

தேவிதுணை.

குறிப்புரை முற்றிற்று.

தமிழன் அச்சகம், ஈரோடு.

## பதிப்பாசிரியர்
## பிறரால் வெளியிடச்செய்த பிற நூல்கள்

1. தேவி மான்மியம் முதற்பதிப்பு
2. தாயுமானவர் மடல் மூலமும் குறிப்புரையும்
3. திருக்குறள் காளிங்கருரை—பரிதியுரை
(இவை தருமபுர ஆதீன வெளியீடுகள்)
4. பரத சங்கிரகம் மூலமும்—உரையும்
(அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு)
5. தெய்வங்கள் பெருமாள் சித்திரமடல்
(பெ. தூரன் வெளியீடு)

தேவி மான்மியம் பிரதி வேண்டியவர்கள்
**பதிப்பாசிரியரிடம் பெறலாம்.**

தமிழன் அச்சகம், ஈரோடு.